கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(06.05.2018 - 06 வைகாசி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 183, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

# ஞான ஒளி

ඥාන ඕලි
GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

இன்றைய உலகம் சந்திக்கும் பல்வேறு சவால்களுக்கு படைப்பாற்றல்களுடன் பதிலிறுத்து தங்களது குறிப்பிட்ட திருத்தூதுப் பணியைப் பொதுநிலை நம்பிக்கையாளர்கள் நிறைவேற்றும்படியாக...

திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்





# பத்திரிகையாளர்களுக்கு

## சிறந்த எடுத்துக்காட்டு

## புனித யோசேப்பு

தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பு தகவல் தொடர்புத் துறையில் பணியாற்றுவோருக்கு தன் மௌனம் மற்றும் செவிமடுத்தல் வழியாக நல்ல எடுத்துக்காட்டாக உள்ளார். அமைதி என்பதே தகவல் பரிமாற்றத்தின் முதல் நிபந்தனை. ஏனெனில் மௌனமாக இருப்பதன் வழியாக மட்டுமே மற்றவர்களுக்குச் செவிமடுக்க முடியும் என கடந்த முதலாம் திகதி செவ்வாய்கிழமை மே தினம் அன்று Avvenine என்ற இத்தாலிய கத்தோலிக்க நாளிதழின் உயர்மட்ட அதிகாரிகளை வத்திக்கானில் சந்தித்து இவ்வாறு கூறினார் திருத்தந்தை. அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# கத்தோலிக்கர்களாகிய நாம் முன்மாதிரிகையானவர்களாக அனைத்து மதங்களோடும் ஒற்றுமையாக வாழத் தயாராக உள்ளோம்.



## கர்தினால் அவர்களின் வெசாக் செய்தி

கத்தோலிக்கர்களாக பிறந்து, அதன் படிப்பினைகளுக்கு ஏற்ப வாழக் கிடைப்பது குறித்து நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும். இந்நாட்டின் 2500 வருட வாழ்க்கை கட்டியெழுப்பப்பட்டது புத்த தர்ம கொள்கையின் மீதாகும். இந்நாட்டின் எல்லா மதங்களுக்கும் நிழலாக இருப்பது இவ் புத்த தர்மமே. எம் நாட்டில் வாழும் பௌத்த சகோதர சகோதரிகளுக்கு கத்தோலிக்க மக்கள் சமூகத்தின் சார்பில் கர்தினாலாகிய நான் இனிய வெசாக் பெருவிழா வாழ்த்துக்களைத்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# மே மாதம்

## மாதாவின் மாதம்



### தேவ தாயின்

மாதம் இதுவல்லவோ
இதை சிறப்பாய் கொண்டாடவே
புறப்பட்டு வாரீர் தோழா
தேவதாயின் மாதம்
இதுவல்லவோ!

**இம்மாதம் முழுவதும் உலக அமைதிக்காக செபமாலை செபிப்போம்.**

## வேபூம் தொலைக்காட்சியின் மற்றொரு படி

வேபூம் தொலைக்காட்சியின் மூன்றாம் ஆண்டின் நிறைவை முன்னிட்டு தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்படவுள்ளது. முதல் படியாக தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான ஞாயிறு திருப்பலிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒளிபரப்பப்படுகின்றது. இலங்கை நாட்டின் கத்தோலிக்க மக்களுக்காக இனிவரும் காலங்களில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் செபமாலைத் தியானம் மற்றும் திருமணித்தியாலம் போன்ற நிகழ்ச்சிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**தகவல் : சரத் அதுகோரல**

## கருக்கலைப்பு பற்றிய கருத்தமர்வு

கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயரின் கருக்கலைப்பு பற்றிய அறிவித்தலுக்கமைய, கொழும்பு புதுச்செட்டித்தெரு பங்குதந்தையின் வழிகாட்டலினால் கருக்கலைப்பு பற்றிய கருத்தமர்வு ஒன்று இம்மாதம் 12ம் மற்றும் 13ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. 12ம் திகதி நடைபெறும் கருத்தமர்வானது பொதுமக்களுக்கானது. இக்கருத்தமர்வு 12.05.2018 அன்று மாலை 4.30 மணிக்கு கொழும்பு புதுச்செட்டித்தெரு, புனித வியாகுல மாதா ஆலயத்தில் (பங்கு மண்டபத்தில்) நடைபெறும். விரும்பமுடையவர்கள்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## இறைபதம் அடைந்தனர்



**அருட்தந்தை. J.D.J ஜோன் அந்தோனி நானயக்கார அடிகளார்**

26.04.2018 அன்று காலமானார். இவரது பூதவுடல் 27.04.2018 அன்று மாலை 3.00 மணிக்கு பமுனுகம, புனித சூசையப்பர் ஆலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரது ஆன்மா நித்திய இளைப்பாற்றியில் இளைப்பாற ஞானஒளி பிரார்த்திக்கின்றது.



**அருட்தந்தை பொனி பர்னாந்து புள்ளே அடிகளார்**

20.04.2018 அன்று காலமானார். இரவது பூதவுடல் மக்களின் பார்வைக்காக தெஹிவளை புனித மரியாள் ஆலயத்தில் வைக்கப்பட்டு, மெறட்டுவ புனித செபஸ்தியார் கல்லூரிக்கு கொண்டு செல்லப்பட்டு, திங்கட்கிழமை மணற்சேனையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரது ஆன்மா நித்திய இளைப்பாற்றியில் இளைப்பாற ஞானஒளி பிரார்த்திக்கின்றது.

## குருத்துவ திருநிலைப்படுத்தல் நிகழ்வு – 12.05.2018.



கொழும்பு உயர் மறைமாவட்டத்திலிருந்து இறைவனின் திராட்சைத் தோட்டத்திற்கு புதிய குருக்கள் திருநிலைப் படுத்தப்படுகின்றார்கள். இத்திருநிலைப்படுத்தும் திருப்பலி 12.05.2018 அன்று சனிக்கிழமை கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் காலை 9.00 மணிக்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறுகிறது.

## கத்தோலிக்க அச்சக அறிவித்தல்

கொழும்பு கத்தோலிக்க அச்சகமானது இம்மாதம் 7ம் திகதி மூடப்பட்டிருக்கும் மீண்டும் 8ம் திகதி வழமைபோல் அச்சகம் திறந்திருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

**தகவல்: இயக்குனர்**

**எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகிறார் ஆண்டவர் (தி.பா 47)**



# இறைபதம் அடைந்த அருட்பணி. ரூபன் லெஸ்லி அடிகளார் இறைமக்களுக்கு சிறந்த ஆயனாகத் திகழ்ந்தார்.

## இறுதிச்சடங்கு திருப்பலி மறையுரையில் ஆயர் மேதகு. லெவன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை தெரிவித்தார்.

அருட்தந்தை ஒருவரின் வாழ்க்கையின் பெறுமதியை அவர் வாழ்ந்த ஆண்டுகளில் அல்ல, அவர் செய்த பணியின் மூலமே மதிப்பீடு செய்யலாம். தமது அறுபது வருட வாழ்க்கைப் பயணத்தில் முப்பத்திமூன்று வருடங்கள் கொழும்பு உயர்மாவட்டத்தில் குருவானவராக பல துறைகளில் சேவையாற்றிய அருட்பணி. ரூபன் லெஸ்லி அடிகளாரின் பணியை வார்த்தைகளில் கூறி முடிக்க இயலாது அவர் சிறந்ததொரு ஆயனாகத் திகழ்ந்தார்.

மேலும் அங்கு கூடியிருந்த குருக்கள், துறவிகள் முன்னிலையில் இவ்வாறு தெரிவித்தார். குருவானவர் என்பவர் இறைமக்களுக்கு பணி செய்வதற்காக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் ஆகும். இறைவனுக்கும் இறைமக்களுக்கும் விசுவாசமுள்ள பணியாளராகிய அவர் அனைவருக்கும் அன்பு செலுத்தி, மிகவும் நட்புறவுடன், இரக்கத்துடன் வாழ்ந்த குருவானவராக விளங்கினார்.

எம்மால் காணமுடியாத, எமக்கு விளங்கிக்கொள்ள முடியாத இறைத்திட்டத்தினுள், இறைவன் எமக்குக் காட்டிக் கொடுப்பது, வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும், இறைவனோடு ஆழமான உறவை வளர்த்துக் கொள்வதோடு, வாழ்க்கையின் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்பதனையே ஆகும். அப்போது மரணத்திற்குக் கூட இறைவனோடு எமக்குள்ள தொடர்பை முறியடிக்க முடியாது.

இத்திருப்பலியில் கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்வல் சில்வா ஆண்டகை தலைமை தாங்கியதுடன், சிலாப மறைமாவட்ட ஆயர் மேதகு வெலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை, குருநாகல் மறைமாவட்ட ஆயர் ஹெரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகை, மற்றும் ஓய்வுபெற்ற ஆயர் மேதகு, ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை உள்ளிட்ட குருக்கள், துறவிகள் இந்நிகழ்வில் பங்குகொண்டனர்.

சுகயீனம் காரணமாக இந்நிகழ்வில் கலந்துகொள்ள முடியாமல் போன அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, அவரது வரமின்மை காரணமாக இவ் இறுதிச் சடங்கு திருப்பலியின் போது அறிவிப்பதற்கான துக்கச் செய்தியை அனுப்பி வைத்ததோடு, அதனை துணை ஆயர் மேதகு. மெக்வல் சில்வா ஆண்டகை திருப்பலியின் பின் வாசித்தார்.

அச்செய்தியில், காலஞ்சென்ற அருட்பணி. ரூபன் லெஸ்லி அடிகளாரை கர்தினால் அவர்களது குருமடத்தில் கற்ற காலத்திலிருந்தே நன்று தெரிந்திருந்தார் என்றும், எல்லோருடனும் சுமூகமாக, நட்புறவுடன் பழகக்கூடிய குணமுடைய அவரது மரணமானது தன்னை துயரத்தில் ஆழ்த்தியது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

திருப்பலியின் பின்பு பூதவுடலை அடக்கம் செய்யும் சடங்கை ஓய்வுபெற்ற ஆயர் மேதகு ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகையும், சேமக்காலையில் அடக்கம் செய்யும் சடங்கை ஆயர் மேதகு ஹெரல்ட் அந்தனி ஆண்டகையும் இனிதே நிறைவேற்றி வைத்தனர்.

அருட்பணி. ரூபன் லெஸ்லி அடிகளார் சேவையாற்றிய பங்குகளிலிருந்து வருகை தந்த பங்கு மக்களாலும் அவரது பிறப்பிடமாகிய வெலிகம்பிடிய எனும் அவரது ஊரிலுள்ள மக்களாலும் ஆலயமானது நிரம்பி இருந்தது.

**தகவல் : T. சுனில் பர்னாந்து, ரொஷான் பிரதீப்.**

# இறைபதம் அடைந்த அருட்பணி. பொனி பர்னாந்து புள்ளே அடிகள் தமது பணிக்காலத்தை குருமட மாணவர்களுக்காக முழுமையாக பணியாற்றினார்.

## இவரது இறுதிச்சடங்கு திருப்பலியின் போது அருட்பணி. தயா செல்ட்டன் வெலிகடஆராச்சி அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.



மேலும் அருட்தந்தை கருத்து தெரிவிக்கையில் குருமடத்திலும் பாடசாலைகளிலும் பணி புரிதலானது பங்குகளில் பணி புரிவதைப் போன்று கவர்ச்சிகரமாக இருப்பதில்லை. மிகவும் கடினமான பணிகளாகும். அருட்தந்தை பொனி பர்னாந்துபுள்ளே அவர்கள் இவற்றைப் பொருட்படுத்தாது தமது குருத்துவ வாழ்வில் முழுமையையும் குருமடத்தின் மாணவர்களுக்காகவே அர்ப்பணித்தார் என்பதை குறிப்பிட்டார்.

கொழும்பு புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் இயக்குனர் அருட்பணி. தயா செல்ட்டன் பர்னாந்துபுள்ளே அவர்கள் இக்கருத்துக்களை அவ்-இறுதிச் சடங்கு திருப்பலி நிகழ்த்திய மறையுரையின் போது முன்வைத்தார். அன்னாரின் பூதவுடலானது கடந்த திங்கட்கிழமை வெலிஹேன புனித கயிதானு முனிவரின் தேவாலயத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில், துணை ஆயர் மேதகு. மெக்வல் சில்வா ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை பங்குகொண்டார்கள். குருவானவர்களாகிய எமது குருத்துவப் பணியானது அர்த்தமுள்ளதாக அமைவது இயேசுகிறிஸ்துவின் குருத்துவத்தின் மூலமாகும். எமது அழைப்புக்களானது, குருத்துவ, துறவற, பொதுநிலையினர் எனும் விதத்தில் இருப்பினும் நாம் அனைவரும் அவ் குருத்துவத்திற்கு சாட்சி பகர கடமைப்பட்டுள்ளோம். அருட்தந்தை பொனி அவர்கள் தமது குருத்துவ பணியில் ஆக்கபூர்வமான, உயிரூட்டான விதத்தில் 36 வருட கால குருத்துவப் பணியில் 33 வருடங்கள் எதிர்கால குருத்துவ பரம்பரையினருக்காக மற்றும் நாட்டின் எதிர்கால மாணவச் செல்வங்களின் வளர்ச்சிக்காக பணியாற்றி தம்மை அர்ப்பணித்தார் என்பதை அருட்பணி. தயா அவர்கள் அவரது உரையில் தெரிவித்தார்.

இறுதிச் சடங்கு நிகழ்வுகள் ஓய்வுபெற்ற ஆயர் மேதகு. ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகையினாலும், அடக்கச் சடங்கானது கொழும்பு மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்வல் சில்வா ஆண்டகையினாலும் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

அருட்தந்தையின் மரணச் சடங்கு நிகழ்வுகளுக்கு பொரும்பாலான குருவானவர்கள், துறவிகள், மற்றும் பொதுநிலையினர் கலந்து கொண்டதோடு, அனைத்து நிகழ்வுகளையும் வெலிஹேன பங்கின் பங்குத் தந்தை அருட்பணி. அமில கோமிஸ் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து, ரொஷான் பிரதீப்.**

# வடகொழும்பு வட்டார மறையறிவு மற்றும் பேச்சுப் போட்டிகள்







கொழும்பு உயர்மறைமாவட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடகொழும்பு பங்குகளுக்கான மறையறிவுப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகள், வடகொழும்பு வட்டார இயக்குனர் அருட்பணி நியூமன் முத்துதம்பி அடிகளாரின் தலைமையில் மறையறிவுப் போட்டியானது சித்திரை மாதம் 7ம் திகதி புனித டிலாசால் கல்லூரியில் இடம்பெற்றது. அன்றைய போட்டியின் நடுவர்களாக அருட்சகோ. ஜோசப் ஜெயகாந்தன், அருட்சகோ. மேவின், அருட்சகோதரி. கில்டா ஆகியோர் கலந்துகொண்டனர். போட்டியின் இறுதியில் கீழ்ப்பிரிவில் புனித மரியாள் ஆலயம் மட்டக்குளி பங்கு மாணவர்களும், மேற்பிரிவில் புனித சூசையப்பர், கிரான்பாஸ் பங்கு மாணவர்களும் முதலாம் இடத்தினைப் பெற்றிருந்தார்கள்.

பேச்சுப்போட்டியானது சித்திரை மாதம் 27ம் திகதி புனித டிலாசால் கல்லூரியில் இடம்பெற்றது. அன்றைய போட்டியிலும் மேற்கூறப்பட்ட நடுவர்களே கலந்துகொண்டார்கள். இப்போட்டியில் கீழ்ப்பிரிவில் முதலாம் மற்றும் மூன்றாம் இடத்தினை புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா மறைப்பாடசாலை மாணவர்களும், இரண்டாம் இடத்தினை புனித லூசியாள் பேராலய மாணவனும்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..





"செத் சரண" கரிட்டாஸ் நிறுவனத்தின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட பஹால் மடம் பெல்லே மஹா சந்தியாகோ தொடர்மாடி கட்டிட தொகுதியின் ஒன்றுசேர்ந்து ஆயத்தப்படுத்திய 2018ம் ஆண்டிற்கான சித்திரைப் பெருவிழா கடந்த 13ம் திகதி, அக்கட்டிடத் தொகுதியில் அமைந்த விளையாட்டு மைதானத்தில் பல விளையாட்டு நிகழ்களும் இனிதே நடைபெற்றது.

**தகவல் : H.B. கல்தேரா**

ஞான ஒளி
GNANA OLI ඥාන ඔළි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
06 வைகாசி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

## “நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துக்கொண்டேன்” [யோவா.15:16]

பரிசுத்த திருச்சபையானது இம்மாதம் தூய வளனார் மற்றும் அன்னை மரியாளை நினைவுகூர்வதோடு இயேசுவின் விண்ணேற்பு விழா ஆகியவற்றை கொண்டாடி மகிழ்கின்றது. மனிதர் அனைவரும் மீட்படைய வேண்டுமென்று தனது இறைத்திட்டத்தில் கடவுள் தூய வளனாரை உடன் உழைப்பாளராகத் தேர்ந்தெடுத்தார். திருக்குடும்பத்தில் கடின உழைப்பு, அன்பு, பொறுமை, மனத்தாழ்ச்சி, பணிவு, சுறுசுறுப்பு ஆகிய நற்பண்புகளை தன்னகத்தே கொண்டு அனைத்தின் ஊற்றாக வளனார் திகழ்ந்தார். உலக வாழ்வின் நற்பேறு, செல்வமோ, செல்வாக்கோ, பதவிகளோ அல்ல என்று இன்றும் கற்பிக்கின்றார்.

ஆண்டவரின் தாய் அன்னை மரியாவை வாழ்த்தி வணங்கவும் போற்றி புகழவும் திருஅவையால் தரப்பட்டிருப்பதுதான் மரியன்னையின் வணக்க மாதமான வைகாசி மாதம். அன்னையின் வாழ்வை எடுத்துக் கொண்டால் அன்னையின் வாழ்வு முழுவதும் துன்பம் நிறைந்ததாகத்தான் இருந்தது. மனித குலம் முழுவதும் நிறைவாக வாழ வேண்டும் எனும் இறைவனது விருப்பத்தை, திட்டத்தை நிறைவேற்ற தன்னையும் தனது ஒரே அன்பு மகனையும் எமக்காக அர்ப்பணித்தவர். இந்த தெய்வீகத் தாயை வணக்க மாதத்தில் மட்டுமல்ல மாறாக வாழ்நாள் முழுவதும் ஏன் எம் மூச்சு உள்ளவரையிலும் வணங்க வேண்டியது எமது கடமையாகும்.

இயேசுவின் வாழ்விலும் திருச்சபையின் வரலாற்றிலும் ஒரு முக்கிய கட்டம் இயேசுவின் விண்ணேற்பு. இயேசுவின் பாடுகள், மரணம் இவற்றைத் தந்தையான கடவுள் அங்கீகரித்தார், ஏற்றுக்கொண்டார் என்பதன் அடையாளம் இயேசுவின் விண்ணேற்பு. தந்தையான இறைவனின் விருப்பத்தையும் அவரது இறையாட்சிப் பணியையும் உலகில் நிலைநிறுத்திய இயேசு உலகப் பணியின் நிறைவாக விண்ணகம் சென்றார். இயேசுவின் பணி இன்றும் திருச்சபையால் தொடர்ந்தாற்றப்பட்டு வருகிறது. இயேசுவின் விண்ணேற்பு விழா இறையாட்சிப் பணிப்பகிர்வின் பொருளை உணர்ந்து ஆழமாக பணியாற்றிட எம் ஒவ்வொருவரையும் அழைத்து நிற்கிறது.

கிறிஸ்து மனித உடலெடுக்க அன்னை மரியாவின் மீது நிழலிட்ட ஆவியானவர் கிறிஸ்துவின் மறையுடலான திருச்சபை உருவாகவும் அன்னை மரியாவின் தோழமையில் கூடிச் செபித்த திருத்தூதர்கள் மீதும் இறங்கி வந்தது எத்துணை பொருத்தமானது. இயேசுவின் ஊனுடலாகட்டும் அவரது மறையுடலாகட்டும் நற்கருணையில் அவரது அருள்சாதன உடலாகட்டும் எல்லாம் தூய ஆவியாரின் உருவாக்கமே. தூய ஆவியின் துணையால் வாழும் நாம் அந்த ஆவி காட்டும் நெறியில் வாழ்ந்திட முயல்வோம்.

எமது மறைமாவட்டத்தில் இம்மாதம் 12ம் திகதி குருத்துவம் எனும் அருளயடையாளத்தைப் பெற்று இறைபணியை 12 பேர் ஆரம்பிக்கவிருக்கின்றார்கள். எல்லா அழைத்தல்களிலும் முதல் படி எடுத்து வைப்பவர் இறைவன்தான் “நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துக்கொண்டேன்” (யோவா.15:16) என்றார் இயேசு. அழைத்தல் என்பது வெறுமனே வாழ்ந்துவிட்டு போவதல்ல. மாறாக அது ஒரு போராட்ட வாழ்வாக இருக்கின்றது. இயேசுவின் சீடராய் இவ்வுலகில் வாழ்வதே ஒரு போராட்ட வாழ்வுதான் என்கிறது திருவிவிலியம். “விசுவாச வாழ்வு என்னும் போராட்டத்தில் ஈடுபடு” (1திமொ. 6:12). விசுவாசம் என்னும் போராட்ட வாழ்வில் இறைவனே வலிமையும் ஆற்றலுமாக இருக்கின்றார். “உண்மையை இடைக்கச்சையாகக் கட்டிக்கொண்டு நீதியை மார்புக் கவசமாக அணிந்துகொள்ளுங்கள். அமைதி அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட்டுக்கொள்ளுங்கள். எந்நிலையிலும் நம்பிக்கை எனும் கேடயத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள். மீட்பைத் தலைச்சீராகவும் கடவுளின் வார்த்தையைத் தூய ஆவி அருளும் போர்வாளாகவும் எடுத்துக்கொள்ளுங்கள்” (எபே.6:13-17). எனும் தூய பவுலின் வார்த்தையை உரிமையாக்கிக் கொள்ளுங்கள். குருத்துவ வாழ்வில் அடியெடுத்து வைக்கும் உங்கள் அனைவருடனும் இறைவனின் ஆசீரும் மரியாளின் பாதுகாப்பும் நிலைத்திருக்கட்டும். குருத்துவப்பயணம் இனிதே தொடர்ந்திட ஞான ஒளி சார்பாக உங்கள் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**இறையாசீருடன் ஆசிரியர்**



### சிந்தனைக்கு

**நாமும், நாளைய தினம், விண்ணக வாழ்வு வரும் என்று எண்ணி நிகழ்கால வாழ்வை, சூன்யமாக்காமல், நிகழ்காலத்தையே விண்ணக வாழ்வாக மாற்றி வாழ்வோம்.**

## ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா

13.05.2018 இன்று நாம் ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். தந்தையோடு வாழ்ந்த வார்த்தையானவர் தன் நிலைத் துறந்து மனிதராகி, மானிட மீட்புக்காய் சிலுவைச் சாவை ஏற்று உயிர்த்தவர். தம் பணியை தன்னைப் பின் தொடர்ந்த சீடர்கள் தொடர்ந்தாற்ற வேண்டுமெனப் பணித்து விண்ணேற்றமடைகின்றார். தனக்கெனத் தந்தையாம் இறைவன் தந்த பணியை முழுமையாய் நிறைவேற்றி அப்பணி உலகில் தொடர்ந்து நடைபெறத் தனது ஆவியைத் தருவதாக சீடர்களுக்கு வாக்களித்து வந்த, வானகமே திருப்பிச் செல்கிறார்.

இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா நமக்கு சிந்தனையாக, இயேசு தனக்காக வாழவில்லை, தன்னை இன்னார் என்று அறிவிக்கவில்லை. மாறாக, இறைத் தந்தையின் ஆட்சி இவ்வுலகில் வர செபித்தார். உழைத்தார் அதற்காக அன்பை உருவாக்கும் ஆட்சியை நிறுவ விரும்பினார். அந்த ஆட்சியை உவமைகளால் புரியச் செய்தார். புதுமைகளால் எண்பித்தார். அன்றாட வாழ்வில் நற்செயல்களால் எடுத்துக்காட்டினார். இறைவனின் ஆட்சி சட்டங்களாலும், சமய ஒழுங்கு முறைகளிலும் அமைவதல்ல, இது இறைவனை மையமாகக் கொண்டு மானுட நலன் பேணுவதும், உழைப்பதுமே என்பதை நடைமுறையாக்கினார். இதற்கு எதிரானவற்றையும், எதிரானவர்களையும் எதிர்த்தார். இதனால் சிலுவையில் அறைந்து கொலை செய்யப்பட்டார். ஆனால் கடவுள் அவரை எல்லாவற்றுக்கும் மேலாக உயிர்த்தெழச் செய்தார். உயிர்த்தெழுந்த இயேசு தம் சீடர்களுக்கு பல முறை தோன்றி தாம் உயிரோடு இருப்பதை உணர்த்தினார். இயேசு தாம் செய்த பணியை சீடர்களும் தொடர்ந்தாற்ற விரும்பினார். உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுவதும், நம்பிக்கை கொள்வோரை சீடராக்கி, தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு அளிப்பதும் அவர்களின் பணி என இயேசு கூறுகின்றார். ஆகவே சீடர்களுக்கு ஒப்படைத்த இறையாட்சிப் பணி திருமுழுக்குப் பெற்ற நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட ஒரு பணிப்பொறுப்பாகும். இதன் மூலம் விண்ணக வாழ்வை கொடையாகப் பெற்ற நாம், நமக்கும் ஒரு அழைப்பு விடப்படுகின்றது. நாம் வாழும் இம்மண்ணக வாழ்வில் மகிழ்ச்சியோடு வாழவேண்டும். இயேசு வாழ்ந்த வாழ்க்கையே நாமும் வாழவேண்டும். இயேசு இறையன்பையும், பிறரன்பையும் இயேசு வாழ்ந்து காட்டினார் கிறிஸ்தவர்களும் இயேசுவை அறிந்து அர்த்தமுள்ள வாழ்வை விசுவாசமுள்ள வாழ்வை வாழதான். இம்மண்ணக வாழ்வு கொடுக்கப்பட்டிருக்கிறது.


உதாரணம் அன்னை திரேசா அன்பே அறியாத அநாதைக் குழந்தைகளுக்கு இம்மண்ணிலே இறையன்பையும், பிறரன்பையும் காட்டினார். அவர்களில் இயேசுவைக் கண்டார். இப்பயண வாழ்வை வாழதான் நாம் இம்மண்ணக வாழ்வுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றோம்.

- ✷ வாழ்க்கை என்பது கொள்வதும், பெறுவதுமல்ல, மாறாக இருப்பதும் வளர்ப்பதுமாகும். (M. அர்னால்டு)
- ✷ வாழ்க்கை என்பது ஒரு ஓட்டப்பந்தயம் (Race) அதை நல்ல முறையில் ஓடி முடிக்க வேண்டும். இதையே பவுலடியாரும் 1கொரி 9:24ல் கூறுகின்றார்.
- ✷ வாழ்க்கை என்பது பயணம் அந்த பயணத்தை முடிக்கவேண்டும். கரையை அடைய பல துன்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- ✷ வாழ்க்கை என்பது யாத்திரை (Pilgrimage) அந்த யாத்திரையில் தவமும், ஒழுக்கமும் சிறந்திருக்க வேண்டும்.
- ✷ வாழ்க்கை என்பது பாடசாலை (School) அங்கு நல்லவைகள் கற்பிக்கப்பட்டு, கற்றுக்கொள்ளப்படவேண்டும். இப்படிப்பட்ட வாழ்வை வாழ்ந்தவர்கள் தான் விண்ணக வாழ்வுக்கு உரியவர்கள்.
- ✷ வாழ்க்கையை அளப்பது ஆண்டுகள் அல்ல, சாதனைகள் என்று செபிடன் கூறுகிறார்கள். இதையே எப்படி வாழ்ந்தோம் என்பது தான் முக்கியம்.

எனவே இம்மண்ணக வாழ்வை அர்த்தமுள்ளதாக்க மாற்றுவோம். அப்போது விண்ணக வாழ்வு தானாக கிடைத்துவிடும்.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# உலக தொழிலாளர்கள் தினம்

மே 1



**“சித்திரச் சோலைகளே, உம்மை நன்கு**
**திருத்த இப்பாரினிலே – முன்பு**
**எத்தனை தோழர்கள் இரத்தம்**
**சொரிந்தனரோ உங்கள் வேரினிலே”**

என்று உழைப்பவரின் பெருமையைப் பாடினார் பாவேந்தன் பாரதிதாசன். மே 1 உழைப்பாளர் நாள். உலகத் தொழிலாளரை ஒன்றுகூட அறைகூவல் விடுத்த நாள். திருச்சபையும் அன்றைய தினம் உழைப்பாளருக்கு மரியாதை செய்கின்றது. புனித சூசையப்பரை தொழிலாளரின் பாதுகாவலராக அறிவித்து, உழைப்பைப் போற்றி உழைப்பாளருக்காக மன்றாடுகிறது.

## இறைவன் ஓர் உழைப்பாளி

விவிலியம் இறைவனையே ஓர் உழைப்பாளராகத்தான் சித்தரிக்கிறது. உழைப்பின் மேன்மையை, புனிதத்தை இதைவிட மேலாகச் சொல்ல முடியுமா? இறைவன் இந்த உலகை ஆறு நாட்களில் படைத்தார். இந்த உலகமும் இயற்கையும் அவரது கைவேலை. இறைவனின் உழைப்பின் கனியான இந்த உலகம் அழகானது, நல்லது என்று கூறி (தொ.நூ 2:2-3, திபா. 104:22, தொ.நூ 1:31) உழைப்பின் ஊற்று இறைவனே என்றுரைக்கிறது இறைவார்த்தை.

## உழைப்பு மனிதரின் கடமை

இறைவனே உழைப்பை மேன்படுத்தியுள்ளதால், மனிதரும் உழைக்க வேண்டும் என்பது தெளிவு. முதல் மனிதனாகிய ஆதாமுக்கு வேலைவாய்ப்பு அளித்ததும் கடவுள்தான். “ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்” என்று தொடக்கநூல் (2:15) தெளிவாகச் சொல்கிறது. மேலும், “நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய்” (தொ.நூ. 3:19) என்னும் இறைவனின் கட்டளையால் உழைப்பு மனிதரின் கடமையாகிறது. எனவே, ஆபேல் ஆடு மேய்ப்பவனாகவும், காயின் நிலத்தைப் பண்படுத்துபவனாகவும் ஆனார்கள் (தொ.நூ. 4:2). வேலை செய்யும் மனிதர் தேவையான ஓய்வு பெறுவதற்காக இறைவன் ஓய்வு நாளை உருவாக்கினார் (வி.ப. 31:12-17). அத்துடன், உழைப்பின் முதற்பலனை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார் (லேவி 23:10-20, இச. 26:2, 10).



## இயேசு ஓர் உழைப்பாளி

புதிய ஏற்பாடு ஆண்டவர் இயேசுவை உழைப்பாளியாகவும், உழைப்பாளர்களின் மாதிரியாகவும் காட்டுகிறது. இயேசு ஒரு தச்சரின் மகனாகப் பிறந்ததே, உழைப்புக்கும் உழைப்பாளருக்கும் பெருமை சேர்த்தது. பணி வாழ்வில் ஈடுபடுமுன், இயேசுவும் தச்சுத் தொழில் செய்து வந்தார். “இவர் தச்சர் அல்லவா! என்று மாற்கு நற்செய்தி (6:3) தெளிவுபடக் கூறுகிறது.

தன் பணி வாழ்விலும் இயேசு ஓய்வின்றி உழைத்தார். ஒருபோதும் அவர் தனக்காக, தன் குடும்பத்துக்காக உழைக்கவில்லை. மாறாக, இந்த உலகம் உய்வதற்காக உழைத்தார். காலை முதல் இரவு வரை போதிப்பதிலும், குணப்படுத்துவதிலும், இறை வேண்டலிலும் ஈடுபட்டு இயேசு பம்பரமாய்ப் பணியாற்றுவதை நற்செய்தியின் பல பகுதிகள் எடுத்துக்காட்டுகின்றன (மாற். 1:21-35, மத். 9:35, லூக். 21:37-38, யோவா. 4:6). ஓய்வு நாளிலும் இயேசு உழைத்தார். நலமாக்கினார். அதனைப் பரிசேயர் ஒரு குற்றமாகச் சுட்டிக்காட்டியபோது, “என் தந்தை இன்றும் செயலாற்றுகிறார், நானும் செயலாற்றுகிறேன்” (யோவா. 5:17) என்று தன் பணியை நியாயப்படுத்தினார். பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் போன்ற கடின உழைப்பாளிகளை, அடித்தட்டுத் தொழிலாளர்களைத் தன் சீடர்களாகத் தேர்ந்தெடுத்ததன் மூலம் (மாற். 1:16-20) உழைப்பவர் மீதுள்ள தன் நம்பிக்கையை, சார்பை இயேசு வெளிப்படுத்தினார். உழைப்பின் மாண்பை இயேசு அறிந்திருந்ததால்தான் “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” (மத். 11:28) என்று அழைப்பு விடுத்தார்.

## பவுலடியார் உழைக்கும் சீடரின் மாதிரி

உழைத்துக்கொண்டே நாம் இறையரசுப் பணியில் ஈடுபடவேண்டும் என்பதற்குத் திருத்தூதர் பவுல் சிறந்த மாதிரியாய்த் திகழ்கிறார். தன்னுடைய தேவைகளுக்காக யாரையும் சார்ந்திராமல் இருக்க அவர் உழைத்தார் (தி.பா. 20:34), கூடாரம் செய்யும் தொழிலைச் செய்தார் (தி.பா. 18:3). இயேசுவின் சீடர்களுக்கும் நற்செய்திப் பணியாளர்களுக்கும் தான் எடுத்தக்காட்டாகத் திகழ வேண்டும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். எனவேதான், ‘நாங்கள் எவ்வாறு பாடுபட்டு உழைத்தோம் என்பதை நினைத்துப் பாருங்கள். உங்களுள் எவருக்கும் சுமையாய் இராதபடி, எங்கள் பிழைப்புக்காக இராப்பகலாய் வேலை செய்துகொண்டே கடவுளுடைய நற்செய்தியை உங்களுக்குப் பறைசாற்றினோம்” (1தெச. 2:9, 2தெச. 3:7-9) என்று வலியுறுத்திக் கூறினார்.

# உழைப்பே உயர்வு

எனவே, நாமும் உழைக்க வேண்டும் உற்சாகமாக, ஆர்வத்தோடு நமக்காகவும், பிறருக்காகவும், இந்த உலகம் முன்னேறவும் உழைக்க வேண்டும்.

## இறைவனின் பார்வை

இன்றைய உலகம் உடல் உழைப்பைப் பெருமையாகக் கருதுவதில்லை. தொழிலாளரைவிட அதிகார வர்க்கத்துக்கே அதிக மதிப்பு தருகிறது. வியர்வை சிந்தி உழைப்பவரைவிட குளிர்சாதன அறையில் நேரத்தை வீணடிப்பவரே உயர்வாக எண்ணப்படுகின்றனர். இது இறைவனின் பார்வையல்ல. முதலாளித்துவக் கலாச்சாரப் பார்வை. இதனைக் களைந்து, உழைக்கும் வர்க்கத்தினரை, விவசாயிகளை, அடித்தட்டுத் தொழிலாளர்களை உயர்வாகக் கருதும் இறைவனின் பார்வையை நாம் பெற வேண்டும்.

## உழைக்காதவர் உண்ணலாகாது

‘உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது’ (2தெச.3:6) என்பதற்கேற்ப, உழைப்பாளர்களோடு இணைந்து வாழ வேண்டும்.

## நேர்மையாக உழைப்போம்

உழைப்பில் நேர்மையைக் கடைப்பிடிப்பது இறைவாக்கின் இன்னொரு சவால். குறிப்பாக, இலஞ்சம், ஊழல் போன்றவை தலைவிரித்தாடும் இன்றைய காலத்தில் உழைப்பில் நேர்மை மிக அவசியமாகிறது. “உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்... உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்” (லூக். 3:13-14) என்னும் திருமுழுக்கு யோவானின் அறிவுரை அரசு அலுவலங்களில் பணியாற்றுபவர்களுக்கு மிகவும் பொருந்தும்.

## இலட்சியங்களுக்காக உழைப்போம்

வயிறு நிறைவதற்காக மட்டும் உழைப்பது விலங்குகளின் பண்பு. மனிதர் அதைவிடச் சிறந்து விளங்கவேண்டும். வெறும் உலகியல் தேவைகளை நிறைவு செய்வதற்காக மட்டும் நாம் உழைத்தால் நாம் கிறிஸ்துவின் சீடரல்ல. சராசரி மனிதர்களே. “அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள்” (யோவா. 6:27) என்ற இயேசுவின் அறைகூவலுக்கு ஏற்ப உயர்ந்த இலட்சியங்களுக்காக நாம் உழைக்க வேண்டும்.



## பிறர் வாழ்வு பெற உழைப்போம்

“நலிவுற்றோருக்குத் துணை நிற்க” நாம் பாடுபட்டு உழைக்கவேண்டும் (திப. 20:35) என்னும் இறைவாக்கு நம்மை ஊக்கப்படுத்துகின்றது. நமது உழைப்பால் சமுதாயத்தில் நலிவுற்ற ஒடுக்கப்பட்ட மக்கள் உயர நாம் பாடுபட வேண்டும்.

## உழைப்பின் பலனைப் பகிர்வோம்

நேர்மையாக உழைப்பவர்கள் அதன் பலனைத் தாங்கள் மட்டுமே அனுபவிப்பது தன்னலம். பகிர்வு செய்யாதது பாவம். எனவே, நம் உழைப்பின் பலனைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள முன்வருவோம். “தேவையில் உழல்வோருக்குப் பகிர்ந்துகொடுக்கத் தங்களிடம் பொருள் இருக்கும் வகையில், தாங்களே தங்கள் கைகளால் நேர்மையோடு பாடுபட்டு உழைக்கட்டும்” (எபே. 4:28) என்கிறது இறைவார்த்தை.

***உழைத்து உயர்வோம்,***

***இந்த உலகை உயர்த்துவோம்.***

# அன்னை மரி வாழ்வின் வழி



## "விண்ணகத்திற்கான இலகு திறவுகோல் செபமாலை".

கிறிஸ்தவர்களாகிய நாம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். காரணம் நம்மாண்டவர் இயேசு கிறிஸ்து இவ்வுலகை விட்டுச் செல்ல முன் நமக்கு கொடுத்த இரண்டு கொடைகள் ஒன்று திருச்சபை மற்றது அன்னை மரியா. தான் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போது அன்னை மரியாளை தாயாக தன் அன்புச் சீடருக்கு கொடுக்கிறார். (யோவா 19:27) தொடர்ந்து விவிலியம் கூறுகிறது. அந்நேரம் முதல் அச்சீடர் அவரை ஏற்றுக்கொண்டார் என்று (யோவா 19:27). இங்கு யோவான் ஒரு தனி நபராக பிரதிபலிக்கவில்லை. மாறாக முழு திருச்சபையினதும் பிரதிநிதியாக திகழ்கிறார். எனவே அன்னை மரியாளை யோவானுக்கு மட்டும் தாயாக கொடுக்கவில்லை. முழு உலகத்திற்கும் தாயாக கொடுக்கிறார். இயேசுவின் இறப்பிற்குப் பின் அன்னை மரி தியானத்தில் ஈடுபட்டதாகவும், இயேசு விண்ணகம் சென்ற பின் திருச்சபையுடன் இணைந்து செபித்தார் என்றும் விவிலியம் கூறுகிறது. (தி.ப 2:14). எனவே அன்னை திருச்சபையுடன் இணைந்து தூய ஆவியின் வருகைக்காக காத்திருந்தார். அதனால்தான் கூறுவார்கள் "அன்னை மரி இறைவனின் மகனாகவும், கிறிஸ்துவின் தாயாகவும், பரிசுத்த ஆவியின் பத்தினியாகவும்" திகழ்கிறார் என்று. இத்தகைய அன்னையை மறுதலிப்பவர்கள் மூவொரு கடவுளையும் மறுதலிக்கிறார்கள். காரணம் அன்னை மரி மூவொரு கடவுளிடமிருந்து கொடுக்கப்பட்ட திருச்சபையின் அதிஉன்னத கொடையாக திகழ்கிறார். இதனால் தான் திருச்சபையானது "புனிதர்களுக்கு மரியாதையையும், அன்னை மரியாளுக்கு அதியுயர் மரியாதையையும்" செலுத்தி வருகின்றது.

இத்தகைய அதியுயர் வணக்கத்தில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவர்களாகிய எமக்கு வைகாசி மாதம் முக்கிய மாதமாக திகழ்கிறது. காரணம் இம்மாதத்தை எல்லோரும் பொதுவாக "வணக்க மாதம்" என அழைப்பார்கள். இம்மாதம் முழுவதும் அன்னை மரியாளுக்கு அர்ப்பணித்து பங்குகளிலும், வீடுகளிலும், தோட்டங்களிலும், கூடாரங்களிலும், தனியாகவும், குழுவாகவும் இணைந்து செபமாலை செபித்து, அன்னைக்குரிய மரியாதையை கொடுக்கின்றார்கள். உண்மையில் செபமாலை செபிப்பது என்பது நமக்கு ஒரு கொடையாக இருக்கின்றது. காரணம் "செபமாலை செபிக்கின்ற போது சாத்தான் பறந்து விடுகிறான்" அத்தகைய வல்லமை கொண்டது இச்செபமாலை. இது ஒரு கூரிய ஆயுதம். அன்னை மரி பல இடங்களில் காட்சி கொடுத்த போது கேட்டுக்கொண்ட ஒரே விடயம் என்னவென்றால் "அனுதினமும் செபமாலை செபியுங்கள்" இதனையே திருச்சபை இன்றளவும் வலியுறுத்துக் கூறுகின்றது.

சிலர் கேட்கலாம் ஏன் செபமாலை செபிக்க வேண்டும் என்று? பலர் இச்செபமாலையை செபிப்பதற்கு எதிராக இருக்கின்றார்கள். குறிப்பாக அடிப்படைவாதிகள் அன்னை மரிக்குரிய வணக்கத்தினை மறுதலிக்கிறார்கள். என்நாளும் இதிலுள்ள முக்கியத்துவமும், இறையியலையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள். காரணம் நாம் செபமாலை செபிக்கின்ற ஒவ்வொரு முறையும் "கிறிஸ்து நிகழ்வுகளை" தியானிக்கின்றோம். செபமாலையில் கொடுக்கப்பட்டுள்ள மகிழ்ச்சி, துக்க, மகிமை, ஒளியின் மறையுண்மைகள் யாவும் கிறிஸ்து நிகழ்வுகளை (Christ Event) தியானிக்கின்றது. எனவே செபமாலை தியானிக்கும்போது நாம் கிறிஸ்துவின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளான பிறப்பு, பணி, பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற மறையுண்மைகளை தியானிக்கின்றோம். எனவே இந்த மறையுண்மைகளை தியானிக்கின்ற ஒவ்வொரு முறையும் கிறிஸ்துவின் பாஸ்கா மறை நிகழ்ச்சியில் நாம் பங்கு கொள்கின்றோம். எனவே திருச்செபமாலை மறையுண்மைகள் முழுவதும் விவிலியத்தில் அடங்கியுள்ளது. குறிப்பாக விவிலிய நிகழ்வுகளை தியானிக்கிற போது நாம் விவிலியத்தையும் இணைந்து தியானிக்கின்றோம். இணைத்து தியானிக்கின்றோம். கர்த்தர் கற்பித்த செபமும் (மத் 6:9-13), மரியன்னையின் மங்கள வார்த்தையும் (லூக் 1:30-31) இணைந்து திருச்செபமாலையாக நாம் தியானிக்கின்றோம். திருச்பையும், திருச்செபமாலையை தியானிக்கும்படியாக எம்மை அழைத்துநிற்கிறாள். நாம் செபிக்கின்ற ஒவ்வொரு முறையும் அன்னை மரியுடன் இணைந்து செபிக்கின்றோம். அதனால்தான் அன்னை மரி வாழ்வின் வழியாக திகழ்கிறாள்.

என்னுடைய வாழ்வில் நான் இத்திருச்செபமாலை வழியாக பல அற்புதங்களை கண்டுணர்ந்துள்ளேன். நான் என்னிடம் வரும் பக்தர்களுக்கும் கூறுவது, அனுதினமும் செபமாலை செபியுங்கள். அன்னை மரி உங்களுக்காக பரிந்து பேசுவாள் என்று. என்னுடைய வாழ்வில் பல குருக்களை கண்டுள்ளேன். அன்னை மரி மேல் அதீத அன்பும், பக்தியும் கொண்டு தங்கள் குருத்துவ வாழ்வில் அன்னை மரியுடன் இணைந்து பயணித்து தங்கள் வாழ்வில் மகிழ்ச்சியாக இருப்பதை. இவையாவையும் காண்கின்ற போது "அன்னை மரி" என்பவள் வெறும் வார்த்தை மட்டுமல்ல மாறாக, "வாழ்வின் வழி"யாக திகழ்கின்றாள். அன்னையின் பெயரில் தான் உலகில் ஆலயங்கள் பல கட்டப்பட்டுள்ளன. அன்னையின் வேண்டுதல்கள் வழியாக பலன் பெற்றவர்கள் பலர், அன்னையின் புகழ்பாடும்போது திருச்சபையுடன் இணைந்து நாம் கிறிஸ்துவின் மறையுண்மைகளை தியானிக்கின்றோம். எனவே வைகாசி மாதமாகிய இந்த வணக்கமாதத்தினை முழுவதுமாக அன்னைக்கு ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம். அன்னையுடன் இணைந்து பயணிக்கும் போது எமது வழி தடுமாறுவதில்லை. நாமும் வழிதவறி செல்லமாட்டோம்.

இறைவனின் உன்னத பரிசான மாசுமறுவற்ற அன்னை மரி, என்றும் கன்னியாக, எமது தாயாக, எமது அரசியாக, பாதுகாவலியாக இருக்கின்றாள். அத்தகைய அன்னையை எம் சொந்தத் தாயாக ஏற்றுக்கொள்வோம். எம் இல்லத்து அரசியாக முடிசூட்டுவோம். எம் வாழ்வின் பாதுகாவலியாக இருக்கக் கேட்போம். இத்தகைய உணர்வுகளால் நாம் உந்தப்படுகின்ற போது அன்னைக்கு நாம் கொடுக்கும் வணக்கம் என்றும் அதி உன்னத வணக்கமாக இருக்கும் அவர் என்றுமே அவளது பிள்ளைகளை கைவிடுவதில்லை. என்றும் எமக்காக பரிந்து பேசும் அன்னை என்றும் எம் வாழ்வின் வழியாகட்டும்.
"அன்னைக்கு கரம் குவிப்போம், அவள் அன்பைப் பாடிடுவோம்"

**சகோ. டிலோயிட்சன் பெர்னாண்டோ**
**தேசிய குருமடம், கண்டி.**

## மாதாவுக்கு பிடித்த மாதம் மே மாதம்
## மாதாவின் மாதம் வெற்றி மாதம்



மாதாவின் மாதம் வணக்க மாதம்
மாதாவின் மாதம் மே மாதம்
மாதாவின் மாதம் மகிழ்ச்சிக்குரிய மாதம்
மாதாவின் மாதம் மங்கள மாதம்
மாதாவின் மாதம் மனம் குளிரும் மாதம்
மாதாவின் மாதம் அருள் நிறைந்த மாதம்
மாதாவின் மாதம் ஆறுதல் தரும் மாதம்
மாதாவின் மாதம் அன்பம் ஈந்திடும் மாதம்
மாதாவின் மாதம் இரக்கத்தின் மாதம்
மாதாவின் மாதம் உயிர் காக்கும் மாதம்
மாதாவின் மாதம் பொக்கிஷத்தை கொடுக்கும் மாதம்
மாதாவின் மாதம் குறைகள் தீர்க்கும் மாதம்
மாதாவின் மாதம் குடும்பமாக செபிக்கும் மாதம்
மாதாவின் மாதம் செல்வத்துக்குரிய மாதம்
மாதாவின் மாதம் செபமாலைக்குரிய மாதம்
மாதாவின் மாதம் சக்தி நிறைந்த மாதம்
மாதாவின் மாதம் துன்பங்கள் நீங்கும் மாதம்
மாதாவின் மாதம் சுமைகள் தீர்க்கும் மாதம்
மாதாவின் மாதம் கருணை பொழியும் மாதம்
மாதாவின் மாதம் தடைகள் களையும் மாதம்
மாதாவின் மாதம் வெற்றி நிறைந்த மாதம்

**உலகிலே தேடி ஓடி வந்து**
**உமது சகாயங்களை இரந்து**
**உமது மன்றாட்டுக்களின்**
**உதவியைக் கேட்ட ஒருவனாகிலும்**
**உலகில் கைவிடப்பட்டதாக**
**உண்மையில் ஒருபோதும் கேள்விப்பட்டதில்லை.**

சென்ம பாவமில்லாமல் உற்பவித்த மரியாயே! பாவிகளுக்கு அடைக்கலமே, எங்களுக்காக உமது திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும். மரியே வாழ்க! மாதாவே வாழ்க!

**மேரி இருதயநாதன் (மறையாசிரியர்)**
**பேராலயம், இரத்தினபுரி**

# வணக்க மாதம்



வைகாசி மாதம் தேவதாய்க்கு விசேட பக்தி செலுத்தும் மாதமாக திருச்சபையால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த முழு மாதமும் மரியாவுக்கே அளிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் முழுவதும் வீடுகளிலே, ஆலயங்களிலே அனைவரும் அதாவது இன மத பேதமின்றி எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து செபமாலை சொல்வதும், தேவதாய்க்கு நவநாட்கள் செய்வதும், ஏன் ஒரு விழாக் கோலமாக வணக்க மாதத்தை கொண்டாடுவர். ஏன் இந்த கொண்டாட்டம். ஏன் நாம் மரியன்னைக்கு விழா எடுத்துக் கொண்டாடுகின்றோம்.

### அன்னையின் காட்சிகள் சில

1. கி.பி 1858 மாசி 11 அன்று லூர்து நகரில் மசபியேல் எனும் கெபியில் பெர்னதெத் சுபீரூஸ் என்ற 14 வயது சிறுமிக்கு காட்சி கொடுத்தபோது, அன்னை செபமாலை செபித்த வண்ணம் பெர்னதெத்துவையும் செபிக்கச் கூறினார். பெர்னதெத் செபமாலை செபித்து முடிந்தபின் அன்னையும் மறைந்து விட்டார். மாசி 11 முதல் ஆடி 16 வரை இக்குழந்தைக்கு 18 முறை காட்சியளித்தார் அன்னை.

2. கி.பி 1917 வைகாசி போர்த்துக்கல் நாட்டில் பாத்திமாவில் லூசியா, பிரான்சிஸ், ஜெசிந்தா என்ற சிறுவர்களுக்கு தோன்றியபோது, செபமாலை செபியுங்கள். தீமைகள் வெல்ல செபமாலையே கடைசி ஆயுதம். தனியாகவும், சமூகமாகவும் செபமாலை என்னும் ஆயுதத்தை கையிலேந்துங்கள் என்றார். அன்னை கேட்டுக்கொண்டபடி குடும்பமாக செபமாலை சொல்வதும் அன்னைக்கு விழா எடுப்பதும் ஒரு பாரம்பரிய நிகழ்வாக எமது கத்தோலிக்கரிடையே காலங்காலந்தொட்டு கடைப்பிடிக்கப்படுகிறது.

### செபமாலையைப் பற்றி திருத்தந்தையர்கள்

1. செபமாலை செபிக்கும் ஒரு படையணியை என்னிடம் கொடுங்கள் நான் உலகை வென்று காட்டுகிறேன் - 9ம் பத்திநாதர்

2. திருச்சபை ஆயிரமாயிரம் பக்தி முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆனால் செபமாலை பக்தி முயற்சியில் நடந்த அற்புதங்களை போல் வேறு எந்த பக்தி முயற்சியிலும் அற்புதங்கள் நடைபெறவில்லை எனத் திருத்தந்தை 10 பத்திநாதர் கூறியுள்ளார்.

3. தீமைகளுக்கெல்லாம் மாற்று மருந்தும் நமது ஆசீர்வாதங்களுக்கெல்லாம் ஆணி வேருமாயிருப்பது செபமாலை தான் - 13ம் சிங்கராயர்

4. பிசாசுகளை விரட்டியடிக்கவும், பாவத்திலிருந்து பாதுகாக்கவும் வலிமையான ஆயுதமாயிருப்பது செபமாலையே. - 11ம் பத்திநாதர்.

5. செபமாலை தான் நான் பெரிதும் விரும்பும் செபம் - 2ம் ஜோன்போல்

### சிந்தனைக்கு

செபமாலை பக்தியின் மூலமாக மரியாளையும் மகன் இயேசுவையும் நம் குடும்பத்திற்குள் கொண்டு வருவோம். அவர்களது வருகையினால் கானாவூர் குடும்பத்தைப் போன்று. எலிசபெத்தின் குடும்பத்தைப் போன்று எல்லா நலனும், ஆசீரும் நமது குடும்பங்களுக்கு வந்து சேரும்.

குடும்பத்தில் செபமாலை சொல்வது மிகவும் அவசியம். ஏனெனில் கூடி செபிக்கும் குடும்பம் கோடி நன்மை பெறும். எங்கே இருவர், மூவர் கடவுள் பெயரால் கூடி செபிக்கிறார்களோ அங்கே கடவுள் தங்குகிறார். குடும்ப செபம், செபமாலை சொல்லும் போது நம் குடும்பமும் திருக்குடும்பத்தைப் போன்று மாறுகிறது. செபிக்கும் குடும்பத்தில் சண்டை, சச்சரவு இருக்காது. அன்பு, பாசம், நேசம் மட்டுமே இருக்கும்.

### செபமாலையின் பலன்கள்

1. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய முழுமையான அறிவை, படிப்படியாக நமக்குக் கொடுக்கிறது.

2. நம்முடைய ஆன்மாவை பாவத்திலிருந்து தூய்மையாக்குகிறது.

3. நம்முடைய எல்லாவிதமான எதிரிகளிடமிருந்தும், நமக்கு வெற்றியைக் கொடுக்கிறது.

4. நற்பண்புகளை எளிமையாகக் கடைப்பிடிக்க நமக்கு உதவுகிறது.

5. செபமாலை இறை அன்புத் தீயை நம்முள் மூட்டுகிறது.

6. இறை அருளால் மற்றும் கொடைகளால் நம்மை நிரப்புகிறது.

7. கடவுளுக்கும் நம் அயலவருக்கும் நாம் செலுத்த வேண்டிய கடனை அடைக்கத் தேவையான அனைத்தையும், நமக்குக் கொடுக்கிறது. இறுதியாக எல்லாவிதமான அருள்வரங்களையும் கடவுளிடமிருந்து பெற்றுத் தருகிறது.

---

**"என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல. என்னை அனுப்பினவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன். அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பினவரின் திருவுளம். மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலை வாழ்வு பெற வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம்" (யோவான் 6:35-40)**

# நிலை வாழ்வு பெற வேண்டும்





## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

154

நாம் எமது விசுவாசம், நம்பிக்கையை எமது பிள்ளைகளுக்குக் கடத்தியுள்ளோமா? இன்று எமது பிள்ளைகள் வாழும் சூழல் தொழில் நுட்பம் வளர்ந்த சூழலாகும். போதை, ஆடம்பரம், காமத்தைப் பிழையாகப் பாவிப்பது போன்ற பல சீர்கேடுகள் சூழ்ந்துள்ளன. இதில் பணம்தான் முக்கியம் என்ற நிலையில் ஒவ்வொரு பெற்றோரும் போட்டி வாழ்வில் அகப்பட்டு குடும்பமாக இருந்து கதைக்கவும் நேரம் இல்லாது அலைகின்றனர். தொலைக்காட்சியில் காட்டப்படும் திரைப்படங்கள், நாடகங்களுக்கு அடிமையாகி வாழ்கின்றனர். தாய் மொழியை மறந்து ஆங்கிலம், அல்லது சிங்கள மொழிகளில் தமது பிள்ளைகளைக் கற்க அனுப்புகின்றனர். வீட்டில் ஒரு வாழ்வு. கோயிலில் ஒரு வாழ்வு வாழ்கிறார்கள். மற்றவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதிலேயே கவனம் செலுத்தி ஆடம்பர வாழ்வு வாழ்கின்றனர். இறைவனில் நம்பிக்கை வைக்காது சாத்திரம், சகுனம் பார்த்தல் போன்ற பல மூடநம்பிக்கைகளுக்கு அகப்பட்டு வாழ்கின்றார்கள். மறைக்கல்வியும் பரீட்சைக்காகவே சொல்லிக்கொடுக்கப் படுகின்றது. பெற்றோரே முதல் மறைக்கல்வி ஆசிரியர். பெற்றோரின் வாழ்வு முன்மாதிரியாக உள்ளதா? மறைக்கல்வி ஆசிரியர்களின் வாழ்வு, முன்மாதிரியாக உள்ளதா? ஆன்மீகத் தலைவர்களின் வாழ்வு முன்மாதிரியாக உள்ளதா? பாடசாலை ஆசிரியர்களின் வாழ்வு முன்மாதிரிகையாக உள்ளதா?


இவற்றைச் சிந்திக்கும் போது எமது வாழ்வு எப்படி என்பதைப் புரிந்து கொள்ள முடியும். பெற்றோராகிய நாம் சடங்குகளையும், வழிபாடுகளையும், பக்தி முயற்சிகளையும் தவறாது செய்கிறோம். ஆனால் எமது வாழ்வில் ஆன்மீகம் உள்ளதா? அன்பு செய்வது, மன்னித்து மறப்பது, எளிமை வாழ்வு, சமத்துவம், நீதி நேர்மையுடன் வாழ்வது, பகிர்ந்து வாழ்வது இவையே ஆன்மீகமாகும். இவை எமது வாழ்வில் இல்லையேல் பிள்ளைகள் யாரைப் பார்த்துப் பின்பற்றுவது? இதனால் பிள்ளைகள் தமது நண்பர்கள் கூறுவதை நம்புகின்றார்கள். நண்பர்களே அவர்களை வழிநடத்துகின்றார்கள். பிள்ளைகள் நல்ல நண்பர்களுடன் சேர்கின்றார்களா? அல்லது கெட்ட நண்பர்களுடன் சேர்கின்றார்களா? இதைக் கவனிக்கின்றோமா? இதைக்கவனிக்க நாம் நேரம் ஒதுக்குகின்றோமா? வீட்டில் கணவன் மனைவி பிள்ளைகள் கலந்துரையாடுகின்றோமா? என்னைக் கண்டவுடன் எனது குடும்பத்தில் உள்ளவர்களுக்கு எப்படிப் பட்ட உணர்வு வருகின்றது? பயமா? கோபமா? வெறுப்பா? என்பதைச் சிந்திக்கின்றோமா?

வெறும் சடங்குகளையும், பக்தி முயற்சிகளையும் வழிபாடுகளையும் மட்டும் செய்தால் போதுமா? பணம், சொத்து, பதவி, புகழ், பட்டம் பெற்றால் மட்டும் போதுமா? நித்திய வாழ்வு பற்றிச் சிந்திக்கமாட்டோமா?

**இன்று இவற்றைச் சிந்தித்து மனம் மாறுவோம் சிந்திப்போம். செயற்படுவோம்.**

தொடரும்

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## உயிர்ப்புக்காலம் 6வது ஞாயிறு (06.05.2018)

» பேதுரு «

**வாசக விளக்கம்:** உயிர்ப்புக் காலத்தின் ஆறாம் வாரத்தில், ஆண்டவர் இல்லத்தில் ஒன்று கூடி வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே! உலகம் உய்யவேண்டுமானால் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அன்பு பரிணமிக்க வேண்டும். இறைவன் எம்மீது எவ்வளவு அதிகம் அன்பு கொண்டுள்ளார் என்பதை உணரவேண்டும். எல்லோரும் நம் சகோதரர்கள் என்னும் பரந்த மனப்பான்மை ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடிகொள்ள வேண்டும். இன்றைய நற்செய்தியில் “நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே எனது கட்டளை என்கிறார் இயேசு. முதல் வாசகத்தில் பேதுரு இறைவன் எமக்குக் கொடுத்துள்ள அன்பு, சாதி, மதம், நிறம், மொழி, நாடு இவற்றை கடந்து செல்லும் ஒன்றாக விளங்கவேண்டும் என்கிறார் இரண்டாம் வாசகத்தில் யோவான் அன்பு என்பது கடையில் வாங்கி விற்கக்கூடிய ஒரு பொருள் அல்ல மாறாக அன்பு கடவுளிடம் உள்ளது. அவரிடமிருந்து நமக்கு கொடையாக கொடுக்கப்பட்டுள்ளது என்கிறார். எனவே அன்புடனும், ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வரம் வேண்டி பலியில் இணைவோமாக...

**முதல் வாசகம் : தி.ப 10:25-26, 34-35, 44-48**

தூய ஆவியின் கொடை பிற இனத்தவர் மீதும் பொழியப்பட்டது.

**பதிலுரைப் பாடல் :**

பிற இனத்தார் முன் ஆண்டவர் தம் நீதியை வெளிப்படுத்தினார்.

**இரண்டாம் வாசகம் : 1 யோவா 4:7-10**

கடவுள் அன்பாய் இருக்கிறார்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா என்மீது அன்பு கொண்டுள்ளவர் என் சொல்லைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர் மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடி கொள்வோம் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 15:9-17**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவோடு இணைந்திருந்து வாழ்வின் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள இறைமக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் திருஅவைக்காக உழைத்திடும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவருக்கும் உமது அன்பான ஆசீரை என்றும் நிறைவாக வழங்கிட வேண்டுமென்று...

சாதி, சமயம், மொழி இவற்றால் நாட்டு மக்கள் மத்தியில் பிரிவினைகளை ஏற்படுத்தாமல் அனைவரையும் ஒரு தாயின் பிள்ளைகளாக மதித்து ஏற்றத்தாழ்வு, பாராபட்சம், பாராமுகம் காட்டாமல் அனைவரையும் ஒரே சீராய் நடத்த நாட்டின் தலைவர்களும் பெரியவர்களும் முன்வர வேண்டுமென்று...

நமது அன்பு பிறரை அடக்குவதற்கல்ல ஆட்கொள்வதற்கே என்பதைப் புரிந்து கொண்டவர்களாக நம்மை நாம் அன்பு செய்வது போல பிறரை நாம் அன்பு செய்யவும், இயேசு நம்மை அன்பு செய்வது போல நாமும் மற்றவர்களை அன்பு செய்யவும், இறையன்பில் நிலைத்திருந்து பிறரன்பை பகிர்ந்து வாழ வரமருள வேண்டுமென்று...

## ஆண்டவரின் விண்ணேற்பு (13.05.2018)

**வாசக விளக்கம்:** தாய்த் திருச்சபையோடு இணைந்து ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழாவைக் கொண்டாட ஒன்றுகூடி வந்துள்ள அன்பின் இறைமக்களே! இயேசுவின் விண்ணேற்ற விழாவானது நம் ஒவ்வொருவருக்கும் ஒரு முன் அடையாளமாக இருக்கின்றது. உயிர்த்த 40 நாட்களுக்குப் பிறகு விண்ணகம் சென்ற இயேசு எவ்வாறு தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கின்றாரோ அவ்வாறே நாமும் ஒரு நாள் விண்ணகம் செல்வோம் என்பதேயாகும். இன்றைய நற்செய்தியில் இயேசு தம் சீடர்களிடம் “உலகமெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்” என்கிறார். இது பணியின் பொறுப்பை எமக்கு எடுத்துரைக்கின்றது. இதன் வழிநின்று தூய பவுல் அடியாரும் இயேசுவின் வார்த்தைகளுக்கு நாம் செயல்வடிவம் கொடுக்கும் விதத்தை விளக்குகிறார். இன்றைய விழா நமக்கு இன்னுமொரு கருத்தையும் முன்வைக்கிறது. விண்ணேற்பு என்பது வெறும் வான் வீட்டிற்கு செல்வது அல்ல மாறாக நாம் நம்முடைய பழைய கசப்பான பாவ வாழ்வை விட்டு புதிய வாழ்வை நோக்கிப் பயணம் செய்ய வேண்டும் என்பதேயாகும். இச்சிந்தனைகளோடு இயேசுவின் விண்ணேற்பு விழாவில் பங்குபெற பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : தி.ப 1:1-11**

எங்கள் கண்கள் முன்பாக இயேசு மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார்.

**பதிலுரைப் பாடல் :**

எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகிறார் ஆண்டவர்.

**இரண்டாம் வாசகம் : எபேசி 4:1-13**

கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறும் அளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மாற் 16:15-20**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கடவுளால் கொடுக்கப்பட்ட பணியை இயேசு எவ்வாறு நிறைவேற்றினாரோ அவ்வாறே இயேசுவால் கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றும் திருஅவையின் தலைவரான திருத்தந்தையும் ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரும் நற்செய்திப் பணியை இன்னும் ஆழமாக தொடர்ந்தாற்ற வேண்டிய ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று...

எமது பணி வாழ்வின் பொறுப்பை நினைவூட்டும் விண்ணேற்பு பெருவிழாவைக் கொண்டாடும் நாம் அருட்சாதனங்கள் வழியாக இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்து நற்செய்திப் பணி வாழ்வில் ஈடுபடவும், பவுல் அடியார் கூறுவது போல மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் பணிகளில் ஈடுபடவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசுவின் விண்ணேற்பு நாளான இன்று மனிதனை மதித்து வாழவும், மனித மதிப்பீடுகளைப் பின்பற்றி ஒரு முழுமையான கிறிஸ்தவனாக மாறவும், விண்ணகம் நமது தாய் நாடு, அங்கிருந்து நாம் வந்தோம், அங்கேயே நாம் செல்வோம் அங்கு இயேசுவுடன் நாம் இணைந்திருப்போம் என உணரவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...



# அன்னையர் தினம்

13.05.2018

இயேசு தம் தாயையும், அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம் “அம்மா, இவரே உம் மகன்” (யோவா 19:26-27) என்று கூறி தாயின் முக்கியத்துவத்தை நமக்கு வெளிப்படுத்தினார் இயேசு.

அம்மா என்றால் அன்பு, தெய்வம், பாசம், தியாகம் எனும் வார்த்தைகளுக்கு மயங்கும் தாய்மையின் உலகம் இது. உலகமே தாயின் இதயத்தில், அவளது பிள்ளைகளும், அவர்களின் நலன்கள் மட்டுமே அடங்கியுள்ள சின்னஞ்சிறு உலகமிது. ஆனால், அதற்குள் தோன்றும் அன்பு வெள்ளமோ வானத்தைப் போன்று பரந்து விரிந்தது. அம்மாவின் அன்பு ஆர்ப்பரிக்கும் கடலைப்போல் அல்லாமல் அமைதியான நதியைப் போன்றது. ஒரு குழந்தை பிறக்கும்போது ஒரு தாயும் உருவாகிறாள். அவளுக்குள் தாய்மையும் பிறக்கின்றது. தன் பிள்ளைகளுக்கு நோய் வந்துவிட்டால் “எனக்கு வந்திருக்கக்கூடாதா?” என்று வேதனையுடன் “என் உயிரை எடுத்துக்கொள் தெய்வமே. என் பிள்ளையின் உயிரை கொடுத்துவிடு” என்று ஆண்டவரிடம் மன்றாடுபவள் தாய்.

உடலில் சுமந்து, உயிரைப் பகிர்ந்து, உருவம் தந்த தெய்வம் அம்மா. கோபித்துக் கொண்டால் சமைக்காமல் படுத்துக் கொள்வது மனைவி. சமைத்து வைத்துவிட்டு படுத்துக் கொள்பவள் அம்மா. உலகத்தில் அப்பா முதல் மற்ற அனைவரையும் அடையாளம் காட்டி, நம் முகம் வாடினால் நொந்து போவாள். நம் முகம் மலர்ந்தால் சந்தோஷமடைபவள், நம் தேவைகளைப் பார்த்து பார்த்து செய்பவள், வாய்க்கு ருசியாக சமைத்து கொடுப்பவள், எந்நாளும் நம் முன்னேற்றத்தை மனதில் வைத்து நம் நலனுக்காகவே பிரார்த்திப்பவள் அன்னை.

மழையில் நனைந்து கொண்டே வீட்டுக்கு வந்தால் “குடை எடுத்துப்போக வேண்டியது தானே?” என்பான் அண்ணன். “எங்கேயாச்சும் ஒதுங்கி நிற்க வேண்டியதுதானே” என்பாள் அக்கா. “சளி பிடிச்சுக்கிட்டு செலவு வைக்கப் போற பாரு” என்பார் அப்பா. தன் முந்தானையால் நம் தலையை துவட்டிக்கொண்டே மழையை திட்டுவது தாய் மட்டுமே.

அம்மா அடுப்படியில் தன் வாழ்நாளைக் கழித்தாலும் அம்மாவைப்போல் அதிபுத்திசாலி உலகிலில்லை. யார் யாருக்கு எது பிடிக்கும் என்று பார்த்து பார்த்து தனது சமையல் ராஜ்சியத்தின் இரகசியத்தை விட்டுக் கொடுக்காமல் காணாமல் போன சிப்பைக்கூட சரியான இடத்தைச் சுட்டிக் காட்டுபவள் அன்னை.

அம்மா ஒரு களஞ்சியம். நல்ல விதையை மனதில் விதைப்பவர். நல்பழக்கத்தை சொல்லிக்கொடுப்பவர். என்ன விலை கொடுத்தாலும் கிடைக்காதது அம்மாவின் பாசம். தள்ளாத வயதிலும் கிழக்கு சீனாவின் அன்ஹீய் மாகாணத்தில் வசித்து வரும் 98 வயது மூதாட்டி ஸ்ழாங், 60 வயது மகனைக் கடந்த 20 ஆண்டுகளாக பக்கவாத நோயினால் பாதித்து படுத்தப் படுக்கையாகக் கிடப்பவரை கவனித்து வருவது தாயன்பு என்ற உன்னத மந்திரத்தைச் சொல்கிறது. மகனுக்கு உணவூட்டுவது அவரது மலத்தை துடைத்து சுத்தம் செய்வது என இந்தத் தள்ளாத வயதிலும் பணிவிடை செய்துவரும் இந்த மூதாட்டியை தாய்மையின் அடையாளம் என்று சீனத்து மக்கள் போற்றிப் புகழ்கின்றனர். சில சமூக ஆர்வலர்கள் தாங்களாகவே முன் வந்து நிதி திரட்டி ஒரு லட்சம் யுவான்களை அந்தக் குடும்பத்திற்கு அன்பளிப்பாக வழங்கச் சென்றனர். வறுமை நிலையானாலும் தனது சொந்த பணத்தில் வாழ்வதையே விரும்பும் அந்தச் சீன மூதாட்டி பணத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, வந்தவர்களை ஆசீர்வழங்கி வழியனுப்பியுள்ளார்.

“அம்மா: உலகிலுள்ள உன்னதமான வார்த்தைகளில் உயர்வானது. நீல வானில் ஊஞ்சல் கட்டுவதுபோல் பத்துப் பௌர்ணமிகள் சுமந்து முத்துப்போல் பெற்றெடுத்துக் காத்து, காலம் முழுவதும் தனக்காகவன்றி குழுந்தைகளுக்காக வாழும் தெய்வம் தாய். “ஈன்று புறந்தருதல் அன்னைக்குகடனே” என்ற புறப்பாடல் குழந்தையை உருவாக்கும் பணியில் முதலிடம் தருவதைச் சுட்டுகிறது. தாய் தவிர சகலமும் வாங்கலாம்.

“உண்டாக்கி பாலூட்டி வளர்த்த தாயை உமையவளன்றி யீரோ தாய்க்கு மேல் இங்கேயோர் தெய்வமுண்டோ?” என்ற பாரதியார் தாயைத் தெய்வத்திற்கு இணையாகப் பாடியுள்ளார்.

“தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை. அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை” என்கிறது தமிழர்களின் கொள்கை. “மாதா, பிதா, குரு, தெய்வம் என்று அன்னையை முதன்மைப்படுத்துகிறது நம் தமிழ்ப் பண்பாடு. “தாயின் பாதத்தின் கீழ் சொர்க்கம் இருக்கிறது” என்பார் முகமது நபி. “அம்மா என்றழைக்காத உயிரில்லையே அம்மாவை வணங்காத உயர்வில்லையே” என்று அம்மாவின் பெருமையைப் பற்றி சினிமா பாடல் கூறுகிறது.

இரவு பகலாய் ஓடியோடி பணம் தேடி, ஓடாய்த் தேயும் தாய்மார்களுக்கு வாழ்த்து சொல்வோம். நம் வாழ்வில் வளம் கூடும்.

# நல்லாயன் ஆண்டில் இறைவனின் திராட்சைத் தோட்ட பணியாளர்களாக 12 புதிய அருட்பணியாளர்கள்.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இறைபணியினை நிறைவேற்ற 12 புதிய தியாக்கோன் அருட்சகோதரர்கள் குருக்களாக திருநிலைப்படுத்தவுள்ளனர். 2018 வைகாசி மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் கொழும்பு உயர் மறைமாவட்ட அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் குருத்துவ திருநிலைப்படுத்தல் இடம்பெறும். இப் 12 அருட்சகோதரர்களும் கடந்த 2017 மார்கழி 9ம் திகதி தேவத்தை, இலங்கை அன்னை திருத்தலத்தில் கர்தினால் ஆண்டகையினால் திருத்தொண்டர் நிலைக்கு உயர்த்தப்பட்டனர்.



### அருட்சகோதரர். நிரஞ்சன் மார்ஷல் பீரிஸ்.

பிறப்பு : 1978 தை 10ஆம் திகதி.
பெற்றோர் : திரு. கார்தி லியனகே நிக்கலஸ் பீரிஸ் திருமதி. கொடிகாவத்த அப்புஹாமிலாகே தொன் மாக்ரட்
பங்கு : கெப்புங்கொட

**இவர் தனது முதலாவது திருப்பலியை வைகாசி மாதம் 13ம் திகதி காலை 8.30 மணிக்கு துன்கால்பிட்டிய புனித மரிய மக்தலேனா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். கிஹான் நிலுஷன் பர்னாந்து

பிறப்பு : 1989 ஐப்பசி 25ஆம் திகதி.
பெற்றோர் : திரு. வர்ணகுலசூரிய ஜெனீஷியஸ் பர்னாந்து திருமதி. மேரி பெக்ஷிடா பர்னாந்து
பங்கு : நீர்கொழும்பு, கடற்கரைத்தெரு

**இவர் தனது முதலாவது திருப்பலியை வைகாசி மாதம் 13ம் திகதி காலை 7.00 மணிக்கு நீர்கொழும்பு கடற்கரைத்தெரு புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். பிரசாத் ரங்கன பெரேரா.

பிறப்பு : 1981 புரட்டாதி 29ஆம் திகதி
பெற்றோர் : காலஞ்சென்ற கொஸ்வத்தகே பெட்ரிக் எனக்லீட்ஸ் பெரேரா, காலஞ்சென்ற ஜசின்தா அயிராங்கனி பெரேரா
பங்கு : வெலிவேரிய

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 13ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, வெலிவேரிய புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். சமில கிரிஷாந்த பர்னாந்து

பிறப்பு : 1989 மார்கழி 16ஆம் திகதி
பெற்றோர் : காலஞ்சென்ற குருகே பீடர் கிரிஸ்டி பர்னாந்து, திருமதி. மஹாதல்கே மேரி பெற்றிமா பீரிஸ்
பங்கு : கட்டுகுருந்து

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 13ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, கட்டுகுருந்து புனித மரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். பெத்தும் சின்த்தக்க.

பிறப்பு : 1987 மார்கழி 02ஆம் திகதி
பெற்றோர் : திரு. மாகவிடகே சுனில் பெனடிக் பெரேரா. திருமதி. மார்கரீடா ஜொயிஸ் ஐயமான்ன
பங்கு : உஸ்வெடகெய்யாவ

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 13ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு, உஸ்வெடகெய்யாவ, புனித மரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். சுமேத பெத்தும் பொன்சேக்கா

பிறப்பு : 1990 பங்குனி 14ஆம் திகதி
பெற்றோர் : திரு. வழிமுனி ஹென்றி சுமித் பொன்சேக்கா திருமதி. ஜெனட் டீடா மாலினி பர்னாந்து
பங்கு : றாகமை

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 13ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, றாகமை புனித பேதுரு, பாவுலு ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். ரன்ஜித் கலமன்த்த எதிரிசிங்க.

பிறப்பு : 1989 தை 13ஆம் திகதி
பெற்றோர் : திரு கலெமென்ட் எதிரிசிங்க திருமதி. எமில்டா எதல் ரத்நாயக்க
பங்கு : வெலிவிட்ட

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 13ஆம் திகதி காலை 9.00 மணிக்கு, வெலிவிட்ட புனித மரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். அமில மதுரங்க ஜயதிலக.

பிறப்பு : 1990 வைகாசி 26ஆம் திகதி
பெற்றோர் : திரு புலுன்குட்டி ஆராச்சிகே தென் ஹிலரி மெக்ஸிமஸ் ஜயதிலக, திருமதி. செனரத் முதலிகே மேரி மார்க்ரட் செனரத்
பங்கு : உஸ்வெடகெய்யாவ

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 13ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு, உஸ்வெடகெய்யாவ, புனித மரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். சனத் உதார சேனாதீர

பிறப்பு : 1989 பங்குனி 02ஆம் திகதி
பெற்றோர் : அமரர். சேனாதீரகே தொன் ஜோசப் ஸ்டென்லி திருமதி. எதிகே இந்ராணி மானெல் சில்வா
பங்கு : றாகமை

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 13ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, றாகமை, புனித பேதுரு, பாவுலு ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். சமேஷ் என்டனி

பிறப்பு : 1990 ஆடி 08ஆம் திகதி
பெற்றோர் : திரு. என்சலம் ரோய் போல்சிங், திருமதி. பலிஹவடன ஆராச்சிகே திரிஷா ஜூலியட் பெரேரா
பங்கு : களனி

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 13ஆம் திகதி காலை 8.30 மணிக்கு, களனி, பிலபிட்டிய புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். யொஹான் ப்லெசி பர்னாந்து

பிறப்பு : 1989 சித்திரை 04ஆம் திகதி
பெற்றோர் : திரு. வர்ணகுலசூரிய சிரில் அலெக்ஸ் பர்னாந்து திருமதி. ஆன் எனிட்டா பர்னாந்து
பங்கு : நீர்கொழும்பு, கடற்கரைத்தெரு

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 13ஆம் திகதி காலை 7.30 மணிக்கு, நீர்கொழும்பு கடற்கரைத்தெரு புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



### அருட்சகோதரர். ஹிருஷான் ஹசன்த்த பர்னாந்து

பிறப்பு : 1990 ஐப்பசி 24ஆம் திகதி
பெற்றோர் : திரு. வர்ணகுலசூரிய புசாபதுகே டக்லஸ் விஜயானந்த பர்னாந்து, திருமதி. ப்ரீதி சந்தியா நிஷான்தி டயஸ்
பங்கு : தியலகொட

**இவர் தனது முதற்திருப்பலியை வைகாசி மாதம் 13ஆம் திகதி காலை 09.00 மணிக்கு, தியலகொட புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.**



12 அருட்சகோதரர்களும் கடந்த 2017 மார்கழி 9ம் திகதி தேவத்தை, இலங்கை அன்னை திருத்தலத்தில் கர்தினால் ஆண்டகையினால் திருத்தொண்டர் நிலைக்கு உயர்த்தப்பட்டனர்.

தகவல்கள் மற்றும் படங்கள்: சுனில் பர்னாந்து, றொஷான் பிரதீப்






# உழைப்பின் பெருமை...?

உழைப்பினது உயர்வினை உள்ளமதால் போற்றுதற்கு
உலகமது உயர்கொடையாய் உவந்திருக்கும் இந்நாளில்
உழைப்பவரைப் போற்றிடுவோம் உணர்ந்திடுவோம்
அவர் வாழ்வை
உரைத்திடுவோம் சமத்துவத்தை உணர்த்திடுவோம் உலகினிற்கு

பாடி வரும் பாட்டாளிகள் படுகுழியில் வீழுவதேன்?
கூடி வரும் தேனீக்கள் கூடுகளை இழப்பதுமேன்?
ஓடி வரும் மனிதர்களை சாதி சொல்லி தடுப்பதேன்?
நாடி வரும் இறையடியாரை மத வெறிக்குள் தள்ளுவதேன்?

இடி இடித்த மனிதனுக்கு கொடிய துன்பம் வருவதேன்?
அடி எடுத்து வைக்க இடம் மறுத்து மனம் கறுப்பதேன்?
குடி கெடுக்க நினைப்பவர்கள் முடி எடுக்க நினைப்பதேன்?
படி கொடுக்க இறைவனவன் கொடி அசைக்க மறப்பதேன்?

தீமைகளைத் தினம் தினமாய் நினைப்பவர்கள் வாழ்வதேன்?
திருத்தமான கூலிகளைத் திருடிச் செல்வோர் பிறப்பதேன்?
நன்மைகளை நாள்தோறும் செய்பவர்கள் மடிவதேன்?
நலிந்தவரைக் காப்பவர்கள் நடு வழியில் மறைவதேன்?

சீதனத்தை உயர் மட்டம் சிந்திக்க மறுப்பதேன்?
ஏதனத்தில் ஏறி நின்று ஏழைகளை வருத்துவதேன்?
நூதனத்தில் வளர்ந்து கொண்டும் நுண்ணறிவை மறப்பதேன்?
மேதினத்தில் மேடையேறி மெய் மறந்து பேசுவதேன்?

உழைக்கும் உள்ளங்கள் வாழ்வினில் உருகுவதேன?
களைத்த நிலை கண்டும் கருத்துரைக்கத் தயங்குவதேன்?
உழைக்கும் கரங்களெல்லாம் உறுயற்று நிர்ப்பதுமேன்?
உருக்குலையும் நிலை கண்டும் உலகம் கண் மூடுவதேன்?

உன்னத இறையவனின் உரிமை மகன் இயேசுபிரான்
உவந்தளித்த வார்த்தைகளை உரைத்து நிற்கும் பவுலடியார்
“உழைக்காதவர் உண்ணுதற்கு உரிமையினை அற்றவர்” என்ற
உண்மையை உணர்ந்திடுவோம் உழைப்பினைப் போற்றிடுவோம்

உழைப்பார் நாளும் உயர்வடைவார் மற்றவர்
வாழ்வில் தாழ்வடைவார்
உரைத்தனர் ஆன்றோர் நல்லொழுக்கம் மந்திரமாக
அன்றொரு நாள்
உதரம் நிரப்ப உதிரம் சிந்தும் உன்னத மாந்தரை நாள்தோறும்
உளமாரப் போற்றி உவப்புடனே உழைப்பின் பெருமையை
சாற்றிடுவோம்

**அருட் சகோ. றமேஸ் அ.ம.தி**

# இந்த 132வது மே தினமாவது “தொழிலாளர்” என்று முத்திரையிட்ட வேறுபாட்டை வேரறுத்து விடுமா?

அன்று இயேசு உழைப்புக்கு கொடுத்த உயர்ந்த மாண்பு எங்கே? மதிப்பு எங்கே? இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது தந்தையின் தச்சுத் தொழிலை தனது தொழிலாக ஏற்று மதித்து கடினமாக உழைத்தார். அதனால் உழைப்பாளர்களை உயர்வாகக் கருதினார்.

இற்றைக்கு 132 வருடங்களுக்கு முன் சிக்காக்கோ நகரில் வெடித்த தொழிலாளர் புரட்சியே தொழிலாளர் வர்க்கத்திற்கு விடுதலை பெற்றுத் தந்தது. அன்று கிடைத்த தொழிலாளர் விடுதலையே இன்று மே தினமாகவும், தொழிலாளர் தினமாகவும் கொண்டாடுகின்றோம்.

## எல்லா உழைப்பும் சமமானது தான்

யார் இந்த தொழிலாளர்கள்? அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள், தோட்டங்களில் பணி புரிபவர்கள், விவசாயிகள், உழவர்கள், வீடுகளில் பணிபுரிபவர்கள், கூலித்தொழில் புரிபவர்கள், வியாபாரிகள் எல்லோருமே தொழிலாளர்கள்தான் எல்லா உழைப்பும் சமமானது தான்.

இறப்பர் தோட்டத்தில், தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கின்ற தமிழனும், தமிழச்சியும் மாத்திரமா தொழிலாளர்கள்? இழிச்சவாயன்கள், இழிச்சவாய்கள்? எப்போ இந்த தொழிலாளி - முதலாளி என்ற வேறுபாடு நீங்கும்? இன்றைய உலகில் பணம், பதவி, படிப்பு, அந்தஸ்து இவைகளுக்கு தான் மதிப்பு. மனித நேயத்திற்கு, மனித மாண்பிற்கு மதிப்பே இல்லாமல் போய்விட்டது. முதலாளி என்றால் உயர்ந்தவர்கள், தொழிலாளி என்றால் தாழ்ந்தவர்களா?

## மாற்றாந்தாய் பிள்ளை நிலை

இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட மலையக மக்கள் இன்னும் லயன் காம்பிராக்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சுகாதார வசதி, நீர் வசதி, மலசல கூடங்கள் வசதி குறைவு, தோட்டப் பாடசாலைகளிலும் அப்படியே கட்டிட வசதிகள் குறைவு. இன்னும் ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகிறது. ஏன் இந்த மாற்றாந்தாய் பிள்ளை நிலை? அரச நிறுவனங்களில் எத்தனை தமிழர்கள் தொழில் புரிகிறார்கள்? வைத்தியசாலையில்? கச்சேரியில்? தபால் கத்தோரில்? பொலிஸ் ஸ்டேஷனில்? கல்விக் காரியாலயத்தில்? பரிமாறும் கடிதங்கள் அனைத்தும் தமிழில் தயாரிக்கப்படுகிறதா? தோட்டக் காரியால-யங்களில்? தோட்ட உத்தியோகத்தவர்கள்? அரச பஸ் வண்டிகளில்? எத்தனை தமிழர்கள் வேலை செய்கிறார்கள்? இது தமிழன் தலைவிதியா? எது என்னவானாலும் நம் ஆண்டவர் இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது தமது வளர்ப்புத் தந்தையாகியே சூசையின் தச்சுத்தொழில் வேலையை தமது தொழிலாக ஏற்றுக் கொண்டார். தமது தந்தையிடம் அக்கறையோடும், ஆர்வத்தோடும், ஆக்கத்-தோடும், ஊக்கத்தோடும் கற்றுக்கொண்டார். நமது இயேசுவை “இவர் தச்சனின் மகனல்லவா” என்று கொச்சைப் படுத்திய போதும் இயேசு ஆண்டவர் சோர்ந்து விடவில்லை. உற்சாகமாகவே உழைத்தார்.

## இயேசுவின் நண்பர்கள் மீனவர்கள்.

இன்று உலக இரட்சகரான இயேசு அன்று சட்ட வல்லுனர்களையும், வழக்கறிஞர்களையும் தேடவில்லை. மாறாக மீனவர்களை தமது நண்பர்களாக்கிக் கொண்டார். மனித உழைப்புக்கு மாண்பைக் கொடுத்தார். மனித நேயத்தை மதித்தார். நம் ஆண்டவர் இயேசுவைப் போல், அவர் தந்தை சூசையைப் போல் நாம் செய்யும் எமது தொழிலை மதிப்போம். “செய்யும் தொழிலே தெய்வமாம். அந்த திறமை தான் எமக்கு பெருமை” நாம் செய்யும் வேலையினால் மற்றவர்கள் நம்மை இகழ்ந்தாலும் அதை நாம் இறைவன் தந்த கொடையாக நினைத்து, மற்றவர்களுக்கு நன்மை செய்யவும், நல்லதை நினைக்கவும் முயல்வோம்.

**மேரி இருதயநாதன் (மறையாசிரியர்)**
**பேராலயம், இரத்தினபுரி**




மாணவர்களே! உங்களது ஆக்கங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை, கொழும்பு - 08.




## விடுகதைகள்

### திருத்தூதர் பணிகள் 15-28 அதிகாரங்கள்

01. நம்பிக்கையின் தாய் யூதப் பெண். நம்பிக்கையின் தந்தை கிரேக்கம். நம்பிக்கையின் பிள்ளை இவர். இவருக்கு விருத்தசேதனம் செய்து நம்பிக்கையுடன் அழைத்துச் சென்றவர்.


02. எல்லாம் தெரியும் கடவுளுக்கு கண் தெரியாத நேரம் அவர்களை பொருட்படுத்தவில்லை. எவர்களை? எப்போது?

03. கண்ணிருந்தும் காணாததால், காதிருந்தும் கேளாததால் உள்ளத்தாலும் உணராததால் நீங்கள் தள்ளியப் பரிசை அடுத்த இனத்தார்க்கு அளித்துள்ளார். அது என்ன? கூறியது யார்? பரிசு என்ன? யாருக்கு?

04. சண்டையிது சண்டையிது விவாதத்தின் சண்டையிது உண்டென்றது ஒரு கூட்டம், இல்லை என்றது மறுக் கூட்டம். மத்தளத்திற்கும் இருபக்கமும் அடி மாட்டிக்கொண்டார் இவர்?

05. எனது ஊர் அலக்சாந்திரியா. நான் ஒரு யூதன், சொல்வன்மை மிக்கவன். மறைநூல் புலமை உடையவன். யோவானின் திருமுழுக்கை மட்டும் அறிந்தவன். நான் யார்?

## 4. தனிச் செபப் பழக்கம்




**01. திருச்சிலுவை அடையாளமிட்டு மன்றாடும் (சிறியது)**

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே ஆமென்.

**02. திருச்சிலுவை அடையாளமிட்டு மன்றாடும் (பெரியது)**

(நெற்றி) புனித சிலுவையின் + அடையாளம்

(வாய்) சாத்தானிடம் இருந்து + எங்களை காப்பாற்றும்

(நெற்றி) எங்கள் + ஆண்டவரே,

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே ஆமென்.

**குறிப்பு:** திருச்சிலுவை அடையாளம் இயேசுவின் வல்லமையுள்ள இறப்பைக் குறிக்கிறது. ஒருவரை அல்லது ஒரு பொருளை அல்லது ஒரு இடத்தைப் புனிதப்படுத்துவதற்காக திருச்சபை இவ்வடையாளத்தை நமக்குத் தந்துள்ளது. இது நமது ஆன்மீக வாழ்வின் குறியீடாகவும் இருக்கிறது. இதை நீர் திருப்பலி வேளைகளில் நற்செய்தி வாசகத்தின்முன் நெற்றியிலும், உதட்டிலும், நெஞ்சிலும் வரைகிறீர். அத்தோடு செபிப்பதற்கு முன்னும், செபித்த பின்னும் வரைகிறீர்.

இச்சிலுவை அடையாளத்தை வரையும் ஒவ்வொரு பொழுதும் வானகத் தந்தை உம்மைப் புனிதப்படுத்துகிறார். உண்ணும்போதும், கற்கும்போதும், விளையாடும்போதும், வேலைசெய்யும்போதும், நீர் இவ்வடையாளத்தை உம்மில் வரையப் பழகும். திருச்சிலுவை அடையாளமிட ஒருபோதும் வெட்கப்படாதீர். திருச்சிலுவை அடையாளமிட்டு வாழ்வது ஓர் உயர்ந்த நம்பிக்கைப் பழக்கம் என்பதை மறவாதீர். (இலங்கை புனிதரான புனித யேசேப்வாஸ் அடிகளாரே பெரிய சிலுவை அடையாளத்தை நம் முன்னோருக்குக் கற்றுக்கொடுத்தார். இச்சிலுவை அடையாளத்தை இலங்கை மக்களான நாம் மட்டுமே பயன்படுத்துகிறோம்).

**03. மூவொரு இறைவனைப் புகழும்**

தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவியாருக்கும் மகிமை உண்டாவதாக:

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

**குறிப்பு:** வானக தந்தையே நமக்கு இப்பூவுலக வாழ்வைத் தருகிறார். இப்பூவுலகில் நம் வாழ்வு முடிந்ததும், நாம் மீண்டும் அவரிடம் போகவேண்டும் என்பதே இவரின் விருப்பம். இங்கு வாழும் இச்சிறிய காலத்தில் நாம் அவரை மகிமைப்படுத்த நீர் முன்னுரிமை கொடும்.

மற்றவர்கள் உம்மைப் புகழும்போது அப்புகழ்ச்சியை வாங்கி, வானகத் தந்தையிடம் கொடுக்கப் பழகும். அப்போது நீர் உம்மைத் தாழ்த்தி, அவரை மகிமைப்படுத்துகிறீர். மாறாக நீர் அவரை மறந்து, இப்பூவுலகப் புகழ்ச்சிகள்மேல் சுயவிருப்பம் கொண்டு இவற்றை சுவைக்கும்போது, நீர் உம்மையே பெருமைப்படுத்திக் கொள்கிறீர். உம்மையே நீர் பெருமைப்படுத்தி பெரிதாக்கிப் பழகினால், வானகத் தந்தையின்மேல் அச்சம் அறுந்தவராய் உம்மை அறியாமலே நீர் பெரும் பாவ இருளுக்குள் செல்கிறீர். எனவே எல்லா நிகழ்வுகளிலும் வானகத் தந்தையை மகிமைப்படுத்தப் பழகிக் கொள்ளும். இவ்வாறு வாழ்வதால் நீர் ஆன்மீகப் பற்றுள்ளவர் ஆகிறீர்.

தொடரும்

அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)

## "ஓடி விளையாடு பாப்பா – நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"

இந்த வரியை யார் சொன்னது என்று பார்க்கிறீர்களா, நான் சொல்லவில்லை. நம்ம பாரதியார்தான் கூறினார். அவர் இதை விளையாட்டுக்காகவோ, பொழுது போக்கிற்காகவோ சொல்லவில்லை. நாம் விளையாட வேண்டும் என்றும் இதைக் கூறினார். நம்மில் பல பேர் சோம்பேறிகளாகவே இருக்கிறோம். காரணம் விளையாடுவது கிடையாது. உங்களிடம் ஒரு சிறிய விஷயத்தை கூற ஆசைப்படுகிறேன். கால்பந்தாட்டத்தில் (Foot Ball) ஒரு குழு (Team) இருக்கிறது. அதன் பெயர் பார்சிலோனா (Barcelone). இந்த அணியிலே ஒரு மாணவன் இருக்கிறான். அவனுடைய குறிக்கோள் என்னவென்றால் நான் ஒரு மிகச் சிறந்த கால்பந்தாட்டக்காரராக (Foot Ball Player) வரவேண்டும் என்பதே அவனுடைய இலட்சியம். இதில் வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால் அந்த மாணவனுக்கு இரண்டு பாதங்களும் கிடையாது. இருந்தபோதிலும் அவன் அந்த குறையை நினைத்து மனவருந்தாமல்தொடர்ந்து பயிற்சி செய்துகொண்டிருக்கிறான். இரண்டு பாதம் இல்லாதவனே எழுந்து வந்து விளையாட வரும்போது அனைத்தும் நன்றாக இருக்கும் நாம் ஏன் சோம்பேறிகளாக இருக்கிறோம். சிந்திப்போம்! முந்தைய காலங்களில் பெற்றோர்கள் குழந்தை பாடசாலை முடிந்து வந்ததும் விளையாடப் போவோமா! என்று கூறுவார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் இந்தாம்மா செல்போன் Game விளையாடு என்று கொடுத்து நம் குழந்தைகளை நாமே சோம்பேறிகளாக ஆக்கிவிடுகிறோம். நம் நாட்டில் பல குழந்தைகளின் கண்கள் பாதிக்கப்படுகின்றன, பல




நோய்கள் வந்துவிடுகின்றன. இதற்கு காரணங்கள் இருந்தாலும் விளையாடாமல் இருப்பது ஒரு முக்கியமான காரணம். நாம் குழுவாகவும், தனியாகவும் விளையாடும் போது நம்முள் புத்துணர்ச்சி கிடைக்கின்றது. மகிழ்ச்சி கிடைக்கின்றது. இதில் சுவாரஷ்யமான விஷயம் என்னவென்றால், பல நேரங்களில் சில விஷயங்களை நினைத்து கவலைப்படுவோம். ஆனால் விளையாடும்போது மட்டும் யாருமே எதைப்பற்றியும் கவலைப்படாமல் மகிழ்ச்சியாக இருப்பார்கள். இதுதான் உண்மை. நாமும் நம் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் அதற்காகதான் கடவுள் நம்மை படைத்திருக்கிறார். இந்த கட்டுரையை படித்துவிட்டு வீட்டில் உட்கார்ந்து T.V பார்க்காமல் வெளியில் சென்றும் சரி, வீட்டிலிருந்தும்சரி விளையாடி பாருங்கள், அப்பொழுது தெரியும் விளையாட்டின் அருமை.




**இறைவன் தான் எங்கும் இருக்க இயலாது என்பதற்காகவே தாயைப் படைத்தான்.**

– யூதப் பழமொழி

**குழந்தையின் எதிர்காலம் தாயின் அன்புக்கரங்களில் தான் சரணடைகின்றது.**

– நெப்போலியன்

**அழகியின் சிரிப்பைவிடத் தாயின் கண்ணீரே வலிமைமிக்கது.**

- ஷேக்ஸ்பியர்

## இப்படத்தில் 6 வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடியுங்கள்!



# இறைவாக்கினர்களை அறிவோம்



## இறைவாக்கினர் மீக்கா

இறைவாக்கினர் மீக்கா யூத நாட்டில் கி.மு 737ல் இருந்து 696 வரை இறைவாக்கு உரைத்தார். விவிலியத்தில் உள்ள 12 சிறிய இறைவாக்கினர்களில் இவரும் ஒருவர். இறைவாக்கினர்கள் எசாயா, ஆமோஸ், ஓசேயா காலத்தில் வாழ்ந்தவர். இறைவாக்கினர் மீக்கா யூதா நாட்டில் உள்ள மோராசேத்தைச் சார்ந்தவர். இவர் யூதர்களின் அரசர்களான யோத்தாம், ஆகாசு, எசேக்கியா காலத்தில் இறைவாக்கு உரைத்தவர். இவருடைய இறைவாக்கு கி.மு எட்டாம் நூற்றாண்டில் எருசலேமில் வாழ்ந்த மக்களுக்கு அருளப்பட்டது. இவர் எருசலேமுக்கும், சமாரியாவுக்கும் வர இருந்த அழிவை முன்னறிவித்தார். அதே நேரத்தில் அழிய இருக்கும் எருசலேம், அழிவுக்குப்பின் மீண்டும் மீட்கப்படும் எனவும் அறிவிக்கிறார். யூத நாட்டு மக்கள் உண்மைக் கடவுளை மறந்து, சிலை வழிபாடு செய்ததையும், நேர்மையின்றி வாழ்ந்ததையும் கடுமையாக சாடுகிறார். மெசியா, பெத்லகேமில் பிறப்பார் என்ற இவரது இறைவாக்கினை, மத்தேயு நற்செய்தியாளர், தமது நற்செய்தியில் குறிப்பிடுகிறார். மீக்கா என்றால் கடவுளுக்கு நிகரானவர் யார்? என்று பொருள்.

### அரசியல் பின்னணி

இறைவாக்கினர்கள் எசாயா, ஆமோஸ், ஓசேயா காலத்தில்தான், இறைவாக்கினர் மீக்காவும் வாழ்ந்ததால், அவர்கள் காலத்திய பின்னணி இவருக்கும் முழுமையாக பொருந்தும்.

இறைவாக்கினர் மீக்கா தென்னாட்டைச் சார்ந்தவர். வடநாட்டின் தலைநகரமான சமாரியா, அசீரியர்களால் அழிக்கப்படுவதற்கு முன் வாழ்ந்தவர். இவர் அசீரிய அரசர் சென்னகிரிபு கி.மு 701ல் யூதா நாட்டை படையெடுத்ததால் ஏற்பட்ட துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்தவர். இவர் கிராமபுறத்தில் பிறந்து வளர்ந்தவர் என்றாலும் கூட, நகர்புற மக்களது அநியாயத்தையும், அக்கிரமங்களையும், ஊழலையும் கடுமையாக எதிர்த்தவர்.

அசீரியர்கள் பாலஸ்தீன நாட்டை படையெடுத்ததின் விளைவினை, கி.மு 743ல் இருந்தே மக்கள் அனுபவித்தனர். இஸ்ரயேல் மன்னர் மெனகேம் கி.மு 743ல் அசீரிய மன்னர் மூன்றாம் திக்லத்பிலேசருக்கு கப்பம் கட்டினார். அதனால் தமது அரசு உறுதியாக நிலைத்திருக்கும் என மெனகேம் நம்பினார் (2 அர. 15:19). கப்பம் கட்டுவதற்காக, மக்களிடம் அதிகமான அளவு வரி வசூலித்தார். இவருக்குப் பின் இவரது மகன் பெக்ககியா அரசன் ஆனார். இந்நிலையில் இரமலியாவின் மகனும், படைத்தலைவனுமான பெக்கா, கெக்ககியா அரண்மனைக் கோட்டைக்குள் புகுந்து, அரசனைக் கொன்று அரசன் ஆனான் (2 அர.15:23-26).

கி.மு. 734, பெக்கா, தமாஸ்கோடு உடன்படிக்கை செய்து கொண்டு, அந்த கூட்டணியில் சேர, யூத அரசர் ஆகாசை அழைத்தார் (The syro-Ephraimite war). இந்த சூழலில், ஆகாசு, அசீரியர்களின் உதவியினை நாடினார். திக்லத்பிலேசர், தாமஸ்கு மீது படையெடுத்தார். வடநாட்டின் சில பகுதிகளை தமது எல்லைக்குள் கொண்டு வந்தார். வடநாட்டு கடைசி மன்னர் ஓசேயா காலத்தில் அசீரியர்களை எதிர்த்தது. கோபம் அடைந்த அசீரிய மன்னர், வடநாட்டு தலைநகர் எருசலேமைத் தாக்கினார். அசீரியாவுக்கு அதிகமான அளவு கப்பம் கட்ட செய்தார். மீக்கா இறைவாக்கினர் 1:8-19ல் இந்த நிகழ்வுகளைக் குறிப்பிடுகிறார் என சில அறிஞர்கள் நம்புகின்றனர்.

### பொருளாதார பின்னணி

இறைவாக்கினர் மீக்கா 1:5-6ல் யூத நாட்டின், இஸ்ராயேல் நாட்டின் குற்றங்களையும், பாவங்களையும் குறிப்பிடுகிறார். “இரத்தப் பழியால் சீயோனையும், அநீதியால் எருசலேமையும் கட்டியெழுப்புகின்றீர்கள்” (3:10). “நீங்கள் ஓம்ரியன் கட்டளைகளைக் கடைப்பிடித்தீர்கள். ஆகாசு குடும்பத்தாரின் செயல்கள் அனைத்தையும் பின்பற்றினீர்கள்” (6:16).

“எசேக்கியா வெள்ளி, பொன், விலைமதிப்பற்ற கற்கள், நறுமண வகைகள், பலவித போர்க்கருவிகள், விலையேறப்பெற்ற கலன்கள் ஆகிய மிகுதியான செல்வத்தைக் கொண்டிருந்தார். மேலும், அவர் மிகுந்து வரும் தானியம், புதிய திராட்சை இரசம், எண்ணெய் ஆகியவற்றைச் சேர்த்து வைக்கக் கிடங்குகளையும், கால்நடைகளுக்கு தொழுவங்களையும் ஆடுகளுக்குப் பட்டிகளையும் அமைத்திருந்தார்” (2 குறி 32:27-28). அவர் மேலும் அணை கட்டினார் (2 குறி. 32:30).

இறைவாக்கினர் மீக்கா, அரசனின் இந்த செயல்கள் எல்லாம், சாதாரண மக்களுக்கு எந்த அளவுக்கு பாரமாக இருக்கும் எனப் பார்க்கிறார். எனவேதான் “உங்களை முன்னிட்டுச் சீயோன் வயல்வெளியைப் போல் உழப்படும், எருசலேம் பாழடைந்த மண் மேடாக மாறும், கோவில் உள்ள மலையோ அடர்ந்த காடாகும் (3:12) என்கிறார்.

தலைவர்கள் பலவகையான பொருளாதார குற்றங்களை செய்தனர். “அந்த நகரின் தலைவர்கள் கையூட்டு வாங்கிக் கொண்டு தீர்ப்பு வழங்குகிறார்கள், அதன் குருக்கள் கூலிக்காகப் போதிக்கின்றனர், இறைவாக்கினர் பணத்துக்காக முன்னுரைக்கின்றனர்” (3:11).

தலைவர்களின் மோசமான தலைமையிலும் மக்களின் பாவங்களாலும் அழிவு விரைவில் வர போகின்றது என உணர்ந்த இறைவாக்கினர் “எழுந்து அகன்று போங்கள், இது இளைப்பாறும் இடம் அல்ல, நாட்டில் தீட்டு ஏற்பட்டு விட்டது, அது அழிவைக் கொண்டு வரும். அது மிகக் கொடிய பேரழிவாய் இருக்கும்” (2:10) என எச்சரிக்கிறார்.

போர் விரைவில் வர போகின்றது என்பதாலும், அழிவு நெருங்கிவிட்டது என்பதாலும், கஷ்டகாலம் அண்மையில் உள்ளது என்பதாலும் தலைவர்கள் பேராசைக் கொண்டு பரவிதமான துன்பங்களைக் கொடுத்தனர். “வயல்வெளிகள் மீது ஆசைகொண்டு, அவற்றைப் பறித்துக் கொள்கின்றார்கள், வீடுகள் மேல் இச்சைக் கொண்டு அவற்றைக் கைப்பற்றிக் கொள்கின்றார்கள்” (2:26). இதனால் பெண்களும், குழந்தைகளும் வீடுகள் இன்றி துன்பப்படுவர்.

இந்த அளவுக்கு சாதாரண மக்களுக்கு பொருளாதார நெருக்கடி கொடுத்தவர்கள் அடக்கி ஆளும் இராணுவ வீரர்களும், மதத்ததலைவர்களும், கட்டிட கலைஞர்களும் ஆவார்கள். இவர்களோடு சேர்ந்து எருசலேமில் இருந்து ஆண்ட தலைவர்களையும், பணக்கார முதலைகளையும் கடுமையாகச் சாடுகின்றார். “உங்களிடையே உள்ள செல்வர்கள் கொடுமை நிறைந்தவர்கள். அங்கே குடியிருப்பவர்கள் பொய்யர்கள். அவர்கள் வாயிலிருந்து வஞ்சனையான பேச்சே வெளிப்படுகின்றது” (6:12). “தீமை செய்வதில் அவர்கள் கைதேர்ந்தவர்கள், தலைவனும், நீதிபதியும் கையூட்டுக் கேட்கின்றனர். பெரியமனிதர் தாம் விரும்பியதை வாய்விட்டுக் கூறுகின்றனர். இவ்வாறு நெறிதவறி நடக்கின்றனர்” (7:3).




# இளையோரின் வழிகாட்டி “இயேசு”

இளமை என்பது மனிதவாழ்வின் ஒரு பரிணாமம். மனிதத்தை முழுமையாய் என்னும் வகையில் நிச்சயமான, நிலையான, என்றும் இருக்கக்கூடிய பரிமாணம். ஆனால் மனித வாழ்வை பொறுத்த வரையில் இது மாறுகின்ற நிலையில்லாத கடந்து செல்லும் ஒரு பரிணாமம். சாதாரணமாக 15வயது முதல் 24வயது வந்தோரை இளையோர் என்போம். ஆனால் நாட்டுக்கு நாடு இவ்வயதெல்லை மாறுபடுகின்றது. அல்லது திருமணம் ஆகும் வரை இளையோர் அதன்பின் குடும்பஸ்தர் என்றும் இளையோரை பிரித்து காட்டுகின்றார்கள். நடக்கின்றதை புதுமையால் அணுகும் குணம், அளவுகடந்த ஆற்றல், மனதில் நிரம்பி வழியும் துணிச்சல், விஞ்சி நிற்கும் படியான வாழ்வு, புதிதாய் கற்றுக்கொள்ள தூண்டும் எண்ணம் இவை இளமையின் எதார்த்த உண்மைகள். “மதிமயங்கிய நிலையில் வாழ்வதே இளமை. வளர்வதாலும் எல்லாம் இன்பமாய் தெளிவதாலும் இதையறிந்து கொள்ளவும் வாய்ப்பில்லை” என்கின்றார் அரிஸ்டோட்டில்.

சில பேர்கள் “இந்த இளைஞர்கள் சொல்லித் திருந்துறவங்களா இருந்தா திருத்த முயற்சி செய்யலாம் ஆனால் இவங்க மோசமானவங்க திருந்தவே மாட்டாங்க” என்று குறைகூறிக் கொண்டே இருப்பார்கள். சில வயது போனவர்களுக்கு இளைஞர்களை கண்டாலே வெறுப்பு காரணம் அவர்களை கொண்டு செயல்படுவது கடினம் என்பதால். சிலர் இளைஞர்களை தரக்குறைவாக கதைப்பதும் அவர்களுக்கெதிராக செயல்படுவதும் நாம் அறிந்த ஒன்றே. ஒரு இளைஞன் நன்றாக செயல்பட்டால் சரியானதைச் செய்தால் பிறருக்கு அவன் எதிராக செயல்படுகின்றான் என்று குறைகூறும் சிலரும் இல்லாமல் இல்லை. என்றாலும் இவை இள இரத்தம், குறை கூறுவதை பொருட்படுத்தாது முன்னோக்கி செல்லும் தன்மை கொண்ட இளைஞர்களும் நம்மில் உண்டு.

இளைஞர்கள் வாய்ப்பிற்காக காத்திருக்கின்றார்கள். கிடைக்கும் போது அதனை சரியாக பயன்படுத்துகின்றார்கள். துடிப்பும் எதிர்பார்ப்பும் எல்லோருக்கும் உண்டு. ஆனால் அதை பாதுகாத்து உயிர் கொடுப்போர் இளையோர் மட்டுமே. ஒரு முறை ஒரு வழி என்றால் அடுத்த முறை வேறு வழி என வாழ்வோர் இளையோர். புதிதாய் முயற்சிகள் நடக்கும் போது தோல்விகள் வருவது இயல்பு. இவற்றை கற்றுக் கொள்ள வாய்ப்பு என நினைத்துக் கொள்ளும் போது புதுப்படைப்புக்கள் வளரும். கண்டுபிடிப்புக்களும் புது அறிவியல் உண்மைகள் தோல்வியிலிருந்து பிறந்தவையே.

### இயேசுவை போல் இளையோரோடு வாழவேண்டும்.

* நல்ல நண்பனாக (யோ 15:15)
* நல்ல ஆயனாக (யோ 10:15)
* தந்தை தாயாக (லூக் 15:11-32)
* சகோதர சகோதரியாக (தி.ப 1:8)
* ஆசானாக (யோ 13:14)

இளையோர் “நாளைய உலகின் நம்பிக்கை” மட்டுமல்ல “இன்றைய உலகின் எதார்த்தங்கள்”. அதற்கு சிறந்த உதாரணங்கள் கிதயோன் (நீதி 6:12..), ஆமோஸ், புனித பவுல், அன்னை மரியாள். இதற்கான உண்மைத்தன்மையின் தேடலாக இருப்பதே இளையோரின் வாழ்வு.



### கிறிஸ்தவ இளையோர் கொண்டிருக்க வேண்டிய முக்கிய பண்புகள்.

1. கிறிஸ்துவை பற்றிய முழுமையான அறிவு
2. பொறுப்புள்ள கிறிஸ்துவின் சீடத்துவ வாழ்வு
3. பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது இறையாட்சியின் மதிப்பீடுகளை கவனத்திற் கொள்ளல்
4. கிறிஸ்தவ அன்பை ஆடையாக கொள்ளல்
5. நற்செய்தியை அறிவித்தல்
6. சீடத்துவ வாழ்வின் திருத்தூதராதல்
7. இறைநம்பிக்கையை வெளிப்படுத்தல்.

ஒருமுறை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு திருத்தூது பயணம் மேற்கொண்டிருந்த போது 13 வயது சிறுமி அவரை நோக்கி “திருத்தந்தை அவர்களே, நான் தெருவோரச் சிறுமி என்னுடைய இந்த வயதில் நான் என் உடலை விற்கின்றேன். இன்னும் பலர் போதைக்கு அடிமையாகி உள்ளார்கள். எங்களுக்கு கடவுள் ஏன் இந்த துன்பங்களை அனுமதிக்கின்றார்” இது வாழ்வின் யதார்த்தமான கேள்வி. இக்கேள்வி தான் இன்று எங்களுடைய சமுதாயத்தில் வாழும் இளையோரின் கேள்வியாகவும் இருக்கின்றது. நாம் வாழும் இன்றைய இந்த உலகம் பல மாயமான கவர்ச்சிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இதற்கு அடிமையாக வாழ்வோர் எமது... 15

# இறைவனை மட்டுமே மகிழ்ச்சிப்படுத்த அழைக்கப்பட்டுள்ளனர்



சித்திரை, 23, 2018. இரக்கம் காட்டுவதில் ஒருபோதும் சோர்வடையக்கூடாது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புதிய அருள்பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

சித்திரை 22, நல்லாயன் ஞாயிறன்று காலை, புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில், திருத்தந்தை, 16 தியாக்கோன்களை, அருள்பணியாளர்களாக அருள்பொழிவு செய்த திருப்பலியின்போது வழங்கிய மறையுரையில், கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் இரக்கத்துடன் மன்னித்ததுபோல், ஒவ்வோர் அருள்பணியாளரும் மற்றவர்களை மன்னிக்க கடமைப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

அருள்பணியாளர்கள், தங்களையோ, மற்ற மனிதர்களையோ மகிழ்ச்சிப்படுத்த அழைக்கப்படவில்லை, மாறாக, இறைவனை மட்டுமே மகிழ்ச்சிப்படுத்துவதற்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்பதை, திருத்தந்தை தன் மறையுரையில் வலியுறுத்திக் கூறினார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கரங்களால் திருப்பொழிவு பெற்ற 16 அருள்பணியாளர்கள், இத்தாலி, இந்தியா, குரோவேசியா, வியட்நாம், மியான்மார், கொலம்பியா, எல் சால்வதோர், மடகாஸ்கர், உரோமேனியா மற்றும் பெரு ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.




# திருத்தந்தையின் நாம விழாவுக்கு உலகினரின் வாழ்த்துக்கள்



புனித ஜார்ஜ் நினைவாக, ஹோர்கே மாரியோ பெர்கோலியோ (Jorge Mario Bergoglio) என்ற இயல் பெயரைக் கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சித்திரை 23, கொண்டாடப்பட்ட இப்புனிதரின் திருநாளையொட்டி, தன் நாம விழாவைச் சிறப்பித்தார்.

இவ்விழாவையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு, உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து வாழ்த்துக்கள் வந்துள்ளன.

(2013ம் ஆண்டு ஐப்பசி 1 முதல் 3 முடிய தங்கள் முதல் சந்திப்பை மேற்கொண்ட இக்குழுவினர், 2013ம் ஆண்டு இரு முறையும், 2014ம் ஆண்டு முதல் 2017ம் ஆண்டு முடிய ஒவ்வோர் ஆண்டும் ஐந்து முறைகளும் வத்திக்கானில் சந்தித்து, திருத்தந்தைக்கு ஆலோசனைகள் வழங்கி வந்துள்ளனர்.)

# மருத்துவ சிகிச்சைகளில் முற்சார்பு எண்ணங்கள் தவிர்க்கப்பட வேண்டும்

## – திருத்தந்தை



பல்வேறு நோய்களால் துன்புறுவோரின் துயர் துடைப்பதற்கு, அறிவியலாளர்கள், மருத்துவர்கள், நன்னெறியாளர்கள், கலாச்சார மற்றும், சமயத் தலைவர்கள் அரசு மற்றும், தொழில் பிரதிநிதிகள், குடும்பங்கள் போன்ற பல்வேறு துறையினர் இணைந்து பணியாற்றி வருவது குறித்து தான் மகிழ்வதாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூறினார்.

குணப்படுத்தலுக்கு ஒன்றிணைவோம் என்ற தலைப்பில், திருப்பீட கலாச்சார அவை நடத்திய பன்னாட்டு கூட்டத்தில் கலந்துகொண்ட ஏறத்தாழ எழுநூறு பிரதிநிதிகளை, அருளாளர் ஆறாம் பவுல் அரங்கத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இக்கூட்டத்தினரின் பணிகளை, தடுத்தல், சரிசெய்தல், குணப்படுத்தல், வருங்காலத்திற்குத் தயாரித்தல் ஆகிய நான்கு வினைச்சொற்களில் சுருக்கிச் சொல்லலாம் என்று கூறினார்.

இந்த நான்கு சொற்களின் அடிப்படையில் தனது சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புவதாகத் தெரிவித்த திருத்தந்தை, நாம் வாழ்ந்துவரும் வாழ்க்கை முறை மற்றும் நாம் ஊக்குவிக்கும் கலாச்சாரத்தில் மிகுந்த கவனம் செலுத்தினால், அநேகத் தீமைகளைக் களைய முடியும் என்ற விழிப்புணர்வு நம்மிடையே அதிகரித்து வருகின்றது என்று கூறினார்.

நவீன கலாச்சாரத்தின் தீவிர மாற்றங்களோடு தொடர்புடைய நோய்களின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் சிறார் மற்றும் இளையோரை நினைத்துப் பார்ப்பது மிகவும் முக்கியம் என்பதை வலியுறுத்திய திருத்தந்தை, புகைப்பிடித்தல், மது அருந்துதல், நிலத்தில், நீரில், காற்றில் பரவவிட்டுள்ள நச்சுப்பொருள்கள் போன்றவற்றால் ஏற்படும் நோய்களின் தாக்கம் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அறிவியல், இயற்கை உலகையும், மனித நலத்தையும் மிக நன்றாகப் புரிந்துகொள்ளும் சக்திமிக்கது எனவும், மனித நலம், அறிவியல் ஆய்வோடு மட்டுமல்ல, இயற்கையைப் பேணி பாதுகாப்பதோடும் தொடர்புடையது என்ற உணர்வில் வளரவேண்டியது அவசியம் எனவும் திருத்தந்தை கூறினார்.

துன்புறும் நம் சகோதரர், சகோதரிகளின் வேதனைகளைக் களைவதற்கு எடுக்கப்பட்டுவரும் அனைத்து அறிவியல் ஆய்வுகள் மற்றும் நடைமுறைகளை, திருஅவை பாராட்டுகின்றது, அதேநேரம், எல்லாத் தொழில்நுட்பங்களும் அறநெறிப்படி ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்ற கொள்கையிலும் திருஅவை கவனமாக உள்ளது என்றும், மருத்துவ சிகிச்சைகளில் முற்சார்பு எண்ணங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

வத்திக்கானில் நடைபெற்ற இந்த மூன்று நாள் பன்னாட்டு கூட்டத்தை, திருப்பீட கலாச்சார அவை, ஊரசய அறக்கட்டளையின் ஒத்துழைப்புடன் நடத்தியது. புதிய தொழில்நுட்பம், சமுதாயத்திலும், கலாச்சாரத்திலும் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து இக்கூட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

# இணையதள உலகில் ஆர்வக் கோளாறுகள் குறித்து எச்சரிக்கை



உண்மை போன்று தோற்றமளிக்கின்ற கற்பனை உலகால் கவரப்படும் இளையோர், இந்த ஆர்வக் கோளாறால் சிறைவைக்கப்படாமல் இருக்க உதவ வேண்டியது பெரியோரின் கடமை என்று, இத்திங்கள் காலை மறையுரையில் எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இணையதளம் வழியாக காட்டப்படும் கற்பனை உலகம் என்பது, பல தீயவிடயங்களைக் கொண்டுள்ளது என்று, தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் இத்திங்கள் காலை நிறைவேற்றிய திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை அவர்கள், நன்மைகளிலிருந்து தீயவைகளைப் பகுத்தறிய தூய ஆவியாரின் துணையை நாட வேண்டியது அவசியம் என்று கூறினார்.

வாழ்வு என்பது, முற்றிலும் ஆர்வநிலைகளை உள்ளடக்கியது, இதில் குழந்தைகளின் ஆர்வம் என்பது, தெரியாததைத் தெரிந்துகொள்ள முனையும் ஆர்வமாகும், இந்த ஆர்வம், நன்மை பயக்கக்கூடியது, ஏனெனில் இது வளர்ச்சியைக் குறிப்பதாகும் என்று கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மற்றவர்களின் விடயங்களை அனுமதியின்றி அறிந்துகொண்டு, அது குறித்து உரையாடுவது போன்றவை, தவறான ஆர்வங்கள் என்பதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்றையச் சிறார், இணையதளம் வழங்கும் உலகில் நுழைந்து தவறானவை குறித்து ஆர்வமுள்ளவர்களாகும் ஆபத்து இருப்பதையும் எடுத்துரைத்தார்.

# கடவுள் செபங்களுக்குப் பதிலளித்துள்ளார்

## – கொரிய ஆயர்கள்

சித்திரை 27, இரு கொரிய அரசுத்தலைவர்களும் சந்தித்து, அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருப்பது, கடவுள் தங்களுக்குப் பொழிந்துள்ள ஆசீராகும் என்று, கொரிய கத்தோலிக்க ஆயர்கள் கூறியுள்ளனர்.

வட கொரிய கம்யூனிச அரசுத் தலைவர் கிம் ஜாங் உன், தென் கொரிய அரசுத்தலைவர் மூன் ஜே-இன் ஆகிய இருவரும், இவ்விரு நாடுகளின் எல்லையில் அமைந்துள்ள பான்முன்ஜியோம் கிராமத்தில் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் மிக்க சந்திப்பில் அமைதி ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர். அதன்படி, கொரிய தீபகற்பத்தில் இனிமேல் போர் இடம்பெறாது மற்றும், கொரிய தீபகற்பம் முழுவதும் அணு ஆயுதமற்ற பகுதியாக அமையும் மேலும், 1953ம் ஆண்டில் நிறைவடைந்த மூன்றாண்டு கொரியச் சண்டைக்குப்பின் பிளவுபட்டிருந்த இவ்விரு நாடுகளின் தலைவர்கள் கையெழுத்திட்ட பான்முன்ஜியோம் ஒப்பந்தத்தின் வழியாக, கொரிய தீபகற்பத்தில் அமைதியின் புதிய சகாப்தம்



தொடங்கியுள்ளது என்று செய்திகள் கூறுகின்றன.

இத்தலைவர்களின் சந்திப்பு குறித்து, பீதேஸ் செய்தியிடம் பேசிய தென் கொரிய ஆயர் Lazzaro You Heung-sik அவர்கள், கொரியாவில் புதிய சகாப்தம் தொடங்கியுள்ளது குறித்து உண்மையிலேயே மகிழ்வதாகவும், கடவுள் வியத்தகு அதிசயங்களை ஆற்றுகின்றார் என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.






தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்

கத்தோலிக்க குடும்ப மறைக்கல்வி
Catholic Family Catechism

**90. இயேசுக்கிறிஸ்து திருச்சபை - கத்தோலிக்க திருச்சபையை எவ்வாறு ஸ்தாபித்தார்?**

இயேசுக்கிறிஸ்து தமது சீடர்களிமிருந்து, பன்னிரெண்டு பேரைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு தனது கோட்பாடுகளை போதிப்பதன் வழியாக தனது திருச்சபையை ஸ்தாபித்தார். பின்பு அவர்களை "அப்போஸ்தலர்" எனப் பெயரிட்டு, மனித குலத்தை மீட்பதற்கு தேவையான அனைத்து வல்லமையும் அளித்து அவர்களை தனது படிப்பினையை முழு உலகுக்கும் போதிக்கும்படி அனுப்பினார். புனித பேதுருவை அப்போஸ்தலருக்குத் தலைவராக நியமித்தார்.

கிறிஸ்து இயேசு மூன்று வருடம் அப்போஸ்தலர்களுக்கு கற்பித்து, முழு உலகிற்கும் அக்கோட்பாடுகளை அறிவிக்கும் பொறுப்பை அவர்களிடம் கையளித்தார். உலக முடிவுபரியந்தம் இப்பணியைத் தொடர்ந்து செய்யுமாறும், தான் அவர்களோடு எந்நேரமும் இருப்பதாகவும் உறுதியளித்தார்.

எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று கூறினார். (மத் 28:19-20)

அந்நாள்களில் அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார். விடிந்ததும் அவர் தம் சீடர்களைத் தம்மிடம் கூப்பிட்டு அவர்களுள் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் திருத்தூதர் என்று பெயரிட்டார். (லூக் 6:12-13)

**91. இயேசுக்கிறிஸ்து ஏன் தமது திருச்சபையை ஸ்தாபித்தார்?**

அனைத்து மனுக்குலத்திற்கும் "நித்திய மீட்பை" கொடுப்பதற்காகவே இயேசுகிறிஸ்து தமது திருச்சபையை ஏற்படுத்தினார்.

திருச்சபை, அனைத்து மக்களுக்கும் மீட்பை அளிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. ஆனால் "நித்திய மீட்பானது, கடவுளை வணங்கி, போற்றி அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதன் வழியாகவே வெல்ல முடியும்.

**92. கிறிஸ்து தமது திருச்சபைக்கு அளித்த அதிகாரங்கள் எவை?**

இயேசுக்கிறிஸ்து தமது திருச்சபைக்கு போதிக்கவும், புனிதப்படுத்தி, ஆண்டு, எல்லா மனிதரையும் மீட்பதற்கும் அதிகாரத்தைக் கொடுத்தார்.

இயேசுக்கிறிஸ்து தனது கத்தோலிக்க திருச்சபைக்கு உண்மையான மீட்பின் நற்செய்தியைப் போதிக்க அதிகாரம் அளித்தார். அதன்படி பரிசுத்த வேதாகமத்தை விளக்கவும், தொண்டுதொட்டு வந்த படிப்பினையை (மஜிஸ்ரேரியம்) முழுவதுமாக கத்தோலிக்க சபையில் ஈடுவதைத் தவிர வேறு எதிலும் அல்ல.

இவ்வாறு கிறிஸ்துவின் படிப்பினைகளைத் தவிர வேறு தவறான, எதிரான அபிப்பிராயங்களை சுட்டிக்காட்டவும், திருச்சபையின் கடமையும், கட்டாயமான செயலுமாக அமைந்தது. மக்களை அருட்சாதனங்கள், செபங்கள் வழியாக புனிதப்படுத்துவதில் முழுமையாக ஈடுபடவேண்டும்.

இயேசுக்கிறிஸ்து திருச்சபையின் தலைவர்களை ஆட்கொண்டு, அவர்களுக்கு இறைமக்களை ஆண்டு வழிநடத்தும் அதிகாரத்தையும் கொடுத்தார். இந்த வல்லமை சர்வ உலக திருச்சபைத் தலைவரான பாப்பரசருக்கும், மேற்றாசனங்களை வழிநடத்த அதற்குரிய ஆயர்களுக்கும் உண்டு.

"மண்ணுலகில் நீங்கள் தடைசெய்பவை அனைத்தும் விண்ணுலகிலும் தடைசெய்யப்படும் மண்ணுலகில் நீங்கள் அனுமதிப்பவை அனைத்தும் விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்". (மத் 18:18)

**93. எத்தனை திருச்சபைகளை இயேசுகிறிஸ்து ஸ்தாபித்தார்?**

இயேசுக்கிறிஸ்து ஒரு திருச்சபையை அதாவது கத்தோலிக்க திருச்சபையை மட்டுமே ஸ்தாபித்தார்.

கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்து போனவர்களை "சீர்திருத்தப்பட்ட சபைகள் அல்லது புரட்டஸ்தாந்து திருச்சபை என அழைத்தார்கள். "சீர்திருத்தம்" எனும் வார்த்தை, இந்த சீர்திருத்தவாதிகள் கிறிஸ்துவின் போதனைகளையும், அவருடைய கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகளையும் சீர்திருத்த முற்பட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

புரட்டஸ்தாந்து சீர்திருத்தம் 16ம் நூற்றாண்டில் நடைபெற்றது. 1517ம் ஆண்டில் ஜேர்மனி தேசத்து ஆகஸ்ரீனியன் துறவி மார்ட்டின் லூத்தர் இந்த சீர்திருத்த இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். இதன் பலனாக திருச்சபை பல கூட்டங்களாகப் பிரிந்தது. சுவிட்சலாந்து தேசத்தில் சுவிங்கிலியும், கல்வின் என்பவரும் இதைப் பின்பற்ற இங்கிலாந்து அரசர் 8ம் ஹென்றியும் இவர்களைத் தொடர்ந்தார். இவ்வாறாகப் பல புரட்டஸ்தாந்து சபைகள் உருவாகின.

இதற்குப் பதிலாக, ஒரு எதிர் சீர்திருத்தம், திரிதெந்தின் கவுன்சில் (1545 - 1563) காலப்பகுதியில் திருச்சபையால் கூட்டப்பட்டது. திரிதெந்தின் கவுன்சல் இரண்டு ஆரம்பக் கோட்பாடுகளைத் திருத்தும் வகையில் ஒரு தெளிவான மீள் வாக்கையும், இரண்டாவதாக, குருக்களின் ஒழுக்கம் பற்றிய சீர்திருத்தத்தையும் முன்வைத்தது.

இன்றைய சீர்திருத்த சபைகள், கடந்த கால தவறுகளுக்குப் பொறுப்பானவர்கள் அல்ல. இன்று உலகின் பல பகுதிகளில் கிறிஸ்தவ சபைகள் கத்தோலிக்க சபையையும், ஏனைய பாரம்பரிய கிறிஸ்தவ சபைகளையும் தொடர்ந்து தாக்கினாலும், இன்று அதிகமான பாரம்பரிய கிறிஸ்தவ சபைகளிடையே திருச்சபையோடு ஒன்றிணைவதற்கு பாரிய ஏக்கம் ஏற்பட்டு வருகின்றது. இரண்டாவது வத்திக்கான் சங்கம் இவ்விடயத்தில் பெரிய உந்துவிசையாக இருந்துள்ளது. திருச்சபையின் ஒற்றுமை நடவடிக்கையானது "Ecumenical இயக்கம்" என்று அழைக்கப்பட்டது. இன்னும் பல தூரம் போக இருக்கின்றது. இந்தத் திருச்சபைகள் ஒன்று சேர்ந்து பல செயற்பாடுகளில் செபிக்கவும், செயற்படவும் ஆரம்பித்துள்ளன. ஆனால் இன்னும் பல தூரம் போக இருக்கின்றது. விசேஷமாக கோட்பாட்டு விடயங்களிலும் சபை ஒழுங்குகளிலும்

எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும். (யோவா 17:21)

**94. கத்தோலிக்க திருச்சபை உண்மையான திருச்சபை என்று எமக்கு எப்படித் தெரியும்?**

கத்தோலிக்க திருச்சபையில் மட்டுமே உண்மையான குறிக்கோள்கள் உள்ளன.

**95. உண்மையான திருச்சபையின் குறிக்கோள்கள் எவை?**

உண்மையான திருச்சபையின் குணாதிசயங்கள் நான்கு அவையாவன; ஒன்றாயிருத்தல், பரிசுத்தமாயிருத்தல், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம். குறிக்கோள் - என்றால் இயேசுநாதர் ஏற்படுத்திய திருச்சபைக்கு இருக்கவேண்டிய குறிக்கோள்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான அடையாளங்கள்.

பாடங்கள் தொடரும்...

## சிறுநீரக நோயாளியின் வேண்டுகோள்

### சிறுநீரக நோயாளிக்கு உதவ அழைப்பு



றாகமை பேரலந்த எனும் இடத்தில் இல 160 வதிவிடத்தில் வசிக்கும் 21 வயதுடைய கௌசல்யா பர்னாந்து பேரலந்த புனித யோசப் ஆலயத்தின் பாடற்குழாமின் உறுப்பினராக பணியாற்றுகின்றார். இவர் கவலைக்குரிய விதத்தில் சிறுநீரக நோயால் வாடுகின்றார். இவரது இரு சிறுநீரகங்களும் செயற்பாட்டை இழந்தவண்ணம் காணப்படுவதால், உடனடியாக சந்திரசிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு A அல்லது O பிரிவின் சிறுநீரகம் தேவைப்படுகின்றது. மேலும் இச்சந்திரசிகிச்சைக்கு 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணத்தொகை தேவைப்படுகின்றது.

இவரின் தந்தை சிறு கைத்தொழில் செய்வதோடு ஒரே சகோதரனும் பிறப்பிலேயே உடல் ஊனமுற்ற நிலையில் உள்ளவராவார். இவருக்கு சிறுநீரகத்தை பரித்தியாகம் செய்யக்கூடியவரும், சத்திரசிகிச்சைக்கு உதவக் கூடியவரும் இருப்பின் உதவ முன்வரவும் என தாழ்மையாக வேண்டுகின்றோம்.

**கொமர்ஷல் வங்கி,**
**கணக்கு இலக்கம் 8221017194**
**கிளை : றாகமை,**
**எல். கமல் தேவப்பிரிய பர்னாந்து (தந்தை)**
**தொ. இல 071 - 4209096**
**071 - 1555765)**

## "மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்"

### புனிதத்துவத்தில் வாழ்வதற்கான திருத்தூது அறிவுரை ஏடு திருத்தந்தையால் வெளியீடு.

### 21ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ வாழ்விற்கான வழிகாட்டி



இன்றைய உலகில் புனிதத்துவத்திற்கான அழைப்பு குறித்து GUUDETE ET EXSULTATE என்ற தலைப்பிலான திருத்தூது அறிவுரை ஏட்டினை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் புனிதத்துவத்தில் வாழ உதவும் வழிகள் விவிலியத்திலேயே உள்ளன என குறிப்பிட்டுள்ளார்.

"மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்" என்று இயேசு விடுக்கும் அழைப்பு அவருக்காக அவமானப்படுத்தப்பட்டு துன்பங்களை அனுபவிக்கும் மக்களுக்காக விடுக்கப்பட்டுள்ளது என தன் ஏட்டின் தொடக்கத்தில் கூறியுள்ள திருத்தந்தை, இன்றைய உலகில் புனித்துவத்திற்கான அழைப்பை எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும் என்பது குறித்த பரிந்துரையே இத்திருத்தூது அறிவுரையின் முக்கிய நோக்கம் என தெரிவித்துள்ளார்.

"புனிதத்துவத்திற்கான அழைப்பு" என்று தலைப்பிடப்பட்டுள்ள முதல் பிரிவில், நம்மோடு உடன் நடந்து நமக்கு ஊக்கமூட்டிவரும் புனிதர்கள், நம் அருகாமையில் வாழும் புனிதர்கள் ஆகியோரைக் குறித்து கூறியுள்ள திருத்தந்தை நாமும் உயிரூட்டம் உடையவர்களாக, மனிதாபிமானம் மிக்கவர்களாக வாழ்ந்து புனிதத்துவத்தில் நுழைய இறைவன் அழைப்பு விடுக்கிறார் எனக் கூறியுள்ளார்.

இரண்டாவது பிரிவில் புனிதத்துவத்தின் எதிர் சக்திகள் எவை என்பதை பட்டியலிட்டுள்ள திருத்தந்தை கடவுள் நம்பிக்கையின்மை, தாழ்ச்சி மனப்பான்மை இல்லாமை ஆகியவை குறித்து எடுத்துரைத்துள்ளார். இயேசுவின் ஒளியில் புனிதத்துவத்தைக் கண்டு கொள்ள வேண்டும் என அழைப்புவிடுக்கும் மூன்றாவது பிரிவு இயேசுவின் மலைப்பொழிவை முன்வைத்து கிறிஸ்தவ மதிப்பீடுகள் குறித்து விவரிக்கிறது.

திருத்தூது அறிவுரையின் நான்காம் பிரிவு இன்றைய உலகில் புனிதத்துவத்தின் அறிகுறிகள் குறித்து விவரிக்கிறது. எத்தகைய பண்புகள் புனிதத்துவத்தை எடுத்துரைக்கின்றன என்பதைக் கூறும் இப்பிரிவைத் தொடர்ந்து வரும் ஐந்தாவது பிரிவு தீயோனுக்கு எதிரான ஆன்மீகப் போராட்டம், விழித்திருத்தல், பகுத்துணர்தல் போன்றவை குறித்து விளக்கம் அளிக்கிறது.

புனிதத்தவத்தை தேடும் பாதையில் அன்னை மரியாவின் எடுத்துக்காட்டு மற்றும் உதவிகள் குறித்து **"மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்"** என தன் திருத்தூது அறிவுரையின் நிறைவில் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார். திருத்தூது அறிவுரை சித்திரை 09, வெளியிடப்பட்டது.

நன்றி : பாதுகாவலன்



# இம்மாத புனிதர்கள்





மே 12

## தலை தந்த தாசனவன் பங்கிராஸ்

**“கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் என்பதற்காக உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் குடிக்க கொடுக்கிறவன் கைமாறு பெறாமல் போகான்”** மாற்கு 9:41.

ஆசியா மைனரில் பிரிசியாவில் பிறந்தவர். தந்தையை இழந்த நிலையில் தன் தாய்மாமன் தயனிசியாஸால் வளர்க்கப்பட்டு கல்வியறிவு பெற்றார். சிறு வயதிலிருந்தே குத்துச் சண்டையில் இவர் வீரர். வாலிப வயதில் ஏழு தடவை உல்வியசு என்பவனை தோற்கடித்திருக்கிறார். தோல்வி கண்டவன் பகை தீர்த்துக்கொள்ள உபாயம் தேடினான்.

புகழ்வாய்ந்த திருத்தந்தை மேல் பொறாமைகொண்டு கிறிஸ்தவர்களைக் கொன்றுவிடுமாறு கி.பி 303ல் ஆணை பிறப்பித்தான் உரோமை அரசன். வேதகலாபனை தொடங்கியது. கிறிஸ்தவர்கள் வாளுக்கும் நெருப்புக்கும் காட்டு விலங்குகளுக்கும் இரையாக்கப்பட்டனர். மனமுவந்து வேதனையைத் தாங்கிக் கொண்டனர்.

நமது நாயகனும் அவர் மாமாவும் விரோதிகளிடம் சிக்கி கொடுமைப்படுத்தப்பட்டவர்களைச் சந்தித்து அவர்களுக்கு மருந்து, உணவு, உடை, பணம் வழங்கி உதவி செய்தனர். இராப்பகலாக இப்பணியினால் பாதிக்கப்பட்டு உடல்நலம் குன்றி படுத்த படுக்கையாகிவிட்டார் தயனிசியாஸ். தன் மருமகனை அழைத்து கிறிஸ்துவுக்கு பிரமாணிக்கமாக வாழ். முதல்முதல் நீ கிறிஸ்துவுக்கு வீரன். பிறகுதான் நம் நாட்டு மன்னனுக்கு நீ போர் வீரன் என்றார். அவ்வாறு வாழ்வதாக மருமகனிடமிருந்து உறுதிபெற்று மரித்தார் மாமன்.

ஒரு நாள் கிறிஸ்தவன் ஒருவன் சிங்கத்திற்கு இரையாகப் போடப்பட்டார். சிறிது நேரத்திற்குப் பின் சிங்கத்தின் நகங்களாலும் பற்களாலும் ரண காயமடைந்த அவனை எடுத்து சிறைச்சாலையில் போட்டனர். வலியால் துடித்துக்கொண்டிருந்த அவனிடம் ரகசியமாகச் சென்று அவனது காயங்களைக் கழுவி மருந்து இட்டு முதலுதவி செய்து பரலோக வாழ்வுபற்றி நம் நாயகன் கூறினார். இவற்றை ஒளிந்திருந்து பார்த்துக்கொண்டிருந்த உல்வியசும் அவன் தோழர்களும் இவரை (பங்கிராஸை) கையுமெய்யுமாகப் பிடித்துவிட்டதாக மகிழ்ந்தனர். அரசனிடம் இவரை இழுத்துச்சென்று இவன் கிறிஸ்தவன், கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்கிறான் என்றனர். கிறிஸ்தவர்களை சித்திரவதை செய்வதையே வாழ்வின் இலட்சியமாகக்கொண்ட அரசன் ஆத்திரம் அடைந்து, முதலில் அன்பொழுக இவரிடம் பேசி கிறிஸ்துவை மறுதலிக்குமாறு கேட்டான், பலிக்கவில்லை. பயமுறுத்தல்களைப் பயன்படுத்தினான், பயனில்லை. தனக்கு முன் உல்வியசு இவரை இம்சைப்படுத்துவதற்கு சம்மதித்தான். பதிலுக்குப்பதில் செய்து தன்பலத்தை உல்வியசுமீது காட்டியிருக்க முடியும். இயேசுவின் சாந்தத்தன்மையை நினைவுகூர்ந்து வேதனையை இவர் பொறுமையாக ஏற்றுக்கொண்டார்.

“எதற்கும் மசியமாட்டான் இவன், சானிக்குல மலையில் இவன் தலையை வெட்டுங்கள்” என்று அரசன் கட்டளையிட்டான். தெரு வழியாக இவரை இழுத்துச்சென்று அடித்து அவமானத்திற்குள்ளாக்கினர். வாள் போரிலும் குத்துச் சண்டையிலும் வீரரான இவருக்குச் செய்யப்பட்ட அவமானங்களைக் கண்டு மக்கள் கண்ணீர் சிந்தினர். இவரது உறுதியான பொறுமையைப் பார்த்து கிறிஸ்தவ மறையில் அநேகர் சேர்ந்தனர்.

மலை உச்சியை அடைந்ததும் இவர் தம் தாயை சந்தித்தார். மகனை ஆரத்தழுவி முத்தமிட்டு மகனே இறுதிவரை விசுவாசத்தில் நிலைத்திரு. நமது நிலையான இல்லம் விண்ணகமே, அங்கே ஒரு நாள் சந்திப்போம் என்று தாய் கண்ணீர் மல்க உற்சாகப்படுத்தினாள்.

அமைதி நிலவியது. இறைவனிடம் இவர் செபித்தார். தாயிடமும் அனுதாபிகளிடமும் விடை பெற்றார். குனிந்து தன் தலையை முன்னிருந்த பாறைக்கல்லில் வைத்தார். ஒரு போர்வீரனின் ஓங்கிய வாள் இவர் கழுத்தில் பலமாக விழுந்தது. பங்கிராசின் தலை துண்டாகி தரையில் விழுந்தது. இரத்தம் கொட்டியது. இவர் ஆன்மாவோ ஆண்டவரைத் தரிசிக்கச் சென்றுவிட்டது. இவ்வான்மாவின் சொந்தக்காரர் நம் கதையின் நாயகனான புனித பங்கிராஸ்தான்.

**நகர வாசல் எதிர்க்கையிலே**
**நாயகன் இயேசுவின்**
**நலம் கெடா உழைத்த நல்லவராம்**
**நம்பி நம் பங்கிராஸ் புனிதரே**

**வீர சாகச விளையாட்டில்**
**வெற்றி மாலைகள் சூடியவா**
**வெறுத்தவர் ஒறுத்தவர் அனைவருக்கும்**
**விருப்புடன் மன்னிப்பு அருளியவா**

**தண்டனை இறைவன் உளம் என்று**
**தயங்கா மனதுடன் ஏற்றவரே**
**தலையினை தேவனின் மறைக்காக**
**தானம் செய்த பெருந்தகையே**

# தீரணியம் “ஓட்டிசம்” (THEERANIYAM)

## மாற்றுத்திறனாளி பிள்ளை பாடசாலைக்கு வயது ஒன்று.

அன்புப்பணி சகோதரர்கள் சபையானது (Brothers of Charity) எமது மட்டக்களப்பு மறைமாவட்டத்திலே கல்முனையில் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான பெனடிக் மினி (Benedict Mini) என்ற பெயரைக் கொண்டு உளநல மருத்துவ புனர்வாழ்வு வதிவிட பயிற்சி நிலையமொன்றையும், மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான புனித வளனார் விசேட தேவையுடையோர் தொழிற்பயிற்சி பாடசாலையையும் (St Joseph’s Special Education Center) நடாத்தி வருகின்றனர்.

அந்தவகையிலே கடந்தவருடம் ஏப்பிரல் மாதம் 8ம் திகதி “தீரணியம்” என்ற பெயருடன் ஓட்டிசம் பிள்ளைகளுக்கான பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகின்றது.

இப்பாடசாலையானது எமது மறைமாவட்டத்தின் ஆயர் அதி மேதகு வண. யோசப் பொன்னையா ஆண்டகை அவர்களினாலும், அன்புப்பணி சகோதரர்கள் சபையின் ஆசியாபிராந்திய அதிமேலாளர் அருட் சகோதரர் கொட்பிறி பிறகாட் அவர்களினாலும், மத்திய சுகாதார அமைச்சின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திரு. ஜெயசுந்தர பண்டார, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜனாப் இப்றா லெப்பை ஆகியோரினாலும் திறந்து வைக்கப்பட்டது.

ஓட்டிசம் என்ற பாடசாலை ஏன் ஆரம்பிக்கப்பட வேண்டும்?, ஓட்டிசம் என்பது என்ன? என்பதை முதலில் தெரிந்து கொள்வது நன்று. சாதாரணமாக பிறக்கின்ற ஒரு குழந்தை பல வளர்ச்சிப்படிகளை கடந்து ஆற்றலுள்ள, ஆளுமையுள்ள, சமூக இசைவாக்கத்துடன், உயிரோட்டமுள்ள மனிதனாக சமூகத்தில் நடமாடிவருகின்றது. ஆனால் அதற்குமாறாக உயிரோட்டம் இருப்பினும், சமூக இசைவாக்கமற்ற நிலையில், மற்றைய சிறுவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாக தானாக இயங்க முடியாத நிலையில், பிறர் உதவியோடு இயங்குபவர்களாகவும், குடும்பத்தாலும், சமூகத்தாலும் ஒதுக்கப்பட்டவர்களாக புறந்தள்ளப்பட்டு கேலிக் கூத்தாளனாக காணப்படுகின்றான்.

இவ்வாறு புறந்தள்ளப்பட்ட பிள்ளைகளைப்பற்றி கூறுவதானால் இவர்களுக்கு சாதாரணமாக பேச்சு இன்மை,



பேச்சுத்தெளிவின்மை, அர்த்தம் கொண்ட முழுத்தொடராக தொடர்ந்து இரண்டு மூன்று வார்த்தை பேச முடியாதவர்கள், ஒரே நடத்தையை திரும்பத் திரும்பச் செய்வதில் ஆர்வம் காட்டுபவர்கள், கலந்துரையாட முடியாமை, நாளாந்தம் கேட்கும் சத்தத்தில் குழப்பமடைபவர்கள், கண்களை நேருக்கு நேராக பார்ப்பதில் சிக்கல், விநோதமாக சம்மந்தமில்லாமல் நடப்பது, நடத்தை கோலத்தில் மனவெழுச்சியில் பலவீனம், தொடர்பாடல், தனது செயல்களை தானே நிறைவேற்ற முடியாமை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுவார்கள்.

மேற் கூறப்பட்ட வகையில் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் எமது பகுதியில் இனங்காணப்பட்டனர். எவ்வாறெனில் டாக்டர் யூடி றமேஸ் ஜெயக்குமார் சிரேஷ்ட உளநல மருத்துவரிடம் சிகிச்சை பெற, ஆலோசனை பெற வருபவர்களில் அநேகமானவர்கள் மேற் கூறப்பட்ட காரணங்களினால் பாதிக்கப்பட்டவர்களாக காணப்பட்டனர். அத்தோடு இவ்வாறான பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் கல்வி கற்க அனுமதி கிடைப்பதுமில்லை. கல்வி கற்க முடியாத நிலையில் புறந்தள்ளப்பட்டனர். இதனால் பல பெற்றோர்கள் நெருக்கடிகளை சந்தித்தனர். குடும்பத்தில், பொருளாதாரத்தில், தொழிலில், பராமரிப்பில், உறவுகளில், சமூக அந்தஸ்தில் பல பிரச்சனைகளை சந்தித்தனர். அவற்றை எல்லாம் டாக்டர் யூடி றமேஸ் ஜெயக்குமார் அவர்கள் இனங்கண்டார்.

எனவே டாக்டர் அவர்களின் சிந்தனையில் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஓர் விசேட பயிற்சிப்பாடசாலை வேண்டும் அவர்களையும் சமூக அந்தஸ்துள்ளவர்களாக மாற்ற வேண்டும், பிரச்சனைகளைத்தீர்க்க வேண்டும், பெற்றோர் மன நிலையில் ஓர் சாந்தி சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற ஓர் உயர்ந்த எண்ணம் அவருடைய சிந்தனைகளில் உருவாகிக் கொண்டே இருந்தது.

அவரது சிந்தனையின் கருவூலமாக அன்புப்பணி சகோதரர்களின் சபை அதியுயர் மேலாளர் அருட் கலாநிதி றெனே ஸ்றொக்மன் (Superior General, Very Rev. Bro. Dr. Rene Stockman) அவர்கள் மட்டக்களப்புக்கு வருகை தந்த போது இவற்றைப்பற்றி கலந்துரையாடப்பட்டது. இவர் உளநலத்துறையில் பாண்டித்தியம்... 15

## 01 பத்திரிகையாளர்களுக்கு...

தனக்கு புரியாத சூழல்களில் கூட இருளில் தடுமாற்றமின்றி நடக்கவும், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டவர்களையும், ஒப்படைக்கப்பட்ட பணிகளையும் பொறுப்புடன் வழிநடத்தவும் புனித யோசேப்பு நமக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாக உள்ளார் என கூறினார்.

சமூகத் தொடர்புத் துறை என்பது உண்மை, அழகு, பொதுநலன் போன்றவைகளை நோக்கி திரும்பியதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்திய திருத்தந்தை இன்றைய உலகில் மிக வேகமான, அதே வேளை மேலோட்டமான கலாச்சாரப் போக்கை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இது கவலைக்கிடமான ஒரு விடயமாகும். நாம் மற்றவர்களுக்கு செவிமடுக்கத் தொடங்கும்போது அங்கு கலந்துரையாடல் பிறக்கிறது. இந்த கலந்துரையாடலே அச்சத்தையும், சந்தேகங்களையும் போக்கி உறவுகளை வளர்க்கிறது என்று கூறினார்.

மேலும் திருத்தந்தை தொழிலாளர் தினமான வைகாசி முதலாம் திகதியன்று புனித யோசேப்பைக் குறித்து தனது டுவிட்டர் செய்தியில் "தொழில் என்பது மனித மாண்பின் அடிப்படைக் கூறு என்பதை மறக்காமல், தொழிலாளரான புனித யோசேப்பின் விழாவை நாம் சிறப்பிக்கின்றோம்" என்றும் வைகாசி மாதம் முழுவதும் அமைதிக்காக செபமாலை செபிக்குமாறும் அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

## 01 கத்தோலிக்கர்களாகிய...

தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று மதங்களைக் குறித்து கவனம் செலுத்த வேண்டிய காலப்பகுதியாக இருக்கின்றது. நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு மதக் கோட்பாடுகள் அவசியம். அவைகள் மூலம் தீர்வு காணுவது சாலச் சிறந்தது. நாட்டில் நிலவும் மதச் செயற்பாடுகளுக்கான எதிர்பார்ப்புக்களின் போதும், விரோதங்களின் போதும், கத்தோலிக்கர்களாகிய நாம் முன்மாதிரிகையானவர்களாக அனைத்து மதத்தவர்களோடும் ஒற்றுமையாக கைகோர்த்து வாழத் தயாராக இருக்கின்றோம்.

## 01 கருக்கலைப்பு...

கலந்து கொள்ளலாம். 13ம் திகதி கருத்தமர்வானது பாடசாலை செல்லும் தரம் 10 - 12 வரையான மாணவர்களுக்கானது. 13.05.2018 அன்று காலை 8.45 மணிக்கு கொழும்பு 13, புனித அன்னம்மாள் மகளீர் பாடசாலையில் நடைபெறும். மாணவ மாணவிகள் இதில் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு 0777983981

**தகவல் : பீற்றர் ரொபின்சன், மறையாசிரியர்.**

# அமைதி தரும் நன்மைகள்:

உடல் வலி, மன வலியினை நீக்கி விடும். உயர் சக்திகளுடன் தொடர்பு கொள்ளச் செய்யும்.

- நம்பிக்கை தரும். தன்னைத் தானே நம்ப வைக்கும். உங்கள் உள் குரலினை கேட்க வைக்கும். பல புதிர்களுக்கு விடை உங்கள் மவுனம் கொடுக்கும். உங்களுக்கு நீங்களே தலைவராவீர்கள்.
- அமைதியும், மவுனமும் உடலுக்கு ஆழ்ந்த ஓய்வு தரும். உடலில் இருக்கும் தேவையில்லாத வேகம், படபடப்பு நீங்கும். பக்குவம் கொண்டு வரும். மனம் அலைபாயாத நிலையை கொண்டு வரும்.
- உங்கள் உள்ளுணர்வோடு இணைத்து உங்களை வாழ வைக்கும்.
- பிற விடையங்களை கேட்கும் ஆற்றலை அதிகரிக்கும்.
- ரத்தக் கொதிப்பினை குறைக்கும். ரத்தக் கொதிப்பு இருப்பவர்களை நீங்கள் கவனித்தால் சிறிய விடையத்தில் அதிக படபடப்பு உடையவராக இருப்பார்கள்.
- வாழ்க்கையின் சவால்களை திறமையாய் சமாளிக்க வைக்கும்.
- அமைதியாய் இருப்பவருக்கு நோய் எதிர்ப்பு சக்தி கூடும்.
- மன மகிழ்ச்சி தரும்.
- மூளையின் செயல் திறன் கூடும்.
- கவனிக்கும் திறன் கூடும்.
- உடல் சக்தி கூடும். மனோ சக்தி கூடும்.
- தினம் 30 நிமிடம் அமைதியாய் இருப்பது ஒருவரது ஆயுளை நீட்டிக்கும்.
- ஒருவரின் மன உளைச்சலை நீக்கும்.
- ரத்த நாளங்கள் இறுகாது, அடைபடாது.

## 14 தீரணியம்....

பெற்ற அனுபவசாலியாவார். சபையின் அப்போஸ்தலிக்க பணியும் இவ்வாறானவர்களுக்கே உரியது. ஆராய்ந்து பார்த்து இவ்வாறான பணி அவசியம் தேவை என்பதை உணர்ந்தார். ஆரம்பிப்பதற்கான அனுமதியையும் கொடுத்தார். மட்டக்களப்பு கோவிந்தன் வீதியிலுள்ள அருட்சகோதரர்களின் இல்லத்தில் ஒரு பகுதியிலுள்ள கட்டிடங்களையும் வழங்கினார். பாடசாலை ஆரம்பிப்பதற்கான படிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டன. உளநல மருத்துவர்கள், விரிவுரையாளர்கள், பொது, விசேட வைத்தியர்கள், சிறுவர்நல வைத்தியர்கள், தன்னார்வ தொண்டர் அமைப்புக்கள், அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள், கல்விப்பணிப்பாளர், சமூகசேவை உத்தியோகஸ்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், ஆன்மீகவியளாளர்கள் போன்றோரின் கலந்துரையாடல்கள் இடம்பெற்று, அன்புப்பணி சகோதரர்களின் சபையின் அனுசரணையுடன் அமெரிக்காவிலுள்ள அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் (IMHO – USA) நிதிப்பங்களிப்புடனும், 2017 சித்திரை மாதம் 8ம் திகதி திறந்து வைக்கப்பட்டு இயங்கிவருகின்றது.

ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை வழிநடத்த தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு இந்தியாவில், சென்னை மாற்றுத்திறனாளிகள் கல்லூரியில் ஒருமாத விசேட பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் உள்ளூரிலும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. காலத்துக்கு காலம் தொடருறு பயிற்சியும் (On Going Formation) வழங்கப்படுகின்றது. சென்ற மாதம் யாழ்ப்பாணத்தில் அமெரிக்க அனைத்துலக மருத்துவ நல அமைப்பினால் வழங்கப்பட்ட 5 நாட்கள் வதிவிட செயலமர்விலும் 4 ஆசிரியர்கள் பங்குபற்றி மேலதிக பயிற்சிகளை பெற்றனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெறும் சிறுவர் பராமரிப்பு சிகிச்சை மூலம் இனங்காணப்படுகின்ற மாற்றுத்திறனாளிகள் இப்பாடசாலையில் அனுமதிக்கப்படுவார்கள். இங்கு விசேடமாக பயிற்றப்பட்ட சிகிச்சையாளர்களின் கண்காணிப்பில் வகுப்பறை செயற்பாடுகள் நடைபெறுகின்றன. பேச்சு சிகிச்சையாளர், உடலியக்க சிகிச்சையாளர், உளநல மருத்துவர், சிறுவர் மருத்துவர் என பல்வேறு உடல் இயக்க தேவைக்கேற்ப பயிற்சிகள் வழங்கப்படும்.

விசேட நோக்கமாக முன்னேற்றம் காணப்படும் பிள்ளைகள் விசேட தேவையுடைய ஆசிரிய ஆலோசகர் வழிகாட்டல் மூலம் அண்மையிலுள்ள பாடசாலையில் இணைக்கப்பட்டு கண்காணிக்கப்படுவார்கள். தற்போது மூவர் பாடசாலையில் இணைக்கப்பட்டு, பிற்பகலில் இங்கு பயிற்சிபெற வருகின்றனர். அதேபோன்று பாடசாலையில் இணையமுடியாதவர்கள் வாழ்வாதார தொழிற்பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள். இவ்வாறான இரு மாணவர்கள் புனித வளனார் விசேட தேவை வாழ்வாதார பாடசாலையில் (St Joseph's Special Education Center) இணைந்து பயிற்சி பெறுகின்றனர்.

இப்பாடசாலைக்கு "தீரணியம்" என்ற பெயர் வைப்பதற்கான காரணம் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பிள்ளையைப்பற்றி ஆய்வு செய்தனர். இப்பிள்ளைக்கு "தீரன்" என்ற பெயரைச்சூட்டினர். எனவேதான் இப்பாடசாலைக்கு "தீரணியம்" என்ற பெயரை வைத்திருப்பதோடு ஓட்டிசம் மாற்றுத்திறனாளியாகவரும் பிள்ளைகளுக்கு "தீரணியர்" என்று அன்போடு அழைக்கப்படுகின்றனர்.

ஒரு நேர பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட தீரணியம் தற்போது இரு நேர பாடசாலையாக இயங்கி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. நிலாவெளி தொடக்கம் பொத்துவில் வரையுள்ள பாதிக்கப்பட்ட தீரணியர்கள் இப்பாடசாலையில் பயிற்சிபெற அனுமதி பெற்றனர். எனினும் வதிவிட வசதிகள் இல்லாததினாலும், போக்குவரத்து பிரச்சனையாலும், பொருளாதார துறையில் பின்தங்கி வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்வாதாரம் கொண்ட குடும்பங்களாக வாழ்வதால் பாதிக்கப்பட்டவர்கள் பாடசாலையில் இணைந்து பயிற்சிபெற சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இது ஒரு குறைபாடாக அமைகின்றது.

எனினும் சமூக விழிப்புணர்வு, ஏற்றுக்கொள்ளல், ஆக்கபூர்வமானசெயற்பாடுகளில் ஈடுபடல், தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலம் முன்னேற்றகரமான வழிமுறைகளில் "தீரணியம்" பாடசாலை பாதிக்கப்பட்ட தீரணியர் மாற்றுத்திரனாளிகளுக்கு ஒரு வெளிச்ச வீடாக அமையும் என்பதே எமது நம்பிக்கையாகும்.

**தகவல்: அருட் சகோதுரர் ஸ்ரீபன் மத்தியூ. எப். சி.**

## 02 வடகொழும்பு...

பெற்றுக்கொண்டனர் மேற்பிரிவில் முதலாம் இடத்தினை மட்டக்குளி புனித மரியாள் மறைப்பாடசாலை மாணவியும், இரண்டாம் இடத்தினை செக்கடித்தெரு புனித அன்னம்மாள் மறைப்பாடசாலை மாணவியும், மூன்றாம் இடத்தினை புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா மறைப்பாடசாலை மாணவியும் பெற்றுக்கொண்டனர். இவர்களைப் படத்தில் காணலாம்.

**தகவல் : திருமதி. ராணி ராசையா, வட்டார பொறுப்பாளர்.**

## வீடு வாடகை - பொரலஸ்கமுவ

கொழும்பு பிலியந்தலை பிரதான வீதியில் அமையப்பெற்ற கீழ் மாடி வீடு ஒன்று வாடகைக்கு உள்ளது. மனை பற்றிய விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். 0719891307, 0779300942

(N 0424)

## 11 இளையோரின் வழிகாட்டி...

நாட்டின் இளைஞர்களே. நாட்டின் பிரச்சினைகளின் தீர்வுக்கு பலரின் குரலாக இருப்பது "இளைஞனே நீ விழித்தெழு" என்பதாகும். வாழ்வின் உண்மைத்தன்மை இது. எனவே இன்றைய சூழலில் இளையோருக்கு வழிகாட்டுவது என்பது சவாலாகும். இவர்களுக்கான சரியான வழிகாட்டி "இயேசு" மட்டுமே. இயேசு ஒரு சாதனை இளைஞன். 33 வயதில் சாதனை படைத்தார். தனக்கென்று ஒரு வழி அமைத்தார். எல்லோருக்கும் "Supreme Model" ஆனார். அவருடைய வழிகாட்டலில் பயணிக்கும் இளையோர் என்றும் தடம் புரண்டு செல்வதில்லை. எனவே இயேசுவின் வழி பயணிப்போம். இளையோரே சமூக அநீதிக்கெதிராக எம் வாழ்வை திசை திருப்புவோம். எம்மோடு என்றும் சாதனை இளைஞன் இயேசு பயணிக்கின்றார். அவரோடு செல்வோம் உலகை வெல்வோம்.

***"இளைஞனே நீ விழித்தெழு"***

**சகோ. டிலோய்ட்சன் பர்னாந்து, தேசிய குருமடம், கண்டி**

## XX கடவுள் தந்த அழகிய...

மரணத்தை பற்றியும், தற்கொலை செய்வது பற்றியும் அடிக்கடி பேசுவர். யாரவது அடிக்கடி தற்கொலை செய்வது பற்றி பேசிக்கொண்டிருந்தால் அந்த நபர் தற்கொலை செய்யும் மனநிலையுடன் இருக்கின்றார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

**நம்பிக்கையற்று காணப்படுதல்.** மற்றவர்களுடன் பேசும் பொழுது நம்பிக்கை இழந்து பேசுவர் இதில் எனக்கு நம்பிக்கையில்லை. வாழ்ந்து ஒரு பிரியோசனம் ஒன்றுமில்லை. என்னத்தை சாதித்து விட்டோம் என்று நம்பிக்கை இழந்த வசனங்களை அடிக்கடி பேசுவர்.

**தற்கொலை பற்றிய வீடியோக்கள் பார்த்தல்** எவ்வாறு தற்கொலை செய்வது என்று ஆராய்தல். இப்படியான நபர்கள் கத்தி, துப்பாக்கி, கூரிய ஆயுதம், கயிறு, நஞ்சு குப்பி இப்படியான பொருட்களோடு காணப்பட்டால் இவர் தற்கொலை செய்வதற்கு தயாராக இருக்கிறார் என ஊகிக்க முடியும்.

இனி தற்கொலை செய்ய முயற்சி செய்பவரை எவ்வாறு மனமாற்றுவது எவ்வாறு அவர்களை உயிராபத்தில் இருந்து பாதுகாப்பது என்று பார்ப்போம். தற்கொலை செய்யும் எண்ணத்தில் இருப்பவர்களை காப்பாற்றுவதற்கான முதல் வாக்கியம் எதுவென்றால் அவர்கள் கருத்துக்களுக்கு செவிமடுத்தல். அவர்கள் கருத்துக்களுக்கு மதிப்பளித்து செவிகொடுங்கள். அவர்களின் கவலைகள், துன்பங்கள், அனுபவங்களை உங்களிடம் கொட்டி தீர்க்க விரும்பலாம். அதனை செவிமடுங்கள். அவர்கள் மனதில் உள்ள கோபத்தை உங்களிடம் கொட்டி தீர்க்கட்டும். உங்களுக்காக நான் இருக்கிறேன் ஆகவே கவலைப்படவேண்டாம் என நம்பிக்கை ஊட்டுங்கள். உங்கள் மேல் நம்பிக்கை அதிகரிக்கும் போது தங்கள் மனத்துயரங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வார்கள் இது அவர்களுக்கு நிம்மதி அளிக்கும். அவர்களுடன் அன்பாக பரிவுடன் பேசுங்கள். அவர்களின் கேள்விகளுக்கு உடனடியாக பதிலளிப்பதையோ தர்க்க ரீதியாக பதிலளிப்பதையோ கோபத்துடன் பதிலளிப்பதையோ தவிருங்கள். ஏனென்றால் இப்படியான சந்தர்ப்பங்களில் அவர்கள் சமயோசித புத்தி மந்தமாக காணப்படும். மனதில் படுவதை உடனே செய்து விடுவர்கள். (The person is probably suffering from a chemical imbalance in the brain and is thus extremely sensitive.) ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம் என்பது உண்மையே. ஆகவே இவர்களுடன் மிகவும் விவேகமாக நடந்து கொள்ளுங்கள். வாழ்வதற்கு எவ்வளவோ நிறைய வழிகள் உண்டு என்பதையும் சவால் என்ற வார்த்தைக்குள்ளே தான் வாசல் என வார்த்தை மறைந்திருக்கிறது என்பதையும் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களிலேதான் உங்கள் எதிர்காலத்திற்கான வாசல்கள் திறக்கின்றன என்று தைரியப்படுத்துங்கள். இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்று அறிவுரை கூறுங்கள். நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அடியும் ஒவ்வொரு பகுதியிலும் கவனமாக வலது புறம் - இடது புறம் விலகாமல் நடக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக காணப்படும். நாம் ஜெயிக்க பிறந்தவர்கள் என்று கூறுங்கள். தற்கொலை நமக்குக் கிடைக்கும் விடுதலை அல்ல, மாறாக நாம் நமக்கு அளிக்கும் தண்டனை என்று புரிய வையுங்கள். இறுதியாக என் நண்பனே! நண்பியே! தற்கொலை செய்வது கோழைத்தனம் என்று சொன்னாலும் அதற்குத்தான் நிறைய தைரியம் வேண்டும் அந்த ஒட்டு மொத்த தைரியத்தையும் வாழ்வதில் காட்டி நிறைய சாதிக்கலாமே. வா நண்பா சேர்ந்தே சாதிக்கலாம்.

**நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். –இயேசு–**

**எதுவரை வாழ்க்கை அழைக்கிறதோ அதுவரை நாமும் சென்றிடுவோம்.**

**விடைபெறும் நேரம் வரும் போது சிரிப்பினில் நன்றி சொல்லிடுவோம்**

**எழுத்துருவாக்கம் : சகோ. அ. அன்ரன் ஞானராஜ் றெவல், SDB**

# மிளகு சாப்பிட்டால் மூலநோய் குணமாகும்!



நமக்கு அருகில், எளிதில் கிடைக்க கூடிய மூலிகைகள், இல்லத்தில் உள்ள உணவுப் பொருட்களை கொண்டு பயனுள்ள பக்கவிளைவில்லாத மருத்துவத்தை பார்த்து வருகிறோம். அந்தவகையில், வயிற்றுக் கோளாறுகளைச் சரிசெய்ய கூடியதும், தோல்நோய்களை போக்கவல்லதும், மூலநோயை குணப்படுத்தும் தன்மை கொண்டதுமான மிளகின் மருத்துவ குணங்கள் குறித்துப் பார்ப்போமா?

“10 மிளகு இருந்தால் பகைவன் வீட்டு பந்தியிலும் அமரலாம்” என்று கூறும் அளவுக்கு மிளகு பல்வேறு நன்மைகளை உள்ளடக்கியது. மிளகு காரச் சுவை கொண்டது. இது, பசியின்மை, குமட்டல், வாந்தி, உடல் வலி, காய்ச்சல், மாதவிலக்கு போன்ற பிரச்சினைகளுக்கு மருந்தாகிறது. இரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது.

மிளகைப் பயன்படுத்தி செரிமான கோளாறு, வயறுமாந்த பிரச்சினைக்கான மருந்து தயாரிக்கலாம். ஒரு பாத்திரத்தில் சிறிது மிளகுப் பொடி, பெருங்காயப் பொடி, சுக்கு பொடி, திப்லி பொடி, சோம்புதூள், சமையல் உப்பு ஆகியவற்றை சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி வெறும் வயிற்றில் குடித்துவர வயிற்று கோளாறுகள் சரியாகும். பசியை தூண்டும். இது பித்த சமனியாக விளங்குகிறது. மாந்தத்தால் ஏற்படும் கழிச்சலை குணமாக்குகிறது.

மிளகு பூஞ்சை காளான்களை போக்கும் தன்மை உடையது. நுண்கிருமிகளை அளிக்கும். வயிற்றில் இருக்கும் வாயுவை வெளித்தள்ளக் கூடியது. வலியை போக்க கூடியது. வயிற்று வலி, சிறுநீர்பாதையில் ஏற்படும் வலி, மார்பு வலி போன்றவற்றை குணப்படுத்தும். சுக்கு, மிளகு, திப்லி ஆகியவை சேர்ந்தது திரிகடுகம் என்று அழைக்கப்படுகிறது. இது, மருத்துவத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

நெஞ்சு, இதயத்துக்கு சுக்கு பலம் கொடுக்கிறது. செரிமானத்தை சீர் செய்கிறது. தலைபாரத்தை குறைக்கிறது. மிளகை பயன்படுத்தி மூலநோய்க்கான மருந்து தயாரிக்கலாம்.




**தேவையான பொருட்கள்:** மிளகுப் பொடி, சோம்பு பொடி, தேன்.

**செய்முறை:** கால் ஸ்பூன் மிளகுப் பொடி, ஒரு ஸ்பூன் சோம்பு பொடி ஆகியவற்றை கலந்து, இதனுடன் சிறிது நீர்விட்டு வேக வைத்து தேன் சேர்த்து கலக்கவும். இதை ஆறவைத்து காலை, மாலை என இருவேளையும் ஒரு ஸ்பூன் சாப்பிட்டுவர மூலநோய் குணமாகும். இரத்த, வெளி, உள் மூலத்துக்கு இது நல்ல பலன் கொடுக்கும்.

மிளகைப் பயன்படுத்தி புழுவெட்டுக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்:** சின்ன வெங்காயம், உப்பு, மிளகுப்பொடி.

**செய்முறை:** ஒரு பாத்திரத்தில் சின்ன வெங்காய சாறு எடுக்கவும். இதனுடன் சிறிது உப்பு, மிளகுப்பொடி சேர்த்து கலந்து புழுவெட்டு இருக்கும் இடத்தில் பஞ்சால் நனைத்து தேய்த்துவர புழுவெட்டு சரியாகும். புழுவெட்டால் முடி உதிர்வது நிற்கும்.

அன்றாடம் பயன்பட கூடிய முக்கிய உணவுப்பொருள் மிளகு. இதில் புரதம், மினரல் உள்ளிட்ட சத்துக்கள் உள்ளன. இது தோல்நோய்களை போக்கவல்லது. உணவுக்கு சுவை தரக்கூடியது. மிளகை உணவில் சேர்த்துகொள்வது உடல்நலத்துக்கு நன்மை தரும்.

# உடல் பருமனைக் குறைக்க உகந்த நவீன சிகிச்சை...!



“நீரிழிவு பிரச்சினை இருக்கிறது. இன்சுலீன் சுரப்பை கட்டுப்படுத்த முடியவில்லை. இரத்த அழுத்தம் பிரச்சினை இருக்கிறது. ஆனாலும் உடலின் எடை கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்கிறது என்றால், இதனை Metabolic Surgery என்ற அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்த இயலும். இவ்வகையிலான அறுவை சிகிச்சைக்கு பின்னர் சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் போன்ற பாதிப்புகள் மறைந்துவிடும். எடையும் கட்டுப்-பாட்டுககுள்ளேயே இருக்கும்.” என்ற தகவல்களை நம்முடன் பகிர்ந்து கொண்டே பேசத் தொடங்குகிறார் டாக்டர் ஜெயபாலாஜி.

இவர் மதுரையில் இயங்கி வரும் சர்வதேச தரமுடைய மதுரை வேலம்மாள் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகளுக்கான உடல் பருமன் சிகிச்சைத்துறையில் சிறப்பு மருத்துவ நிபுணராக பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் அதிக உடல் பருமன் பற்றிய கூடுதல் விபரங்களையும், நவீன மருத்துவ சிகிச்சைகளையும் பற்றி விளக்கம் அளிக்கிறார்.

**உடல் பருமன் ஏற்படுவதன் பின்னணி குறித்து..?**

“உடல் பருமன் என்பது பல்வேறு காரணங்களால் ஏற்படுகிறது. அதிகபடியான உணவு எடுத்துக் கொள்ளுதல், அகால வேளையில் சாப்பிடுதல், பசியில்லாத போதும் சாப்பிடுதல், சத்தற்ற ஆகாரத்தை சாப்பிடுதல், உடல் எடையை அதிகரிக்கக்கூடிய உணவு வகைகளை சாப்பிடுதல், உடல் அசைவுகளை ஏற்படுத்தும் நிலையை முழுவதுமாக புறக்கணித்து ஒரே இடத்தில் பல மணி நேரங்கள் அமர்ந்திருத்தல், உடற்பயிற்சி எதுவுமே செய்யாது இருத்தல், நடைப்பயிற்சிக்கு சந்தர்ப்பமே அளிக்காது இருத்தல் என இந்த பட்டியல் நீண்டுக் கொண்டு செல்லும்.

ஒரு சிலருக்கு மரபியல் அடிப்படையிலான காரணங்களாலும் இப்பிரச்சினை எழும். மேலும் இன்றைய காலகட்டத்தில், தவறான வாழ்க்கை முறை அதாவது ஒழுங்கற்ற உணவு பழக்கவழக்கங்கள், அதிக கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளுதல், இனிப்பு வகைகள், சாக்லெட்டுகள், பீட்ஸா, பர்கர் போன்ற துரித உணவுகளை தொடர்ந்து எடுத்துக் கொள்ளுதல், மதிய நேரங்களில் வழமையாக தூக்கம் கொள்வது போன்ற இதர காரணங்களாலும் உடல் பருமன் ஒருவருக்கு உண்டாகின்றது.

ஒரு சில நிகழ்வுகளில் மரபணு சம்பந்தப்பட்ட காரணங்களில், உடல் சுரப்பிகளில் ஏற்படும் கோளாறுகள், தொடர் மருந்துகள் எடுத்துக் கொள்ளுதல், வேலை அல்லது குடும்ப நிமித்தம், அதிகப்படியான மன அழுத்தத்திற்கு ஆளாவது ஆகிய காரணங்களாலும் உடல் பருமன் தோன்றக் கூடும். இத்தருணத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். அதிக உடல் பருமன் கொண்டவர்கள் குறைவாகவே சாப்பிட்டாலும் குறைவான வளர்ச்சியின் காரணமாக (Slow metabolism) எடை கூடவே செய்கின்றது என்கின்ற வாதம் ஏற்றுக் கொள்ளத்-தக்கதல்ல. இதனை மருத்துவ ரீதியாக இன்னும் முழுமையாக நிருபிக்கப்படவில்லை.”

**அதிகப்படியான உடல் பருமன் காரணமாக ஒருவருக்கு ஏற்படக்கூடிய உடல் உபாதைகள் பற்றி..?**

“அதிக உடல் பருமனானது, இருதய நோய், இரண்டாம் நிலை சர்க்கரை நோய், தூக்கமின்மை, சில வகைப்பட்ட புற்று நோய்கள், கீல்வாதம், மன அழுத்தம் போன்ற பல்வேறு நோய்கள் வருவதற்கான சாத்தியக்-கூறுகளை உருவாக்கி விடுகின்றது. இதைத் தவிரவும் சில நிகழ்வுகளில், உடல் பருமன் அதிகம் கொண்டோருக்கு இரத்தக் கொதிப்பு, மூளை சம்பந்தப்பட்ட நோய்கள், பக்கவாதம், மலட்டுத்தன்மை ஆகிய நோய்களும் தோன்றுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன.”

**உடல் பருமனை குறைப்பதற்கு நவீன மருத்துவ சிகிச்சை முறைகள் குறித்து,,?**

“சாதாரண மருத்துவ அணுகுமுறைகளான உணவு கட்டுப்பாடு, மருந்துகள், உடற்பயிற்சிகள் ஆகியவை நோயாளர்களுக்கு சரியான பலனைத் தராத போது சில விசேஷ மருத்துவ முறைகளும் உடல் எடையை குறைப்பதற்கு கையாளப்படுகின்றன. அவற்றில் ஒன்று தான் “கேஸ்ட்ரிக் பலூன்” அறுவை சிகிச்சை முறை. இந்த முறையின் மூலமாக வயிற்றின் அளவை அறுவைச் சிகிச்சையின் மூலமாக குறைத்துக் கொள்ள முடியும் அல்லது குடலின் நீளத்தை அறுவைச் சிகிச்சையின் மூலமாக வேண்டிய அளவுக்கு சிறிதாக்கி கொள்ள முடியும். இதனால் நோயாளர் எடுத்துக் கொள்ளும் உணவின் அளவும் மிகப் பெரிய அளவில் குறைக்கப்படுகின்றது.

உலகம் முழுவதிலும் உள்ள உடல் பருமன் உடையோர், பெரியோர், குழந்தைகள் அதிநவீன சிகிச்சைகளின் மூலமாக அபாய கட்டத்திலிருந்து காப்பாற்றப்படுவதோடு இறப்பிலிருந்தும் மீட்கப்பட்டு வருகின்றார்கள்.”

# கேரட் ஜுஸ் அருந்துங்க...! கண்களைப் பலப்படுத்துங்க...



நமக்கு எளிதில், அருகில் கிடைக்க கூடிய மூலிகைகள், வீட்டில் உள்ள உணவுப்பொருட்களை கொண்டு பாதுகாப்பான பக்கவிளைவில்லாத எளிய மருத்துவத்தை பார்த்துக் கொள்ளலாம்.

அந்தவகையில், கேரட்டின் மருத்துவ குணங்களை பற்றி பார்க்கலாம். பல்வேறு நன்மைகளைக் கொண்டது கேரட். நோய் எதிர்ப்பு சக்திமிக்க இதில் பொட்டாசியம், வைட்டமின் ஏ,பி,சி உள்ளிட்ட சத்துக்கள் உள்ளன.

கண்கள், எலும்புகளுக்கு பலம் கொடுக்க கூடியது கேரட். இதயத்துக்கு இதமான சூழலைத் தருகிறத் உள்உறுப்புகளை நன்றாக செயல்பட வைக்கிறத் கேரட் சாப்பிடுவதன் மூலம் மூளைக்கு தேவையான ஆக்சிஜன் கிடைக்கிறது. ஞாபக சக்தி அதிகரிக்கிறது. சிறுநீரை வெளியேற்றக் கூடியது. உடல் எடையை குறைக்க கூடிய கேரட், சிறுநீரக கற்கள், நச்சுக்களை வெளியேற்றும் தன்மை கொண்டது.

கேரட்டை பயன்படுத்தி கண்களுக்கு பலம் கொடுக்க கூடிய மருந்து தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்:** கேரட், தேங்காய் பால், வெல்லம், ஏலக்காய்.

**செய்முறை**: கேரட் சாறுடன் தேங்காய்ப் பால் சேர்க்கவும். இதனுடன் வெல்லம், ஏலக்காய் சேர்த்து காலையில் சாப்பிட்டுவர கண்கள் பலம்பெறும். கண் நரம்புகளில் இரத்த ஓட்டம் சீராக இருக்கும். பார்வை தெளிவாகும். எலும்புகள் பலம் பெறும். தோலுக்கு நன்மை தரும்.

கேரட்டை கொண்டு வாய், வயிற்று புண்களை ஆற்றும் மருந்து தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்:** கேரட், மோர்.

**செய்முறை:** கேரட் சாறுடன் சம அளவு மோர் சேர்த்து, காலை வேளையில் வெறும் வயிற்றில் குடித்துவர வாய், வயிற்று புண்கள் ஆறும். இரத்தத்தில் யூரிக் அமிலம் அதிகமாகும்போது மூட்டுவலி ஏற்படும். இப்பிரச்சினைக்கு கேரட் சாறு மருந்தாகிறது. உள் உறுப்புகளில் ஏற்படும் வலி, வீக்கம், புண்களை ஆற்றும்.

கேரட்டைக் கொண்டு கல்லீரலைப் பலப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்:** நல்லெண்ணெய், கேரட், மஞ்சள், சீரகம்.

**செய்முறை:** ஒரு பாத்திரத்தில் சிறிது நல்லெண்ணெய் விடவும். இதனுடன் கேரட் பசை, சிறிது மஞ்சள் பொடி, அரை ஸ்பூன் சீரகம் சேர்த்து நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வாரம் இருமுறை குடித்துவர ஈரல் வீக்கம் வற்றிப்போகும். ஈரல் பலப்படும். மஞ்சள் காமாலையை குணப்படுத்தும். இதய படபடப்பை போக்கும். கல்லீரல் பாதிப்பு உள்ளவர்கள் உப்பு சேர்க்காமல் எடுக்கவும்.

கேரட்டை கொண்டு சிராய்ப்பு காயங்களுக்கான மருந்து தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்:** தேங்காய் எண்ணெய், கேரட்.

**செய்முறை:** ஒரு பாத்திரத்தில் தேய்காய் எண்ணெய் எடுக்கவும். இதனுடன் கேரட் பசை சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சி சிராய்ப்பு காயங்கள் மீது போட்டுவர காயம் குணமாகும். தழும்புகள், தீக்காயம் சரியாகும். கேரட்டை அடிக்கடி சாப்பிட்டுவர கண்கள், தோல், எலும்பு, ஈரல், இதயம் ஆகியவை பலப்படும் என்பதில் ஐயமில்லை.

# வரம் தரும் வளன்!



விவிலியத்தில் எதுவுமே பேசாதவர். அதிகமாகப் பேசப்படாதவர். ஆனால், ‘கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து, சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு’ என்ற குறள் வரிகளுக்கேற்ப, நன்மையை வாழ்வாய், தன் கடமையாய் ஆற்றி சான்றாண்மையாளராக வாழ்ந்து, நீதிமான் என்ற ஒற்றைச் சொல்லில் ஓராயிரம் கருத்துக்களைப் பதிந்தவர்.

இறைவனின் மீட்புத் திட்டத்தின் மறைபொருள் அன்னை மரியாவின் உதரத்தில் வளர்ந்து வருவதை இறைவனால் உணர்த்தப்பட்டதும், இசைவுடன் இணங்கி, மரியாவை இன்முகத்தோடு ஏற்றுக் கொண்டவர், மரியாவைக் காட்டிக் கொடுக்காமல் அதேசமயம் சட்டத்தைக் கடைப்பிடிப்பவராகவும், நீதிக்குப் பாதுகாவலராகவும் இருக்கின்றார்.

கன்னி மரியாவின் கணவர், இயேசுவின் வளர்ப்புத் தந்தை, பாரம்பரிய கிறிஸ்தவர்களின் மிகப்பெரிய புனிதர், பெருந் தந்தையர்களில் ஒருவர், தாவீது அரசரின் வழிமரபில் தோன்றியவர், ஏலி என்கிற யாக்கோபின் மகனாக நாசரேத்தில் வாழ்ந்தவர். என்ற பெருமைகளுக்குச் சொந்தக்காரர்தான் புனித யோசேப்பு.

திருக்குடும்பத்தின் பாதுகாவலராக இயேசு பெத்லகேமில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த போதும், எருசலேம் தேவாலயம் சென்ற நேரத்திலும் இயேசுவைக் கொல்லத் தேடிய ஏரோதிடமிருந்து குழந்தையைக் காப்பாற்ற எகிப்திற்கு ஓடிச்சென்றபோதும், இயேசுவின் பன்னிரண்டாவது வயதில் எருசலேம் சென்றபோதும், கோவிலில் தங்கிவிட்ட இயேசுவைக் காணாமல் தேடி அலைந்த போதும், கணடுபிடித்ததும் ஒரு வார்த்தைகூட பேசாமல் இறைச் சித்தத்திற்கு இசைந்து நின்றபோதும் அவரது அமைதியும், மௌனமுமே அவரது நற்குணங்களை பறைசாற்றுகின்றன.

இன்னும் இவர் மரியாவுக்கு நல்ல கணவர், இயேசுவுக்கு நல்ல தந்தை, சிறந்த வாய்மையாளர், பொறுமையின் சிகரம், அகில உலகத் திருச்சபைக்கும் பாதுகாவலர், கல்வி, கற்பு, திருமணம், குடும்பங்கள், தொழிலாளர்கள், நல்ல மரணம் ஆகிய அனைத்திற்கும் பாதுகாவலர் புனித யோசேப்பு!

இத்தனை பெருமைகளை உள்ளடக்கியவர் பற்றி விவிலியத்தில் பேசவில்லையே தவிர, மேற்சொன்ன அத்தனையையும் வாழ்ந்து காட்டியவர். ஒரு வார்த்தைகூட பேச வேண்டிய அவசியம் இல்லாதபடி ஆண்டவரோடும், அன்னை மரியாவோடும் இறையனுபவத்தில் நிறைந்திருந்தார் என்றே சொல்ல வேண்டும்.

அதனால்தான் நம் திருச்சபை புனித யோசேப்புவுக்கு மட்டும் இரண்டு விழாக்களை ஒரு வருடத்தில் கொண்டாடி வருகின்றது.

**ஒன்று, பங்குனி 19 – புனித யோசேப்பு கன்னிமரியாவின் கணவர்,**

**இரண்டு, வைகாசி 1 – புனித யோசேப்பு தொழிலாளர்களின் பாதுகாவலர்.**

உழைப்பைப் பரிசுத்தப்படுத்தவும், உழைக்கிறவர்களுக்கு ஒரு மேல்வரிச் சட்டத்தைக் கொடுக்கவும் அவர்களுக்கு ஒரு பரலோகப் பாதுகாவலரை கொடுக்கவும் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர், 1955இல் வைகாசி 1ம் திகதி தொழிலாளர்கள் தினத்தன்று தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையின் திருவிழாவையும் இணைத்துச் சிறப்பிக்குமாறு அறிவித்தார். அன்று முதல் மே தினம் உழைப்பாளர்களின் தினமாகவும், அவர்களது பாதுகாவலரான புனித சூசையின் தினமாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இது குறித்த விளக்கம் தேம்பாவணி போன்ற காப்பியங்களிலும் காணப்படுகின்றன.

இங்ஙனம் நீதி, நேர்மை, பொறுமை, கீழ்ப்படிதல், உழைப்பின் மகத்துவம், கற்புநெறி தவறாமை போன்றவற்றில் பழைய ஏற்பாட்டு சூசையோடு புனித யோசேப்பு ஒப்பிடப்படுவதில் வியப்பொன்றும் இல்லை.

எனவே, அவர் வழியாக நாமும் அவரது அத்தனை புண்ணியங்களையும் கண்டு பாவித்து இறைவனின் மகிமையில் இணைந்து வாழவும், வாழ்க்கையில் தேவையற்ற பேச்சுக்களுக்கு இடம் கொடுக்காமல், ஆண்டவரோடும், அன்னை மரியாவோடும் இறையனுபவத்தில் நிறைந்து, பிறருக்கு எடுத்துக்காட்டான வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வரம்கேட்டு புனித வளனாரிடம் மன்றாடுவோம்.

மேலும், நற்படிப்பிற்குப் பாதுகாவலரான புனித சூசையிடம் நம் பிள்ளைகளின் வேண்டுதல்களைச் சமர்ப்பிப்போம்.

இயேசுவை ஞானத்திலும், அறிவிலும் வளர்த்தெடுதவர் நம் பிள்ளைகட்கும் ஞானமும், அறிவும், ஞாபக சக்தியையும் தந்து, தேர்வுகளை நன்முறையில் எழுத உதவுவார் என்பதில் ஐயமில்லை.

மேலும் “அவரிடம் இரந்து கேட்டதை எவரும் அடையாமல் போனதில்லை” என்று புனித தெரசம்மாள் கூறியதையும் நினைத்து நம் குடும்பங்களை அந்த வரம் தரும் வளனாரிடம் சமர்ப்பிப்போம்.

---

# செபமாலை

**“நம் காலத்தின் தீமைகளை வெல்வதற்கு செபமாலைமீது தான் முழு நம்பிக்கை வைக்கிறோம் என்பதை வெளிப்படையாக அறிவிப்பதில் நமக்கு எந்த தயக்கமும் இல்லை”**

**திருத்தந்தை புனித 23ம் யோவான்**



**“செபமாலை நன்றாகச் செபிக்கப்படும்போது அது அன்னை மரியாவுக்கும், ஆண்டவர் இயேசுவுக்கும் மிகுந்த மகிமையைக் கொடுக்கிறது. அது மற்ற எல்லா செபங்களையும் விட மிகுந்த பலன் தரக்கூடிய செபமாகும்”**

**புனித லூயிஸ் தே மாண்போர்ட்**

**மரியாவின் பார்வையில் இயேசுவைப் பார்க்க செபமாலை நமக்கு உதவுகிறது. இதுவே சிறந்த காட்சி தியானம். செபமாலை செபிப்பதன் வழியாக இயேசுவின் பொறுமை அமைதி, மற்றும் மகிழ்ச்சியை நாம் பெறுகின்றோம்.**

**திருத்தந்தை 6ம் பவுல்**

**செபமாலை செபிக்கும்போது தமது மனக்கண் முன்பே இயேசு கிறிஸ்துவின் வரலாற்று நிகழ்வுகள் கடந்து செல்கின்றன.**

**திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல்**

---

# அம்மா

**உன் முதல் சிரிப்பையும்**

**உன் முதல் அழுகையையும்**

**இரசித்த முதல் ரசிகை**

**அம்மா**



## யாழ் / நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி. பவளவிழா – 2018

1943-03-01 இல் ஆரம்பித்த பெண்கள் வித்தியாலயம் பற்பல உயர்ச்சிபெற்று இன்று பெண்கள் கல்லூரியாக பர்ணமித்து 75 ஆண்டுகள் நிறைவடைந்து எதிர்வரும் 2018-06-02 இவ் அதிபர் அருட்சகோதரி மேரி யூடி தலைமையில் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற இருக்கின்றது அன்றைய நிகழ்நிகழ்வில் கல்லூரி கொடியேற்றல், Platinam Jublee special cake cutting, கலை நிகழ்ச்சிகள், வாழ்த்துரைகள், பவளவிழா மலர் வெளியீடு, கௌரவிப்பு, 75வது நிறைவு, 75 சிறிய விளக்குகள் ஏற்றல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி அதிபரின் வழிகாட்டலில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பா. அ. சங்கத்தினர், நலன்விரும்பிகள் மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது.

தகவல்:- பழைய மாணவி A/L 2007/ 2008 Bach

## திருகோணமலை மறைமாட்டத்தில் புதிய ஆலய திறப்பு விழா



2018 சித்திரை மாதம் 21ம் திகதி கோனேசபுரி சாம்பல் தீவு பிரதேசத்தில் புனித மிக்கேல் தேவதூதனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட புதிய ஆலயமானது ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இது திருகோணமலை மறைமாவட்டத்தின் சாம்பல் தீவின் துணைப்பங்காக அமைகின்றது.

## புனித மடுதீனார் சிறிய குருமட மாணவர்களுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி





யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் அமைந்துள்ள புனித மடுதீனார் சிறிய குருமட மாணவர்களுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி 29.04.2018 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித மடுதீனார் குருமட மைதானத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் பிரதம விருந்தினராகவும், புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு திருமகன் அடிகளார் கௌரவ விருந்தினராகவும், ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு.அகஸ்டின் அவர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து நிகழ்வை சிறப்பித்தார்கள். இந்நிகழ்வுகள் குருமட அதிபர் அருட்திரு பாஸ்கரன் அடிகளாரின் தலைமையில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

## மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் 72 வது, தேசியக் கூட்டம்



## மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம்





மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம் 15.04.2018 ஞாயிற்றுக்கிழமை மாலை மருதமடுத் திருத்தாயாரின் திருத்தலத்தில் அமைந்துள்ள தூய மரிய வியான்னி தியான இல்லத்தில் ஆரம்பமாகி 20.04.2018 மாலையில் நிறைவடைந்தது. இத்தியானத்தை நெறிப்படுத்த இந்தியா தமிழ் நாடு இரட்சணிய அருட்பணியாளர் சபையைச் சேர்ந்த அருட்பணி. இக்னேசியஸ் அடிகளார் வருகை தந்திருந்தார். ஆரம்ப இறை வேண்டுதலுடனும், மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி.அ.விக்ரர் சோசை அடிகளாரின் வரவேற்புரையுடனும், மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களின் அறிமுக உரையுடனும், தியான நெறியாளரின் தியானச் சிந்தனையுடனும் ஆரம்பமாகின. இறுதி நாள் நிகழ்வுகள் மன்னார் ஆயர் அவர்களின் திருப்பலியோடு நிறைவுற்றது.



மட்டக்களப்பு, புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலய திருவிழா. திருவிழா திருப்பலி மேதகு. ஆயர் ஜோசப் ஆண்டகை அவர்களார் நிறைவேற்றப்பட்டது.





தேத்தாதீவு, புனித யூதாததேயு திருத்தல திருவிழா. திருவிழா திருப்பலியில் மேதகு. ஆயர் ஜோசப் ஆண்டகை அவர்களார் கலந்துகொண்டார்.





வவுனியா மறைக்கோட்டத்தின் வேப்பங்குளம் தூய யோசேப்பு பங்குச் சமூகம் 01.05.2018 செவ்வாயக் கிழமை தங்கள் பாதுகாவலராம் தூய யோசேப்பு விழாவைக் கொண்டாடிய அதே வேளையில் தங்கள் பங்கிற்கு முதன் முதலாக வருகை தந்த மன்னார் மறைமாவட்ட புதிய ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களுக்கும் மகத்தான வரவேற்பளித்தது. வவுனியா இறம்பைக் குளம் தூய அந்தோனியார் ஆலயத்திலிருந்து வேப்பங்குளம் பங்கைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் உந்துருளி பவனி ஆயரை ஆலயத்திற்குச் செல்லும் மன்னார் வவுனியா பிரதான வீதி வரை அழைத்து வந்தனர். அவ்வித்தில் அருட்பணியாளர்களும், துறவிகளும், பங்கு மக்களும் ஆயரை வரவேற்றனர். தொடர்ந்து மாணவர்களின் மேலைநாட்டு இசைக்கருவிகளின் மகிழ்வொலியோடு ஆயர் அவர்கள் ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்டார். பின்னர் ஆயர் அவர்களின் தலைமையில் திருவிழாக் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு முடிவில் தூய யோசேப்பின் திருவுருவப் பவனியும் நடைபெற்று. புனிதரின் திருவுருவ ஆசீரோடு விழா நிறைவுற்றது.

நன்றி– இணையத்தளம்

# கடவுள் தந்த அழகிய வாழ்வு



அன்பிற்கினிய நண்பர்களே! மீண்டுமொருமுறை நமது ஞான ஒளிபத்திரிகை வழியாக சந்திப்பதில் மகிழ்ச்சி. எங்கு வாழ்ந்தாலும் நமது சிந்தனைகளும் பேச்சுக்களும் நம் தாயகத்தை பற்றியே! ஆகவே எமது தாய்நாட்டில் அடிக்கடி நடைபெறுகின்ற தற்கொலை பற்றி பேசலாம் என என் பேனாமுனைகள் ஆசைப்பட்டன. வாழ்க்கையை சுவைக்கவேண்டிய வயதில் வாழ்க்கையை சிதைக்க முயற்சி செய்து தற்கொலை செய்து கொள்ளும் என் அன்புத்தம்பிகள், தங்கைகள், ஆசைஅக்கா, குட்டிஅண்ணா, நேசமுள்ள அப்பா, பாசமுள்ள அம்மாக்கள் என அனைவரையும் பார்க்கும் போது என் இதயம் அழுகின்றது. இவைகள் இனி நம் மண்ணில் வேண்டாம். முடிந்தவரை இவைகளுக்கு ஒரு முடிவு கட்டுவோம். அதற்கான ஒரு சிறு முயற்சியே இது.

என் அன்புக்குரிய உறவுகளே! ஏனோ தெரியவில்லை இன்று இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தற்கொலை செய்வது என்பது தாகத்திற்கு தண்ணி குடிப்பது போலாகி விட்டது. இதனை எவ்வாறு தடுப்பது? இதனை தடுக்க வேண்டுமென்றால் வாழ்வியல் மதிப்பீடுகள் பற்றிய சரியான விளக்கமும் தற்கொலையை தவிர்த்து வாழ்வை நேசிக்கும் மனப்பக்குவமும் எம்மவர்க்கு வழங்கப்படவேண்டும். முதலில் தற்கொலையை ஏன் கொலை என்கிறோம் என்று பார்த்தால் , இறப்பு அல்லது மரணம் என்பது நாமாக நினைத்து செய்வதில்லை நினையாத நேரத்தில் வருகின்ற வாழ்க்கையின் நியதி தான் மரணம். ஆனால் தற்கொலை என்பது தன்னை தானே கொலை செய்வது என்பதாகும். நமக்குரிய மரணத்தை நாமே நிர்ணயிக்கின்றோம். அதாவது இயற்கை செய்ய வேண்டியதை நாம் பலவந்தமாக செய்ய முயல்கின்றோம். அதனால் தான் இதனை தற்கொலை என்கின்றோம். பொதுவாக இன்றைய சமுதாயத்திலே அநேகமான இளைஞர் யுவதிகள் தற்கொலை செய்வதை காணக்கூடியதாக இருக்கிறது. இதற்கான காரணங்கள் என்னவென்று பார்ப்போமேயானால் மனவிரக்தி, கவலை, காதலினால் ஏற்படும் ஏமாற்றங்கள், தாழ்வு மனப்பான்மை, பாலியல் அல்லது உடல் ரீதியான துன்புறுத்தல்கள், மணமுறிவு, நெருங்கிய நண்பர் அல்லது குடும்ப உறவினரின் திடீர் மரணம், வாழ்வில் திருப்தியின்மை, தோல்விகள், கொடிய நோய்கள், குடும்பப்பிரச்சினை, இப்படி அடுக்கிக்கொண்டு போகலாம். என்னதான் பல்வேறு காரணங்களை முன்வைத்தாலும் ஒரு போதும் தற்கொலையை நியாயப்படுத்த முடியாது. இது வாழ்வியல் ஒழுக்கத்திற்கு எதிரான ஒன்றாகவே இருக்கிறது.

ஏன் தற்கொலை நாளாந்த வாழ்வின் ஒழுக்கவியல் கோட்பாடுகளுக்கு எதிரானது என்று பார்ப்போமேயானால் ஏனென்றால் நமது வாழ்வு அல்லது உயிர் நமக்கு சொந்தமில்லை. மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவரும் பூமிப்பந்தில் வாழ்க்கை நடத்துவதற்கு அனுப்பப்பட்டவர்களே! கடவுள் ஒருவருக்கே நமது உயிரின் மேல் உரிமை இருக்கிறது. இதையே ஒவ்வொரு மதமும் எடுத்தியம்புகின்றன. கிறிஸ்தவ மதத்தில் கடவுள் மனிதனை தன் சாயலாகவும் பாவனையாகவும் படைத்தார் என திருவிவிலியம் சொல்கின்றது. இந்துமதம் பிரஹம்மா படைக்கும் கடவுள் அனைத்தையும் படைத்ததாக கூறுகின்றது. இஸ்லாமிய மதமும் அல்லாஹ் ஒருவனே அனைத்தையும் படைத்ததாக கூறுகின்றது. ஆகவே பொதுவாக மதங்கள் எல்லாமே படைப்பு பற்றிய விடயத்தில் ஒரே கருத்தினையே கொண்டிருக்கின்றது.

ஆம் சிலர் முணுமுணுப்பது எனக்கு விளங்குகின்றது. எங்க அப்பாவும் அம்மாவும் சேர்ந்து என்னை இவ்வுலகிற்கு கொண்டு வந்தார்கள் என்று சொல்லமுடியும். இப்பொழுது எனது கேள்விக்கு வருகின்றேன். உங்களை படைத்தது உங்கள் அம்மாவும் அப்பாவும். அப்படியானால் உங்கள் அம்மாவையும் அப்பாவையும் படைத்தது? உங்கள் அம்மம்மாவும் அப்பப்பாவும். அவர்களை படைத்தது? இப்படியாக கேள்விகளைத் தொடுத்துக்கொண்டு சென்றால் இறுதியாக நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியது ஒன்று உலகின் முதலாவது மனித உயிர்களான ஆணும் பெண்ணும் ஏதோ ஒரு சக்தியாலோ அல்லது முழு உலகத்தின் படைப்பாளியாலோ உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். மதங்கள் இதனை கடவுள் என வகைப்படுத்துகின்றது. ஆகவே நமது வாழ்வின் அல்லது உயிரின் முழு உரிமையும் கடவுளிடம்தான் உள்ளது. அப்படியானால் அம்மாவும் அப்பாவும் யார்? அவர்கள் படைப்பின் விருத்தியாளர்கள் உதவியாளர்கள் என் கூறலாம். கடவுளுடன் இணைந்து படைப்பினை விருத்தியாகும் ஒரு மகத்தான பணியை ஒரு தாயும் தந்தையும் செய்கின்றார்கள். அதாவது ஒரு பெண்ணின் கருப்பையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் முட்டையும் ஒரு ஆணின் விந்தணுவும் இணைகின்றபோது கருக்கட்டல் நடைபெறுகின்றது. இது ஒரு எளிமையான உயிரியல் விளக்கம்.

நண்பர்களே இங்குதான் மிகப்பெரிய படைப்பின் விந்தை இருக்கிறது. என்னதான் மனிதர்கள் இனப்பெருக்கம் செய்தாலும் இது ஆண்குழந்தை அடுத்தது பெண்குழந்தை என்று மனிதனால் தீர்மானிக்க முடியாது. அதனை மனிதனை மிஞ்சிய சக்தியே தீர்மானிக்கின்றது. இந்த சக்தியை மதங்கள் கடவுள் என்கின்றது. சில குடும்பங்களைப் பாருங்கள் கணவன் மனைவியாக வாழ்ந்தும் குழந்தைகள் இன்றி வருத்தப்படுவதை காண்கின்றோம். ஆகவே மனித பிறப்பு என்பது ஒரு மாபெரும் அதிசயம். இன்றும் இது நமது மனித அறிவிற்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாகவே இருக்கிறது. அப்படியானால் ஒரு மனிதனின் பிறப்பை தீர்மானிப்பதே இந்த படைப்புகள் அனைத்தையும் ஆளுகின்ற சக்திதான். (கடவுள்) ஆகவே இந்த தர்க்கரீதியான விளக்கங்களின் படி நமது உயிரின் சொந்தக்காரர் கடவுள் ஒருவரே. அப்படியானால் எனது உயிரை அழிக்கவோ அல்லது அடுத்தவன் உயிரை அழிக்கவோ எனக்கு உரிமை இல்லை. அடுத்தவன் உயிரை நான் அழிக்கும் போது அது கொலை. எனது உயிரை நானே அழிக்க முற்படும்போது அது தற்கொலை ஆகின்றது. அன்பிற்கினியவர்களே! என்னால் இயன்றவரை ஏன் தற்கொலை வாழ்வியல் ஒழுக்க விழுமியங்களுக்கு முரணானது என்று விளக்கி உள்ளேன்.

பொதுவாக தற்கொலை செய்யும் உணர்வு ஒரு நாளில் ஏற்படுகின்ற பிரச்சினையினால் ஏற்படுவது அல்ல. ஒரு இளைஞனோ யுவதியோ வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகளால் மனமுடைந்து தொடர்ச்சியான மனக்கசப்புகளினால் அல்லது கவலையினால் தற்கொலை செய்யலாம். பொதுவாக இப்படியான சந்தர்ப்பங்களில் பொதுவாக ஆண்கள் மதுவிற்கு அடிமையாகி விடுகின்றதனால் தற்கொலை செய்வது குறைவு. பெண்களே கூடுதலாக பாதிக்கப்படுகிறார்கள். அடுத்து காதல், காதல் என்பது இரு மனங்களுக்கிடையிலான அதி உன்னதமான அன்பு பிணைப்பு. சில வேளைகளில் ஒரு ஆண் தனது காதலியால் ஏமாற்றப்படும் போது அல்லது ஒரு பெண் தன் காதலனால் ஏமாற்றப்படும் போது தற்கொலை செய்ய முனைகின்றார்கள். அதாவது என் காதலி அல்லது என் காதலன் எனது அன்பினை உணரவில்லையே எனக்கு நம்பிக்கை துரோகம் செய்து விட்டாளே அல்லது எனக்கு நம்பிக்கை துரோகம் செய்து விட்டானே என எண்ணி வருந்தி இனி வாழ்வதில் என்ன பயன் என்று அவசர முடிவு எடுக்கின்றார்கள். அடுத்தது குடும்பங்கள் விரும்பாத காதல் இதுவும் ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது. சாதி, சமயம், பணம், பதவி, பட்டம் போன்ற காரணத்தினால் காதலர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பி வாழ நினைத்தாலும் குடும்பங்கள் இவர்களை ஒன்று சேர விடுவதில்லை இந்த காரணத்தால் கூட நிறைய இளைஞர் யுவதிகள் தற்கொலை செய்ய முனைகின்றார்கள்.

அடுத்தது குடும்ப கௌரவம் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி பரீட்சை எழுவதற்கு முன்னரே குடும்பத்தினரின் எதிர்பார்ப்புக்கள் அவர்களை தற்கொலை என்னும் வட்டத்திற்குள் தள்ளிவிடுகின்றன. உதாரணத்திற்கு சில தாய்மார்கள் தந்தையர்கள் இப்படி சொல்வதை பார்க்கின்றோம். நீ நல்ல பெறுபேறுகளை எடுக்க வேண்டும். நீ எடுக்காவிடில் வெளியில் என்னால் தலை காட்ட முடியாது. எனது காரியாலயத்தில் தலை காட்ட முடியாது. குடும்ப மானத்தை வாங்கி விடாதே. நல்ல பெறுபேறு எடுக்கவிட்டால் உனக்கு ஒன்றும் வாங்கி தர போவதில்லை என பல்வேறு நிபந்தனைகள் இடப்படுகின்றன. இப்படியான ஒரு சூழ்நிலையில் தான் சில குழந்தைகள் பரீட்சை எழுத செல்கின்றன. ஒருவேளை இந்த குழந்தைகள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எடுக்கா விட்டால் மீண்டும் குடும்பங்களில் பிரச்சினை ஆரம்பித்துவிடும். எனக்கு தெரியும் நீ படிச்ச திறத்திற்கு நீ சித்தியடைய மாட்டாய் என்று. உன்னைய பெற்றதிற்கு ஒரு அரிசி மூட்டையை பிரசவித்திருந்தால் நலமாக இருந்திருக்கும். மாடு கொஞ்சம் வாங்கித்தருகிறோம் போய் அவைகளை மேய் அதற்கு தான் நீ லாயக்கு. இப்படியாக பல்வேறு உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள் நமது சமூகங்களில் நடைபெறுவதை காண்கின்றோம். இப்படியான வேளையில் ஒரு இளைஞனோ யுவதியோ தற்கொலை செய்கின்ற நிலைக்கு தள்ள படுகின்றான்/ள். நான் ஒரு உதவாக்கரை, நான் வாழ்ந்து பிரயோசனம் இல்லை நான் எனது குடும்பத்திற்கு ஒரு சாபக்கேடு என பல்வேறு விதமாக யோசித்து இறுதியில் தன்னை தானே வெறுக்கின்ற நிலைமைக்கு ஆளாகி தற்கொலை செய்து விடுகின்றார்கள். இப்படியாக சிலவேளைகளில் ஒரு இளைஞனின் அல்லது யுவதியின் மரணத்திற்கு அவர்களது பெற்றோர்களே காரண கர்த்தாக்கள் ஆகிவிடுகின்றதை காண்கின்றோம்.

அடுத்து ஒரு இளைஞனோ யுவதியோ தனது அதிக நேரத்தை கழிக்க விரும்புவது தனது சக நண்பர்களுடன் தான். சிலவேளைகளில் ஒரு மாணவனோ மாணவியோ தனது சக மாணவர்களினால் ஏற்றுக்கொள்ளப்படாமல் தனிமைப்படுத்தப்படுவாரானால் தாழ்வு மனப்பான்மை அதிகரித்து தற்கொலை செய்யக்கூடிய நிலை ஏற்படலாம். ஒரு சில வேளைகளில் ஆசிரியர்களும் தற்கொலைக்கு காரணகர்த்தாக்களாக மாற இடமுண்டு. வகுப்பறைகளில் சில மாணவர்களை மற்ற மாணவர்கள் முன்னிலையில் தாழ்த்தி கதைப்பது. தண்டனை கொடுப்பது இவைகளும் ஒரு மாணவரையோ அல்லது மாணவியையோ மன அழுத்தத்திற்கு உள்ளாக்கலாம். இவைகளும் தற்கொலை செய்யும் எண்ணத்தை தூண்டி விடலாம். உதாரணத்திற்கு ஒரு ஆசிரியர் ஒரு மாணவியை பார்த்து இப்படி சொல்கிறார். நீ எல்லாம் எதுக்கு பாடசாலைக்கு வாறியோ தெரியவில்லை மட சாம்பிராணிகள் இங்க வந்து நம்ம உயிரை எடுக்குதுகள். இப்படியான அநாகரிகமான வார்த்தைகள் மாணவர்களை மன அழுத்தத்திற்கு உள்ளாக்கலாம். இப்படியாக தற்கொலைக்கான காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இருந்த போதிலும் நம் அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பிரச்சினைகள். சவால்களுக்கு தற்கொலை-தான் முடிவா? இல்லவே இல்லை. பிரச்சினை பற்றி கதைக்கும்போது தான் நடிகர் விஜய் சுக்ரன் படத்தில் தற்கொலை செய்ய முற்படும் இளைய தம்பதிகளுக்கு சொன்ன புத்திமதி ஞாபகத்திற்கு வருகின்றது. அதனை இங்கே குறிப்பிடுகின்றேன். “உலகத்தில் பிரச்சினை இல்லாதவர்கள் என்று யாருமே இல்லை. பிரச்சினைகளை நாங்கள் தீர்க்க வேண்டும். பிரச்சினைகள் நம்மை தீர்க்கக்கூடாது. சுடுகிறவரைக்கும் தான் நெருப்பு, சுற்றுகின்ற வரைக்கும் தான் பூமி, போராடுகின்ற வரைக்கும் தான் மனிதன், இல்லாட்டி பிணம். நீ மனிதனா? பிணமா எண்டு நீயே முடிவுபண்ணு...” இந்த வசனங்கள் சொல்ல வருகின்ற கருத்து என்னவென்றால் கஷ்டங்கள் பிரச்சினைகள் சவால்கள் இவைகளைக்கண்டு மனம் தளர்ந்து போகக்-கூடாது என்பதே ஆகும்.

இனி தற்கொலை செய்யும் எண்ணங்களுடன் இருப்பவர்களை இனங் காண்பது எப்படி என்று பார்ப்போம். இப்படியான அறிகுறிகளை வைத்து இனங்கண்டு கொள்ளலாம்.

**தொடர்ச்சியான அழுகை.** கலங்கிய கண்களுடனும் முக மலர்ச்சியற்று பொலிவிழந்து காணப்படுவார்கள். எனது இந்த துயரத்தை கேட்க யாரும் வரமாட்டார்களா என்று கலங்கினாலும் ஒருவரிடமும் தங்கள் துயரத்தை பகிரமாட்டார்கள்.

**சமூக நடத்தையில் மாற்றம்.** சிலசமயங்களில் மற்றவர்களுடன் சிரித்து பேசிப்பழகும் ஒருவர் திடீரென நிறுத்திக்கொள்வதோடு ஏனைய நண்பர்களோடு சேர்வதை தவிர்த்துக் கொள்வார். சிலசமயங்களில் தொலைபேசித்தொடர்புகளையும் துண்டித்து சமுகத்தை விட்டு தனியாக இருக்க விரும்புவார்.

**தம்மை அழகுபடுத்தி கொள்வதில் ஆர்வமின்மை.** தற்கொலை செய்யும் மனப்பாங்குடன் வாழ்பவர்கள் தங்களை அழகுபடுத்துவது, உடைகளை அழகாக உடுத்துவது, முகத்தை அழகு படுத்துவது இவைகளில் அக்கறை காட்ட மாட்டார்கள்.

**தன்னைத்தானே அழிக்க முயற்சி செய்தல்.** அதிகமாக மது அருந்துவது, போதைப்பொருள் பாவிப்பது, தங்களைத் தாங்களே காயப்படுத்திக்கொள்வது, வாகனங்களை கவனமில்லாமல் அதிவேகமாக ஓட்டிச்செல்லுதல். இவைகளை குறிப்பிடலாம் அதாவது எதாவது ஒருமுறையில் தங்கள் வாழ்க்கையை முடித்து கொள்ள விரும்புவார்கள்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்




- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்

# திருமண சேவைகள்



பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்













| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |


- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**


| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.





| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |








## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்